REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 6 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

வரு. 91 இல. 132 | Tuesday 06, June, 2023 | 16பக்கங்கள் | 50/-




## பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலம்; 03 தினங்கள் தொடர் பேச்சுவார்த்தை

### நிறுவனங்கள், அமைப்புகளின் யோசனையை பெற தீர்மானம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பான பேச்சுவார்த்தை எதிர்வரும் 14,15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நீதி அமைச்சில் நடைபெறவுள்ளது.

உத்தேச சட்ட மூலம் தொடர்பில் நிறுவனங்கள், அமைப்புகளின் பரிந்துரைகள், கருத்துக்கள் மற்றும் யோசனைகளை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக நீதி அமைச்சர் 06


## உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய HMPV வைரஸ் நாட்டில் பரவல்

### மிகுந்த அவதானமாக இருக்க டாக்டர் அன்வர் எச்சரிக்கை

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உயிராபத்தை ஏற்படுத்தக்கூடிய Human Metapneumovirus வைரஸ் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை, இந்த வைரஸ் பரவல் காணப்படவில்லை. இதனால், சுகாதார அமைச்சும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார். 06



### 'சினொபெக்' 150 நிரப்பு நிலையங்கள் விரைவில்

## QR ஒதுக்கு முறைமையை 02 மாதங்களில் நீக்க முடியும்



எரிபொருளுக்கான QR ஒதுக்கு முறையை இன்னும் இரண்டு மாதங்களில் நீக்க முடியுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

திவுலப்பிட்டி பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலே, அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் எரிபொருள் விலைத்திருத்தம் முன்னெடுக்கப்படுவதால், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மாத இறுதியில் 06

### ரூ.33 பில்லியன் செலவில் 'மிராக்கல் டோம்' கட்டடம்

# போதகர் ஜெரோமிடம் அதிகளவு சொத்துக்கள்


**விசாரணை நடத்தி வெளிக்கொணர சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்த்தன PC உயர் நீதிமன்றில் வாதம்**

**ஜெரோமின் ஆன்மீகத் தலைவராக கருதப்படும் 'ஊபர்ட் ஏஞ்சல்' சிம்பாப்வேயில் நிதி முறைகேடு மற்றும் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர் எனவும் சட்டத்தரணி சுட்டிக்காட்டு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பௌத்த மதம் உட்பட ஏனைய மதங்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துக்களை முன்வைத்துள்ளதாகக் கூறப்படும் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஆன்மீகக் கூட்டங்களை நடத்தும் 'மிராக்கல் டோம்' என்ற கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு 3.3 பில்லியன் ரூபா செலவிட்டுள்ளதாகவும் அந்தளவு பாரிய தொகை அவருக்கு எவ்வாறு கிடைத்துள்ளது என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்த்தன உயர் நீதிமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார்.

அதேபோன்று அவரது ஆன்மீக தலைவராகக் கருதப்படும் 'ஊபர்ட் ஏஞ்சல்' என்பவர் சிம்பாப்வே நாட்டில் நிதி முறைகேடு மற்றும் 06



வட அமெரிக்காவின் பிரதான சங்க நாயக்கர் கலாநிதி அக்க மஹா பண்டித ஹேனேபொல குணரத்ன தேரரின் தேசிய மற்றும் மத செயற்பாடுகளை பாராட்டி விசேட முத்திரையொன்று வெளியிடப்பட்டுள்ளது. அமைச்சர் பந்துல குணவர்தனவின் தலைமையில் இந்த நிகழ்வு ஹோமாகம NSBM பசுமை பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற முத்திரையையும் முதல் நாள் தபால் உறையையும் அமைச்சர் பந்துல குணவர்தன மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பிரதம அதிதிகளுக்கு வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.



## தங்கத்தை நாட்டுக்குள் கடத்தும் முயற்சி முறியடிப்பு 03

04 கிலோவுடன் பிரான்ஸ் பிரஜை கைது

## இலங்கையின் கடல் வளங்களை முழுமையாக பயன்படுத்த திட்டம்

### இலங்கை, மாலைதீவு கடற்றொழில் அமைச்சர்கள் ஆராய்வு



இலங்கையை சூழவுள்ள கடல் பரப்பில் இலங்கை கடற்றொழிலாளர்கள் முழுமையான நன்மைகளைப் பெறும் வகையில், மாலைதீவில் பயன்பாட்டிலுள்ள தொழில் முறைகள் கையாளப்படவுள்ளன. 06

## ஏ 09 வீதியில் பாரிய விபத்து வானில் பயணித்த 07 பேர் காயம்

### மாங்குளம், கனகராயன்குளமருகே சம்பவம்



(மாங்குளம் குரூப் நிருபர்)

கொழும்பு கண்டி ஏ09 வீதியில் மாங்குளம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில், ஏழு பேர் காயமடைந்தனர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற ஹையேஸ் வாகனம் மாங்குளம் பகுதியில், பயணித்த டிப்பர் வாகனம் மீது மோதி விபத்துக்குள்ளானது. இதில், 07 பேர் படுகாயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். 06

## கிழக்கில் சுரங்கம், மணல் அகழ்வுகள் அதிகரிப்பு

### தடுத்து நிறுத்த ஆளுநர் செந்தில் அதிரடி நடவடிக்கை



கிழக்கில் சட்டவிரோத சுரங்கம், மணல் அகழ்வு அதிகரிப்பதாகக் கிடைத்துள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் அதிகாரிகளுக்கு உத்தரவு விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச 06



## பொலிஸில் ஆஜராகுமாறு கஜேந்திரகுமாருக்கு அழைப்பு 03

## உணவு பொருட்களின் விலை அதிகரிப்பு தற்காலிகமானது

### வர்த்தக அமைச்சு நேற்று அறிவிப்பு

நாட்டில் கோழி இறைச்சி, மீன் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துள்ளமை தற்காலிகமானதென வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக கோழி இறைச்சி, மீன், காய்கறிகள் உள்ளிட்டவற்றின் விலைகள் பெருமளவில் அதிகரித்தது. அது இன்று வரை தொடர்கின்றது.

எனினும், அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்ய முடியாததுடன், இது குறித்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது. 06

### GAS விலை குறைந்தாலும்

## பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறையாது

### பேக்கரி உரிமையாளர் சங்கம் விடாப்பிடி




சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாதென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பேக்கரி உற்பத்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்த்தன இதுபற்றி தெரிவித்துள்ளார். நாடு முழுவதுமுள்ள பேக்கரிகளில் 25 சதவீதமானோரே சமையல் 06

## தங்கத்தின் விலை மேலும் குறைந்தது

### 24 கரட் பவுண் 1,60,800 ஆனது



தங்கத்தின் விலை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நேற்று (05) மீண்டும் குறைந்துள்ளது. டொலரின் பெறுமதி வீழ்ச்சியும் தங்கத்தின் விலையில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக தங்க நகைக்கடை உரிமையாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தங்கம் அவுன்ஸ் – 5,69,717ரூபா, 06

### தெற்கு பருவமழை ஆரம்பம்

## தென்னிலங்கையில் நேற்று அடைமழையால் வெள்ளம்

### கடும் காற்று வீசும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு



நாட்டில் தென்மேற்கு பருவமழை அடுத்த சில நாட்களில் படிப்படியாக ஆரம்பமாகுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 06

## ஆலய தேர்த் திருவிழாவில் தீயில் சிக்கி பூசாரி பலி

### களுத்துறை பகுதி ஆலயத்தில் சம்பவம்



களுத்துறையில் ஆலய தேர்த் திருவிழாவின் போது தீ விபத்தில் சிக்கி பூசாரி ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

அகலவத்தை தென்னஹேன முத்துமாரி அம்மன் கோவிலிலேயே, இத்துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஆசிர்வாதன் சுந்தர் குமரன் என்ற 44 வயதுடைய 06


## முச்சக்கர வண்டியில் மாடு கடத்திய இருவர் மடக்கி பிடிப்பு

### வவுனியாவில் திலீபன் எம்.பி அதிரடி



வவுனியாவில் முச்சக்கர வண்டியில் மாடு திருடிய இருவரை பாராளுமன்ற உறுப்பினரும், ஊர் மக்களும் இணைந்து மடக்கிப் பிடித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது. வவுனியா, சமயபுரம் பகுதியில் நேற்று முன்தினம் (04) நள்ளிரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 06

## யோஹானிக்கு டுபாயில் கோல்டன் விசா விருது



இலங்கையின் இளம் பாடகி யோஹானி டி சில்வா டுபாயில் கோல்டன் விசா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். கலை, கலாசாரம், பொழுதுபோக்கு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பங்காற்றியவர்களுக்கு டுபாயில் வழங்கும் உயரிய விருது, கோல்டன் விசா என அழைக்கப்படுகிறது. 06

## முன்னாள் அரசியல் கைதி பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைப்பு

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் வசித்து வரும் முன்னாள் அரசியல் கைதியொருவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு நேற்று (05.06) அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. இவரை நாளை காலை (7) 9 மணிக்கு வவுனியா பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்பு பிரிவுக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் என்பவரே இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணை பிரிவின் பிரிவு 01 இன் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளுக்கமைய வாக்குமூலமொன்றை வழங்குவதற்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடமாகாணத்தில் முட்டை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி

**பரந்தன் குறூப் நிருபர்**



வடமாகாணத்தில் முட்டை உற்பத்திகள் மந்த நிலையில் காணப்படுவதாக கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி வைத்தியர் வசீகரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் முட்டைகளுக்கான தேவைகள் அதிகமாக காணப்படும் போது அவற்றை உற்பத்தி செய்வதற்கான பண்ணையாளர்கள் இல்லாமை பெரும் பிரச்சினையாகவுள்ளது. இதனால் வடமாகாணத்துக்கு தேவையான முட்டைகளை வெளிமாகாணங்களிலிருந்தே பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறைந்த விலையில் உடலுக்கு தேவையான புரோட்டீன் முட்டையிலிருந்தே கிடைக்கின்றது.

ஆனால் அவ்வாறு புரோட்டீன் கிடைக்கும் முட்டைகளை உற்பத்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. எமது திணைக்களத்தினால் இரண்டு இடங்களில் வாரத்திற்கு 15000 கோழி குஞ்சிகள் உற்பத்தி செய்யப்பட்ட போதும் அதனை வாங்குதற்கான பண்ணையாளர்களின் எண்ணிக்கை குறைவாகவே காணப்படுகின்றது.

சோளத்தின் விலை அதிகரிப்பு காரணமாக கோழிகளுக்கு தேவையான உணவுகளில் தட்டுபாடு காணப்படுகின்றது. இதன் காரணமாக கோழி வளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து காணப்படுகின்றது.

முட்டைகளை இறக்குமதி செய்வதை குறைத்து தீவனங்களை இறக்குமதி செய்வதன் மூலமாக உள்ளூர் கோழி பண்ணையாளர்களை அதிகரிக்க முடியும். வடமாகாணத்தில் இறைச்சி உற்பத்தி தேவைக்கு மேலதிகமாக காணப்படுவதுடன் இறைச்சியின் விலை அதிகமாக காணப்படுவதால் அனைத்து தரப்பினரும் அவற்றை நுகரமுடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே வடமாகாணத்தில் தீவனங்களுக்கு தேவையான உள்ளீடுகளை இறக்குமதி செய்து தீவன உற்பத்திகளை அதிகப்படுத்துவதன் மூலமாக மந்த நிலையில் காணப்படும் முட்டை உற்பத்தியினை அதிகரிக்கமுடியும் என்று கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள மாகாண பணிப்பாளர் வைத்திய கலாநிதி வைத்தியர் வசீகரன் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## கிளிநொச்சியில் விசேட கலந்துரையாடல்



**பரந்தன் குறூப் நிருபர்**

விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பான மாகாண/மாவட்ட திணைக்களங்களின் அதிகாரிகளுடனான கலந்துரையாடலொன்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வட மாகாணத்தில் விவசாயத்துறை அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் மற்றும் தீர்வுகள் குறித்து மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், முல்லைத்தீவு மேலதிக அரசாங்க அதிபர், கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர், திட்டமிடல் பணிப்பாளர், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு தலைவரின் இணைப்பாளர், மாகாண/மாவட்ட திணைக்களங்களின் தலைவர்கள், நிறுவன பிரதிநிதிகள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மண்ணெண்ணெய் மன்னாரில் பகிர்ந்தளிப்பு

**மன்னார் குறூப் நிருபர்**

சீன அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் நேற்று (5) மன்னார் மாவட்ட மீனவர்களுக்கு வைபவரீதியாக தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதற்காக மன்னார் மாவட்டத்தில் 2431 மீனவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நிலையில் முதற் கட்டமாக மீனவர்களுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவி பணிப்பாளர் வி.கலிஸ்ரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ.ஸ்ரான்லி டிமேல், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சந்துரு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மீனவர் ஒருவருக்கு 150 லீற்றர் மண்ணெண்ணெய் மானியமாக வழங்கப்படவுள்ள நிலையில் முதற்கட்டமாக மன்னார் நகர மீனவர்களுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமரர் சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவேந்தல்

**கரவெட்டி தினகரன் நிருபர்**

அமரர்.சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று காலை 8:30 மணியளவில் நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரது நினைவு சதுக்கத்தில் நடைபெற்றன.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றிய செயலாளர் இ.ராகவன் தலைமையில் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் முதல் நிகழ்வாக கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி எஸ்.பொன்னம்பலத்தினால் பொது ஈகைச் சுடர் ஏற்றி வைக்கப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. அமரரின் திருவுருவச் சிலைக்கு



அவருடன் இறுதிவரை உடனிருந்த தங்கமுகுந்தன் பொன்னாடை போர்த்தினார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே சிவாஜிலிங்கம், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினரான எஸ் சுகிர்தன், முன்னாள் அதிபர் இ.ராகவன், லண்டனைச் சேர்ந்த கே.நடராசா உள்ளிட்டோர் மலர் மாலை அணிவித்தனர். பின் அனைத்து தரப்பினரும் மலரஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக அஞ்சலி உரை இடம்பெற்றது. இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே சிவாஜிலிக்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், திருமதி நடராசா உட்பட அரசியல் பிரமுகர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# லண்டன், ஐரோப்பிய நாடுகளில் தமிழருவி சிவகுமாரனின் ஆன்மீக இலக்கியப்பயணம்

இலங்கையின் தலை சிறந்த சொற்பொழிவாளர்களில் ஒருவரும் தமிழறிஞருமான தமிழருவி த.சிவகுமாரன் இம்மாதம் 10, 11 ஆம் திகதிகளில் லண்டனில் நடைபெறவுள்ள உலக சைவ மாநாட்டில் இலங்கை பிரதிநிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பிரித்தானியா சைவத்திருக்கோவில்கள் ஒன்றியம் நடத்தும் 22 ஆவது உலக சைவ மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகள் லண்டன் ஈலிங்கனக துர்க்கை அம்மன் ஆலய மகா மண்டபத்திலும் இரண்டாம் நாள் மாநாடு லண்டன் ஆர்ஜ்வே உயர்வாசல் குன்று முருகன் ஆலய கலா மண்டபத்திலும் நடைபெறவுள்ளன.

ஆலய வழிபாட்டு நெறிகளில் விழாக்களும் விரதங்களும் பயில் நிலையும் பயன்பாடுகளும் என்ற தொனிப்பொருளின் கீழ் பேருரைகள் ஆற்றவுள்ளார். இவர் பிரித்தானியா சைவ முன்னேற்றச்சங்கம் நடாத்தும் 'சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி' அவர்களின் நினைவு விழாவிலிலும் நினைவுப் பேருரையாற்றவுள்ளார்.



தொடர்ந்து நெதர்லாந்து டென்ஹெல்டர் நகரில் ஸ்ரீ வரதராஜ செல்வ விநாயகர் ஆலயம், பெவர் விஜ்நகரில் அருள்மிகு அருணாசலேஷ்வரர் ஆலய மகோற்சவங்களில் தொடர் சொற்பொழிவுகளை நிகழ்த்தவுள்ளார். அதனைதொடர்ந்து அங்கு வெளியிடப்படவுள்ள 'சைவ ஆலயங்களின் பாராயண பதிகங்கள்' நூல் வெளியீட்டு விழாவுக்கும் தலைமை வகிக்கவுள்ளார்.

மேலும் பிரான்ஸ் நாட்டில் லாக்கூர் நெவ்நகர சித்தி விநாயகர் ஆலயம், டென்மார்க் பிரண்டாபதி அபிராமி அம்மன் ஆலயங்களின் மகோற்சவங்களில் சொற்பொழிவுகள் ஆற்றவுள்ளார்.

சுவிற்சர்லாந்து நாட்டின் சூரிச் நகரத்தில் சிறப்பாக இயங்கி வரும் சைவத்தமிழ்மன்றத்தின் ஆண்டு விழாவிலும் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

லண்டனில் 1998 இல் நடைபெற்ற முதலாவது உலக சைவமாநாட்டில் கலந்து கொண்டதிலிருந்து தொடர்ச்சியாக இங்கு 9 மாநாடுகளில் கலந்து கொண்டு சிறப்பித்த பெருமைக்குரியவர் தமிழருவி சிவகுமாரன். கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக லண்டன், சுவிஸ், ஜேர்மன், பிரான்ஸ், ஹொலண்ட், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளின் இலக்கிய சமய அமைப்புகளால் தமிழ் இலக்கிய ஆன்மீகச் சொற்பொழிவுகளுக்காக தொடர்ந்து அழைக்கப்பட்டு வருபவர். தனது நாவன்மையின் சிறப்பால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எண்பது விருதுகளை இதுவரை பெற்றுள்ளவர்.

இவரது பணிகளுக்காக இலங்கையின் புகழ்பூத்த கல்லூரியாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தனது முதலாவது "வாழ்நாள் சாதனையாளர்" விருதினை அண்மையில் தமிழருவி சிவகுமாரனுக்கு வழங்கிச் சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**லண்டனிலிருந்து**
**'தொண்டர் திலகம்' சிவதம்பு**



தியாகி பொன் சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் உரும்பிராயிலுள்ள அவரது நினைவிடத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.
(படம் ; யாழ்.விசேட நிருபர்)

## மணமகன் மீது தையல் கடைக்காரர் தாக்குதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நகர் பகுதியில் புது மணமகன் ஒருவர் மீது தையலாளர் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார். திருமணத்துக்கு தேவையான ஆடைகளை குறித்த தையலாளரிடமே மணமகன் கொடுத்துள்ளார். எனினும் தையலாளர் தைக்காமல் இழுத்தடிப்புச் செய்துள்ளார். இதனால் தைத்த துணிகளை தருமாறு மணமகன் கோரிய போதே தையலாளர் தாக்குதல் மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. இருப்பினும் இதுதொடர்பாக இதுவரை தமக்கு எவ்விதமான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கைக்குண்டுடன் ஒருவர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை பகுதியில் கைக்குண்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்புத்துறை பகுதியில் வசிக்கும் நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு போதையில் வீட்டுக்கு வந்த வர் பெரிய சத்தத்துடன் கத்தி அட்டகாசம் செய்துள்ளார்.

அதனால் பொறுமையிழந்த அயலவர்கள் பொலிஸ் அவசர சேவைக்கு அறிவித்ததையடுத்து, அவரது வீட்டுக்கு சென்ற பொலிஸார் அவரை வீட்டினுள் தேடிய வேளை அங்கே கைக்குண்டு ஒன்று இருப்பதை அவதானித்துள்ளனர்.

அதனையடுத்து கைக்குண்டை மீட்ட பொலிஸார், வீட்டில் மறைந்திருந்த நபரையும் கைது செய்துள்ளனர்.



தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜுன் 6 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் சித்திரை 5
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



**ரூ.80 இலட்சம் நிதி மோசடி**

## திலினிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

எண்பது இலட்சம் ரூபாவை பெற்று மோசடி செய்தாரெனக் குற்றம்சாட்டப்பட்ட திலினி பிரியமாலிக்கு எதிரான வழக்கை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் (11) வரை ஒத்திவைக்க கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வாகனமொன்றை வழங்குவதாக உறுதியளித்து மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரிடமிருந்து, 80 இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாகவே இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.


இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்ட பெந்தி முன்னிலையில், நேற்று திங்கட்கிழமை (05) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது குற்றம்சாட்டப்பட்டுள்ள திலினி பிரியமாலி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. சுகயீனம் காரணமாக திலினி பிரியமாலி கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனையடுத்து , வழக்கை ஆகஸ்ட் (11) இல், மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உத்தரவிட்ட நீதிபதி, அன்றைய தினம் ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவ அறிக்கையுடன் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# பழங்கால கட்டடங்களை நவீனமயமாக்கி முதலீடுகளுக்கு வாய்ப்பு வழங்க பேச்சு

**கொழும்பில் கபூர் கட்டடம், "எய்ட் கிளப்" கட்டடங்களை பாதுகாக்க ஏற்பாடு**

பழங்கால கட்டடங்களின் தொன்மையை பாதுகாக்கும் வகையில் நவீனமயமாக்கவும், முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஜோர்ஜியாவின் இலங்கைப் பிரதிநிதி திருமதி. நினோ மக்விலாட்சே உள்ளிட்ட ஜோர்ஜிய முதலீட்டாளர்கள் குழுவுடன் நடைபெற்ற கலந்துரையாடலிலே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இக்கலந்துரையாடல் நேற்று (05) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் நடைபெற்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கையிலுள்ள புராதன கட்டடங்களை முதலீட்டு வாய்ப்புகளுக்காக உரிய முறையில் பயன்படுத்துவது மற்றும் ஜோர்ஜிய முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. கொழும்பு கபூர் கட்டடம் மற்றும் கொழும்பு "எய்ட் கிளப்" கட்டிடம் எனப் பல இடங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த கட்டடங்கள் வரலாற்று

06

**கடும் மழை உள்ளிட்ட அனர்த்தங்கள்**

## முன்கூட்டியே ஏற்பாடுகளை செய்யுமாறு வேண்டுகோள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடளாவிய ரீதியில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நடைபெற்று வருவதால்,அதிக மழை அல்லது வேறு திடீர் அனர்த்தங்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுக்கும் வகையில் முன்கூட்டியே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பரீட்சைகள் திணைக்களம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அவ்வாறான அனர்த்தங்களை எதிர்கொள்ள நேர்ந்தால் அனர்த்த முகாமைத்துவ நிலையத்திற்கு 117 என்ற தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு தகவல்களை தெரிவிக்க முடியுமென்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் நேரகாலத்துடன் பரீட்சை மத்திய நிலையங்களுக்கு வருகை தருவது அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 648 Gas சிலிண்டர்களுடன் லொறியை கடத்தியவர் கைது

**வர்த்தகரின் மூத்த மகன் கைது**

(லோரன்ஸ் செல்வநாயகம்)

648 கேஸ் சிலிண்டர்களுடன் லொறியொன்றை கடத்திச் சென்ற நபரொருவரை வவுனியா கணேசபுரம் பகுதியில் வைத்து கைதுசெய்துள்ளதாக நெலுக்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமையல் எரிவாயு வர்த்தகரான பெண்ணொருவரின் வீட்டின் வளவுக்குள் சென்ற இவர், அங்கு வைக்கப்பட்டிருந்த இரண்டு கோடிக்கும் அதிகமான பெறுமதியுடைய லிற்றோ கேஸ் சிலிண்டர்களுடன் லொறியையும் களவாடிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பெண் வர்த்தகர் நெலுக்குளம் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அந்த பெண்ணின் மூத்த மகனான சந்தேக நபரே கேஸ் சிலிண்டர்களுடன் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறியில் பணிபுரியும் சாரதி கேஸ் சிலிண்டர்களை பகிர்ந்தளித்துவிட்டு மேற்படி வர்த்தகரான பெண்ணின் வீட்டில் லொறியை நிறுத்தியிருந்த சந்தர்ப்பத்தில், வீட்டில் எவரும் இல்லையென்பதைத் தெரிந்துகொண்டு சந்தேக நபர் உள்ளே சென்று கேஸ் சிலிண்டர்களுடன் லொறியையும் திருடிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கேஸ் சிலிண்டர்களை வேறு ஒரு பிரதேசத்துக்கு விற்பனை செய்வதற்காக கொண்டுசெல்வதற்கு தயாராகியுள்ள நிலையில், சந்தேக நபரின் வளவில் ஒரு பகுதியில் லொறியும் கேஸ் சிலிண்டர்களும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

06

# டெங்கு நோய் பரவல் வெகுவாக அதிகரிப்பு

**நாடு முழுவதும் 40,000 பேர் பதிவு**

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தொடர்ச்சியான மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக சுகாதார விஞ்ஞான அதிகாரிகளின் சங்கம் தெரிவித்துள்ளது.


சங்கத்தின் தலைவர் நஜீத் சுமணசேன இதுதொடர்பில் தெரிவிக்கையில், ப்ரீட்டோ சுட்டிக்கிணங்க நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் டெங்கு பரவல் 25%மாக அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 59 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் டெங்கு எச்சரிக்கை வலையங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் இதுவரை 40,000க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த பொதுமக்களின் முழுமையான ஒத்துழைப்பு அவசியமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களிலும் மேலும் பல மாவட்டங்களிலும் உஷ்ண நிலை அதிகரித்துக் காணப்படும் நிலையில், இ தற்கு ஒத்ததாக எமது சுகாதார விஞ்ஞான அதிகாரிகளின் தரவுகளின்படி ப்ரீட்டோ சுட்டி மேலும் குறைவாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில பிரதேசங்களில் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் தரவுகளின்படி, அது 40% மாக அதிகரித்துள்ளதாகவும் இந்நிலை அதிகரித்தால் டெங்கு பரவலை எம்மால் தடுக்கமுடியாத நிலை ஏற்படலாமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் மேல் மாகாணத்தில் டெங்கு நோயை கட்டுப்படுத்த முடியுமானால் ஏனைய பகுதிகளிலும் அதனைக் கட்டுப்படுத்த முடியுமாகவிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். குறிப்பாக மேல் மாகாணத்தில் மூன்று மாவட்டங்களிலும் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலும் திருகோணமலை, யாழ்ப்பாணம், குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ப்ரீட்டோ சுட்டிக்கிணங்க அதிகரித்துக் காணப்படுகிறது.



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட, இந்திய காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் ராகுல் காந்தியை அண்மையில் சந்தித்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு உலகப் பொருளாதார மன்றத்தின் இளம் உலகத் தலைவர்களின் மன்றத்தில், இவர்களது முதல் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

**பம்பலப்பிட்டி பாழடைந்த வீட்டில்**

## விமானப்படை வீரர் சடலமாக மீட்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பு பம்பலப்பிட்டி பொன்சேகா பிரதேசத்திலுள்ள பாழடைந்த வீடொன்றிலிருந்து விமானப்படை வீரரொருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டதாக பம்பலப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்த விமானப் படை வீரர் திருகோணமலை அபேபுர பிரதேசத்தை வதிவிடமாகக் கொண்ட 36 வயதுடையவர் என்றும் விமானப்படையினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி இவ்விமானப்படை வீரர் மேலும் சிலருடன் பம்பலப்பிட்டி பொன்சேகா பிரதேசத்திலுள்ள பாராளுமன்ற உறுப்பினரொருவரின் வீட்டுக்கருகாமையில் கடமையில் ஈடுபட்டிருந்தார். பின்னர்,ஓய்வெடுப்பதற்காக குறித்த பாழடைந்த வீட்டிற்குள் சென்றபோதே துப்பாக்கிச் சூட்டு தாக்குதலுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் எவ்வாறு நடந்தது என்பது தொடர்பில், பம்பலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கொவிட்19 தொற்று அறிகுறிகளுடன் புதிய வைரஸ் பரவல் கண்டுபிடிப்பு

**இலங்கை மக்களுக்கு எச்சரிக்கை விடுப்பு**

கொரோனா தொற்றுப் போன்ற அறிகுறிகளுடன் குழந்தைகள், முதியவர் அதிகம் பாதிக்கப்படும் வைரஸ் தொற்று தொடர்பில் சுகாதார பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த தொற்றுக்கு இதுவரை தடுப்பூசிகள் அல்லது வைரஸ் எதிர்ப்பு மருந்துகள் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பரவியுள்ள இந்த அதிகம் அறியப்படாத சுவாச வைரஸின் அண்மைய அதிகரிப்பு குறித்து, இலங்கை சுகாதார அதிகாரிகளும் விழிப்புணர்வடைந் துள்ளனர்.

இது குறித்து இலங்கை சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கையில், தாம், இந்த வைரஸின் புதிய வளர்ச்சிகளை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்காவுக்கு வெளியே இது ஆபத்தான கட்டத்தை எட்டவில்லையென்றாலும், எல்லைகளுக்கப்பால் அது பரவும் வாய்ப்பை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

ஹியூமன் மெட்டாப் நியூமோ வைரஸ் தொற்று முதன்மையாக மேல் சுவாசக் குழாயைப் பாதிக்கிறது. 2001 ஆம் ஆண்டு இந்த வைரஸ் கண்டறியப்பட்டது. இந்த வைரஸ் சளி, காய்ச்சல் தொண்டைப் புண் மற்றும் காய்ச்சல் உள்ளிட்ட கொரோனா தொற்று அறிகுறிகளை ஏற்படுத்துகிறது.

பொதுவாக, குழந்தைகள் மற்றும் முதியவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுவதாக சுகாதாரத்துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வைரஸ், இருமல், தும்மல், தொடுதல் போன்ற நெருங்கிய தனிப்பட்ட தொடர்பு மூலம் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து ஏனையவர்களுக்கு பரவ வாய்ப்புள்ளது.

கைகுலுக்கல், வைரஸ் உள்ள பொருட்கள் அல்லது அதன் பரப்புகளைத் தொடுதல் என்பவற்றாலும் இந்த நோய் பரவும் ஆபத்து உள்ளதாக மேலும் தெரிவித்துள்ளனர்.

# பொலிஸ் நிலையத்தில் ஆஜராகுமாறு கஜேந்திரகுமார் எம்பிக்கு அழைப்பு



மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை ஆஜராகுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. நேற்று தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பதிவிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற கூட்டத்தொடரில் கலந்துகொள்ளவுள்ளதால், இது குறித்து சபாநாயகருக்கு அறிவிப்பதாகத் தெரிவித்துள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். சபாநாயகரை தொடர்புகொள்ள முயன்றதாகவும் முடியாமல் போனதால், பிரதி சபாநாயகருக்கு இது குறித்து அறிவித்துள்ளதாகவும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி தெரிவித்துள்ளார்.

# பீகாரில் இடிந்து விழுந்த பாலம் ரூ.1,710 கோடி செலவில் நிர்மாணம்

**இரண்டாவது முறையாகவும் வீழ்ந்ததால் அதிர்ச்சி**

இந்தியாவின் பீஹார் மாநிலத்தில், கங்கை நதியின் குறுக்கே நிர்மாணிக்கப்பட்டுவந்த பாலமொன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

பாகல்பூர் எனும் இடத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த பாலம், இடிந்து விழுவது கெமராக்களில் பதிவாகியுள்ளன.

இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. ஒரு



வருடத்தில் இரண்டாவது தடவையாக இப்பாலம் இடிந்து வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

06

## தங்கத்தை நாட்டுக்குள் கடத்த முயற்சி

**04 கிலோவுடன் பிரான்ஸ் பிரஜை கைது**

எட்டரைக் கோடி ரூபா பெறுமதியான 04 கிலோ 611 கிராம் தங்கம், கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தின் இரத்தினக் கல் மற்றும் ஆபரண மதிப்பீட்டுப் பிரிவு மற்றும் போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினர்,பிரான்ஸ் பிரஜையிடமிருந்து இதைக் கைப்பற்றினர்.

சட்டவிரோதமாக நாட்டுக்குள் தங்கத்தைக் கொண்டுவர முயற்சித்தாரென்ற குற்றச்சாட்டில் இந்த பிரான்ஸ் பிரஜை கைது செய்யப்பட்டுள்ளார்.

06

# இணையம் ஊடாக நுழைந்து வங்கிக் கணக்குகளில் கொள்ளை

**73 சிம் கார்டுகளுடன் கம்பஹாவில் ஒருவர் கைது**

இணையத்தளமூடாக பல்வேறு நபர்களின் வங்கிக் கணக்குகளுக்குள் நுழைந்து அவர்களது பணத்தை தனது வங்கிக்கு வரவு வைத்ததாகக் கூறப்படும் ஒருவர், கம்பஹா பிரதேசத்தில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவரிடமிருந்து 07 கைத்தொலைபேசிகள் மற்றும் 73 சிம்கார்டுகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கம்பஹா நகரில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் குழுவொன்று சந்தேக நபரை கைது செய்தது.இதையடுத்தே இத் தகவல் வெளியாகியுள்ளது.

கம்பஹா, கெஸ்பேவ, ராகம, வியாங்கொடை, ஹெட்டிபொல, பாணந்துறை தெற்கு

06

**நாணய மாற்று**

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 187.20 | 198.68 |
| கனடியன் டொலர் | 210.97 | 223.72 |
| யூரோ | 304.19 | 321.09 |
| ஜப்பான் யென் | 2.0304 | 2.1406 |
| சிங்கப்பூர் டொலர் | 210.03 | 222.35 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 353.88 | 372.53 |
| சுவிஸ் பிராங்க் | 311.71 | 330.77 |
| அமெரிக்க டொலர் | 285.61 | 298.85 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 775.31 | கட்டார் ரியால் | 80.18 |
| குவைத் டினார் | 950.18 | சவூதி ரியால் | 77.93 |
| ஓமான் ரியால் | 759.21 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 79.58 |


தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் சித்திரை மாதம் 5ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ஷவ்வால் பிறை 22

## குறள் தரும் சிந்தனை



வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்
பூரியர்கள் ஆழும் அளறு

விலைமகளை விரும்பி அவள் பின்னால் போவதற்கும், நரகம் எனச் சொல்லப்படும் சகதியில் விழுவதற்கும் வேறுபாடே இல்லை.

# பொருளாதார நலிவுற்றோர் நலன்களில் அரசு அக்கறை

இலங்கை ஒரு வளர்முக நாடாகும். இந்நாட்டில் மூன்று மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களாக உள்ளனர். அவர்களது சமூக பாதுகாப்பு மற்றும் பொருளாதார மேம்பாட்டை முன்னிலைப்படுத்தி பல வேலைத்திட்டங்கள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுள்ளன. சமுர்த்தி நிவாரணத்திட்டம், அங்கவீனர்கள், முதியவர்கள், சிறுநீரக நோயாளர்கள் போன்றோருக்கான நலனோம்பு திட்டங்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதார மற்றும் சமூக நலன்களை முன்னிலைப் படுத்தியே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தோடு பொருளாதார ரீதியில் நெருக்கடிகளும் அழுத்தங்களும் இம்மக்களுக்கு ஏற்படுவதைத் தவிர்ப்பதும் இந்நிவாரணத் திட்டங்களின் நோக்கம் ஆகும்.

அதேநேரம் சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக குறைந்த வருமானம் பெறுபவர்களைப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கான சுயதொழில் மேம்பாட்டுத் திட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் ஊடாக குறைந்த வருமானம் பெறும் பலர் முன்னேற்றமடைந்துள்ளனர். அவர்கள் தமது சமுர்த்தி நிவாரணத்தை மீள அரசுக்கு ஒப்படைத்துமுள்ளனர்.

இவை இவ்வாறிருக்க, தற்போது சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுடன் மேலுமொரு தொகையினரை சேர்க்கவும் ஏற்கனவே திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான தெரிவுகளும் இடம்பெற்றுள்ளன.

2022 ஆரம்பம் முதல் நாடு பொருளாதார நெருக்கடிக்கு உள்ளானது. இப்பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் அழுத்தங்களுக்கும் நாட்டின் எல்லா மட்டத்தினரும் உள்ளாகினர். அவர்களில் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களும் அடங்குவர். ஆன போதிலும் இந்நெருக்கடி இவர்களுக்கு தாக்கமாகவும் சுமையாகவும் அமைவதைத் தவிர்க்கும் வகையில் ஆரம்பம் முதல் பல்வேறு நிவாரணத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இத்திட்டங்களில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் நிவாரணத் திட்டங்களுக்கு மேலதிகமானவையும் அடங்கியுள்ளன.

அந்த வகையில் அடுத்த மாதம் (ஜுலை) முதலாம் திகதி முதல் நாட்டிலுள்ள வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் 33 இலட்சம் மக்களை இலக்காகக் கொண்டு 'அஸ்வெசும' (ஆறுதல்) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இத்திட்டமும் அவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளது.

இந்த நிலையில் அண்மையில் இலங்கைக்கு வருகை தந்திருந்த சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகமுரே, 'பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் வரவேற்கத்தக்கவை' என்றாலும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள குறைந்த வருமானம் பெறும் தரப்பினருக்கு வழங்கப்படும் நலன்புரித் திட்டங்களை விரிவுபடுத்தப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீட்சி பெற ஒத்துழைப்பு நல்கும் முக்கிய நிறுவனமாக சர்வதேச நாணய நிதியம் விளங்குவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் திறைசேரி அதிகாரிகள், 'வறுமை மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவென அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் சமூக நலத்திட்டங்களுக்காக கூடுதலாக 200 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படும்' என்று குறிப்பிட்டுள்ளனர். குறைந்த வருமானம் பெறும் மூன்று மில்லியன் குடும்பங்களுக்கு அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு நிதியுதவி அளித்தல் உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக இவ்வருட இறுதிக்குள் உலக வங்கியிடமிருந்து கிடைக்கப்பெறவுள்ள 700 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட உள்ளது' என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வேலைத்திட்டங்கள் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களை பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்தி இருப்பதை எடுத்துக்காட்டக் கூடியனவாக உள்ளன.

இந்நலனோம்புதல் திட்டங்கள் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களது பொருளாதார நலன்களில் நம்பிக்கை அளிக்கக் கூடிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆகவே இத்திட்டங்கள் இக்குடும்பங்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டுக்கு நம்பிக்கை தரும் ஒளியாக அமையும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. அதனால் இத்திட்டங்கள் ஊடாக உச்ச பிரதிபலன்களை அடைந்து கொள்வதில் பயனாளிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். அத்தோடு இந்நிவாரணத் திட்டங்கள் உரிய பயனாளிகளை சென்றடைவதை உறுதிப்படுத்திக் கொள்ள சம்பந்தப்பட்ட தரப்பினர் தவறலாகாது. அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# ஒரிசாவில் 275 பேரைப் பலிகொண்ட ரயில்விபத்துக்கு சதிவேலை காரணமா?

இந்தியாவின் ஒரிசா ரயில் விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 275 ஆக உயர்ந்துள்ளது. எலக்ட்ரோனிக் இன்டர் லொக் அமைப்பில் செய்யப்பட்ட மாற்றமே இந்த விபத்துக்கான காரணம் என அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார். அவர் கூறிய இன்டர் லொக்கிங் என்றால் என்ன, அது எப்படி செயல்படும் என்பதை இங்கே பார்க்கலாம்.

மேற்கு வங்காள மாநிலம் கொல்கத்தா அருகே உள்ள ஷாலிமரில் இருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் ஒரிசா மாநிலம் பாலசோர் மாவட்டத்தில் உள்ள பஹனகா ரயில் நிலையத்திற்கு அருகே வந்தபோது விபத்திற்குள்ளாகியது. இந்த ரயில் விபத்தில் 275 பேர் உயிரிழந்துள்ளனர். நாட்டையே உலுக்கிய இந்த ரயில் விபத்திற்கு மூலகாரணமும், அதற்கு காரணமானவர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியிருந்தார்.

'இன்டர்லொக்கிங் சிஸ்டம்' என்பது, ரயில் தண்டவாளத்தில் ரயில்வே கேட், சிக்னல்கள் உள்ளிட்ட பகுதிகளில் பொருத்தப்பட்டு இருக்கும் பொயிண்ட் இயந்திரங்கள் கட்டுப்பாட்டு அறைகளுடன் இணைக்கப்பட்டு இருக்கும் ஒட்டுமொத்த கட்டமைப்பு ஆகும். இங்கிலாந்தை சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தனர். உலகம் முழுவதும் ரயில்வே அமைப்புகள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்தியே ரயில்களை இயக்குகின்றன. ரயிலானது ஒரு குறிப்பிட்ட லைனில் செல்லும் போது அந்த லைனில் வேறு ரயில் எதுவும் இல்லை என்பதை இந்த இண்டர்லொக்கிங் மூலமே உறுதி செய்யப்படுகிறது.



ரயில்வே கேட்டை பூட்டிவிட்டு இன்டர்லொக்கிங் கட்டமைப்புடன் இணைத்து விட்டால் கேட் கீப்பர் நினைத்தால் கூட அந்த ரயில்வே கேட் திறக்க முடியாது. ரயில் குறிப்பிட்ட இடத்தை கடந்து சென்ற பிறகு கட்டுப்பாட்டு அறையில் இருந்து அந்த லொக் திறக்கப்படும். அதன்பிறகு மட்டுமே கேட் கீப்பரால் ரயில்வே கேட்டை திறந்து விட முடியும். அதே போல, இணைப்பு தண்டவாளத்தில் ஒரு ரயில் நின்று கொண்டிருந்தால் அங்குள்ள பொயிண்ட் மூலம் இணைப்பு தண்டவாளம்லொக் செய்யப்படும். அதன்பிறகு வேறு எந்த ரயிலும் இணைப்பு தண்டவாளத்திற்குள் செல்ல சிக்னல் கிடைக்காது. ஒரிசா விபத்தை பொறுத்தவரை இணைப்பு தண்டவாளத்தில் சரக்கு ரயில்

## 'எலக்ட்ரோனிக் இன்டர்லொக்' அமைப்பில் கோளாறு ஏற்பட்டது ஏன்?

நின்று கொண்டிருந்தது. ஆனால், அங்குள்ள பொயிண்ட் இயந்திரத்தில் ஏற்பட்டிருந்த மாற்றமே இந்த ரயில் விபத்துக்கு காரணமாக ஆரம்ப கட்ட தகவலின்படி சொல்லப்படுகிறது. 'செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான எலக்ட்ரோனிக் இன்டர்லொக்கிங் அமைப்பில் இத்தகைய மாற்றம் செய்வது வேண்டுமென்று" மட்டுமே இருக்கும் என்று பெயர் வெளியிட விரும்பாத ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எனவே, எவ்வாறு மாற்றம் ஏற்பட்டது, அதற்கான காரணம் என்ன என்பது குறித்த விசாரணை தீவிரமடைந்துள்ளது. நாசவேலை காரணமாக இருக்கலாம் என்ற சந்தேகங்களும் எழுப்பப்பட்ட நிலையில், ரயில்வே இது தொடர்பாக சிபிஐ விசாரணைக்கு பரிந்துரைத்துள்ளது.

# ஐம்பது வருட நிறைவு பொன்விழாவை கொண்டாடும் 'நளீமிய்யா' கலாபீடம்


பேருவளையில் அமையப்பெற்றிருக்கும் முஸ்லிம்களின் கல்விக்கான கலங்கரை விளக்காக கருதப்படும் ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம் 2023 ஜூன் மாதத்தோடு ஐம்பது ஆண்டுகளை பூர்த்தி செய்து பொன்விழா காணுகிறது. இவ்வுயர் கல்வி நிறுவனம் 1973ஆம் ஆண்டு, இலங்கை முஸ்லிம்களின் முன்மாதிரி மிக்க நளீம் ஹாஜியாரால் நிறுவப்பட்டது. அது முஸ்லிம் மாணவர்களுக்கு மார்க்கக் கல்வியை வழங்கும் நிறுவனமாகவும், இளந்தலைமுறையினரை இஸ்லாமிய கற்கைகள் நோக்கி ஊக்குவிக்கக்கூடிய ஒரு சக்தியாகவும் விளங்குகிறது.

சிறந்த இஸ்லாமிய மார்க்க அடித்தளத்தையும், ஒழுக்க விழுமியங்களால் நிரம்பிய மற்றும் பலதரப்பட்ட துறைகளில் நிபுணத்துவத்தையும் பெற்ற ஒரு தலைமுறையை உருவாக்குவதை நோக்காகக் கொண்டு இந்நிறுவனம் இயங்குகிறது.

Golden Jubilee
Since 1973
JAMIAH NALEEMIAH
50 Years of Excellence in Islamic Studies & Human Sciences

சமூகவியல் கற்கைகளிலும் மாணவர்களை தயார்படுத்தும் தளமாகவும் அது உள்ளது. சாதாரண தரப் பரீட்சையைத் தொடர்ந்து உயர்தரப் பரீட்சை வரையுள்ள மூன்று வருடங்களும் விஷேட பட்டப்படிப்புக்கான நான்கு வருடங்களும் உள்ளடங்களாக மொத்தம் ஏழு வருட கற்கையை நளீமிய்யா, மாணவர்களுக்கு வழங்குகிறது.

அத்தோடு ஜாமிஆ நளீமிய்யாவில் முதல் மூன்று ஆண்டுகளும் அடிப்படைக் கற்கை நெறிகள் பிரிவால் அரபு உட்பட ஏனைய மூன்று மொழிகளிலும் இஸ்லாமிய மார்க்க நெறியின் அடிப்படை விடயங்களிலும் மாணவர்கள் சிறப்பாக தேர்ச்சிப்படுத்தப்பட்டு இஸ்லாமிய கற்கை நெறிகள் பீடத்தின் நான்கு வருட பட்டப்படிப்புக்கு தயார் படுத்தப்படுகிறார்கள். நளீமிய்யாவின் பாடத்திட்டமானது இஸ்லாமிய கற்கை நெறிகளோடு சேர்த்து மாறிவரும் காலத்துக் கேற்றவாறு நவீன கற்கைகளையும் உட்பொதிந்துள்ளது. அல்குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய சட்டவியல், இஸ்லாமிய வரலாறு மற்றும் அரபு மொழி போன்றனவும் இவற்றுக்கு மேலதிகமாக சமாதானக் கற்கைகள், இலங்கையின் பிரதான நான்கு மதங்கள் பற்றிய கற்கை போன்ற நவீன சமூக விஞ்ஞான கற்கைகளுடன் தொடர்பான பாடங்களும், அரபு, தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளும் இங்கு கற்பிக்கப்படுகின்றன. கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களுக்கு அப்பால், ஜாமிஆ நளீமிய்யா பண்பாட்டு விழுமியங்களுடன் கூடிய ஆளுமை உருவாக்கம் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது. அதேநேரம் பரஸ்பர அன்பு, சகிப்புத்தன்மை மற்றும் நெகிழுந்தன்மை போன்ற விடயங்களையும் மாணவர் மத்தியிலும் சமூகத்திலும் அதிகமாக ஊக்குவிக்கிறது. இந்நிறுவனம் மாணவர்களை சமூக நலச் செயல்பாடுகள், மதங்களுக்கிடையேயான இணக்கப்பாட்டு முயற்சிகளில் பங்கேற்றல் மற்றும் புரிந்துணர்வுடன் கூடிய





சூழலை வளர்த்தல் போன்றவற்றையும் ஊக்குவிக்கிறது. ஜாமிஆ நளீமிய்யாவில் பட்டம் பெற்று வெளியேறிய பல மாணவர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு சென்று வெவ்வேறு துறைகளில் இளமாணி, முதுமாணி மற்றும் கலாநிதி பட்டங்களை பெற்றிருக்கின்றனர். இதுவரை ஜாமிஆ பட்டதாரிகளில் 27 பேர் கலாநிதிகளாக பட்டம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இவர்கள் அறிஞர்கள், எழுத்தாளர்கள், பயிற்றுனர்கள், விரிவுரையாளர்கள், உயர்ஸ்தானிகர்கள், வழக்கறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் சமூகத் தலைவர்களாக சமூகத்தினருக்கு பல சேவைகளை செய்து வருகின்றனர். உலகின் பல பாகங்களிலும் இவர்கள் அறிவு மற்றும் புரிந்துணர்வை போதித்து வளர்க்கக் கூடியவர்களாக உள்ளனர். மேலும், ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் அதன் பட்டதாரிகளால் வெளியிடப்படுகின்ற சஞ்சிகைகள் மூலம் இஸ்லாத்தின் வளமான அறிவுசார் பாரம்பரியத்தை ஆராய்வதில் ஆர்வமுள்ள புத்திஜீவிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு முக்கியமான ஒரு மையமாக மாறியுள்ளது.

கல்விசார் தேர்ச்சி, ஒழுக்க விழுமியங்கள் மற்றும் சமூக சேவைக்கான ஜாமிஆ நளீமிய்யாவின் அர்ப்பணிப்பு இலங்கைக்குள்ளும் சர்வதேச அளவிலும் பரவலான அங்கீகாரத்தை பெற்றுள்ளமை முக்கியமான விடயமாகும். எனவே எல்லாம் வல்ல இறைவனின் அருளுடன் இந்த ஆண்டு ஜாமிஆ நளீமிய்யா 50 வருடங்களை நிறைவு செய்து இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றிலும் மக்களின் மனதிலும் அசைக்கமுடியாத ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. ஜூன் 24 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், தேசிய பிரமுகர்கள் பலரின் பங்கேற்புடன் அதன் பொன்விழா மற்றும் பொது பட்டமளிப்பு விழாவை பிரமாண்டமான முறையில் கொண்டாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.

– காலித் ரிஸ்வான்

# சுனாமி அனர்த்தத்தினால் சேதமடைந்த கோணவத்தை பாலம் புனர்நிர்மாணம்

அம்பாறை மாவட்டம் அட்டாளைச்சேனை பிரதேசத்தில் மிகநீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமலிருந்த கோணவத்தை கொட்டுப் பாலம் இரும்புப் பாலமாக புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் கிராமிய பாலங்கள் திட்டத்தின் கீழ் குறித்த பாலம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. நெதர்லாந்து அரசாங்கத்தின் உதவித் திட்டத்தின் கீழ் குறித்த பாலம் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், போர்சைட் பொறியியல் நிறுவனம் உள்நாட்டின் பிரதான ஒப்பந்த நிறுவனமாக செயற்படுகின்றது. நிறுவனத்தின் பிராந்திய பொறியியலாளர் அசோக்க புஷ்பகுமாரவின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வினை கோணவத்தை பள்ளிவாசல் பரிபாலனசபைத் தலைவரும், ஓய்வுபெற்ற சமூக சேவை உத்தியோகத்தருமான எஸ்.எம்.எம்.அமீன் தலைமை தாங்கி நடத்தியிருந்தார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.ஷாபிர், பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் மற்றும் ஓய்வுபெற்ற திட்டமிடல் பணிப்பாளர் ஐ.எல்.தௌபீக் ஆகியோருடன் கிராம உத்தியோகத்தர் அஸ்லம்சஜா மற்றும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

குறித்த பாலத்தின் நிர்மாணப் பணியானது மிக நீண்ட







## நெதர்லாந்து அரசாங்கம் வழங்கிய உதவி

காலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளுக்கு கிடைத்தஒரு வெற்றியாகவே மக்கள் பார்க்கின்றனர். சுனாமி அனர்த்தத்திற்கு பின்னர் சேதமைடைந்த கோணாவத்தை கொட்டுப்பாலம் சிறியளவில் புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அவை மக்களின் முறையான போக்குவரத்துக்கு பொருத்தமானதாக அமையப் பெற்றிருக்கவில்லை. அத்துடன் கொட்டுப் பாலம் ஆற்றின் நீரோட்டத்துக்குத் தடையாக அமைந்துள்ளதுடன், பாலத்தைச் சூழவும் நீர்த்தாவரங்கள் விளைந்து காணப்பட்டன. இதனால் பிரதேச விவசாயிகளும், மீனவர்களும் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டதனால் நீர்ப்பாசன , விவசாய திணைக்களங்கள் இணைந்து பாலத்தின் 10அடி அகலமான பகுதியை முற்றாக அகற்றியிருந்தனர். இதானல்இங்குள்ள மக்களின் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. இவ்வாறான பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்த மக்களின் போக்குவரத்துத் தேவை நிறைவேறுவதற்கான ஆரம்ப நிகழ்வு கோணாவத்தை பாலத்தின் முன்றலில் இடம்பெற்றிருந்தது. கோணாவத்தை பாலத்தின் நிர்மாணப்பணிகள் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தின் பூரண மேற்பார்வையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்ததக்கது.

றிசாத் ஏ காதர்
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தையான அலெக்சாண்டர் புஷ்கின் பிறந்ததினம்

## – ரஷ்ய மொழிதினம் இன்று அனுஷ்டிப்பு

ரஷ்ய இலக்கிய சிருஷ்டி அலெக்சாண்டர் புஷ்கின் பிறந்ததினம் ஜூன் 06, 1799 ஆகும். இந்நாளே 'ரஷ்ய மொழி தினம்' என ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 06 ஆம் திகதி கிழக்கு ஐரோப்பாவிலும் ரஷ்யாவிலும் கொண்டாடப்படுகிறது. ஆங்கில இலக்கிய மேதை ஷேக்ஸ்பியருக்கு ஒப்பானவராக கருதப்படுவரே ரஷ்ய இலக்கிய சிருஷ்டி அலெக்சாண்டர் புஷ்கின்.

ரஷ்யக் கவிஞரும், காதல் கவிதைகள் யுகத்தின் சிறந்த படைப்பாளியுமான அலெக்ஸாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் (Alexander Sergeyevich Pushkin) ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் 1799 இல் பிறந்தவர். இளம் வயதிலேயே தனது நகர நூலகத்தில் பல புத்தகங்களைப் படித்தார். இந்தச் சூழல் அவருக்கு இலக்கிய தாகத்தை ஊற்றெடுக்க வைத்தது.

அவர் செயின்ட் பீட்டர்ஸ்பேர்கில் உள்ள பாடசாலையில் பயின்றார். படிக்கும் போதே 15 வயதில் தனது முதல் கவிதையை எழுதி வெளியிட்டார். அதன் பின்னர் விரைவிலேயே இலக்கிய உலகில் அங்கீகாரம் பெற்றார்.

அலெக்சாண்டர் புஷ்கின் தனது கவிதைகளிலும் நாடகங்களிலும் உரைநடையைக் கையாள்வதில் முன்னோடியாகவிருந்தார். அத்துடன் நவீன ரஷ்ய இலக்கியத்தில் ஒரு தனித்துவமான கதைசொல்லும் பாங்கையும் உருவாக்கியிருந்தார். இவை முன்னெப்போதுமில்லாத அளவில் பிற்கால



ரஷ்ய எழுத்தாளர்களிடம் மிகுந்த தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தன. ரஷ்ய இசையமைப்பாளர்களுக்கு இவரது கவிதைகள் உந்துசக்தியாக அமைந்தன. இவரது திஸ்டோன் கெஸ்ட், மொஸார்ட் அண்ட் ஸலியெரி ஆகிய நாடகங்கள் புகழ்பெற்றவை. புஷ்கின் எழுதிய நாவலான 'யூஜின் ஆனிஜின்', ரஷ்ய வாழ்க்கையின் கலைக்களஞ்சியம் எனப்படுகிறது.

'போரிஸ் குட்னவ்' என்ற தனது மிகவும் பிரபலமான நாடகத்தை எழுதினார். 1820 இல் ரஸ்லன் அண்ட் லுட்மிலா என்ற தனது முதல் நீண்ட கவிதையை வெளியிட்டார். குறுகிய காலமே வாழ்ந்த இவர், உரைநடை கவிதை, கவிதை, நாவல், சிறுகதை, நாடகம், விமர்சனக் கட்டுரைகள், கடிதங்கள் என இலக்கியத்தின் அனைத்து களங்களிலும் முத்திரை பதித்தார். சமூக சீர்திருத்தங்களில் இவரது கவனம் என்றும் இருந்தது. தீவிர இலக்கியவாதிகளுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார். ஜார்அரசின் கோபத்துக்கு ஆளானதால், தலைநகரைவிட்டு வெளியேறினார். காகசஸ், கிரிமியா ஆகிய இடங்களுக்குச் சென்றார். 1823 இல் பல காதல் காவியங்களைப் படைத்தார். இவரது படைப்புகள் பிற்கால ரஷ்ய எழுத்தாளர்களிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது 'நீல வானத்தின் கீழ்' எனும் கவிதை உலகப் பிரசித்தி பெற்றதாகும். சர்வதேச இலக்கிய வரலாற்றில் அலெக்சாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின் நிச்சயமாக மிகவும் பிரபலமான, மிகவும் போற்றப்பட்ட ரஷ்ய கவிஞரும், இலக்கிய சிருஷ்டியும் ஆவார். அத்துடன் அவர் ஒரு நாவலாசிரியர் மற்றும் நாடக ஆசிரியராகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(7 ஆம் பக்கம் பார்க்க)

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்த பெருவிழா தரும் மகத்தான மறையுண்மைகள்

கத்தோலிக்கத் திருச்சபை எதிர்வரும் ஞாயிறன்று கிறிஸ்துவின் தூய்மைமிகு உடல் மற்றும் இரத்தம் என்ற மறையுண்மையை விழாவாகக் கொண்டாடுகிறது. இயேசுவின் பிறப்பு, திருமுழுக்கு, தோற்றமாற்றம், உயிர்ப்பு, விண்ணேற்றம் என அவரது வாழ்வின் பல நிகழ்வுகளை நாம் விழாக்களாக கொண்டாடுகிறோம். ஒரு சில விழாக்கள்மட்டுமே ஒரு கருத்தை ஒரு மறை



யுண்மையை மையப்படுத்தி அமைந்துள்ளன. அவற்றில் கிறிஸ்துவின் தூய்மைமிகு உடல் மற்றும் இரத்தம் என்ற விழாவைக் கொண்டாடவுள்ளோம்.

கத்தோலிக்கத் திருமறையின் மிக முக்கியமான மறையுண்மை இது. மறையுண்மைகளுக்கு 'தூய்மைமிகு' என்ற அடைமொழியை வழங்கியுள்ளோம். திருஅவை வரலாற்றை திருப்பிப்பார்த்தால் 'தூய்மைமிகு' மறையுண்மைகள் 'விவாதங்கள் மிகுந்த' மறையுண்மைகளாகவும் விளங்கின என்பதை உணரலாம். பல நூற்றாண்டுகளாக மறையுண்மைகளையொட்டிய கேள்விகளும் விவாதங்களும் வலம்வந்துள்ளன.

கேள்விகள் கேட்பதும் விவாதங்கள் புரிவதும் அறிவை வளர்க்க மனிதர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அரிய கொடைகள்.

இக்கொடைகள் அறிவியல் வளர்ச்சிக்குப் பெருமளவு பயன்படுகின்றன. அறிவியல் உண்மைகளைக் கண்டுபிடிக்க கேள்விகளை விவாதங்களைப் பயன்படுத்துவதுபோல் அறிவுக்கு எட்டாத மறையுண்மைகளைக் கண்டுபிடிக்கவும் அதே முறைகளை நாம் பயன்படுத்தியுள்ளோம்.

மூவொரு கடவுள் என்ற மறையுண்மையை தன் அறிவுக்குள் அடக்கிவிடும் முயற்சியில் ஈடுபட்டிருந்த புனித அகுஸ்தினை நாம் அறிவோம். நம் கடவுள் 'எப்படி' மூன்று ஆட்களாய் அதே நேரம், ஒரே கடவுளாய் இருக்க முடியும் என்ற கேள்வி புனித அகுஸ்தினையும் இன்னும் பல இறையியல் மேதைகளையும் ஆட்கொண்டது.

இந்தக் கேள்விக்கு பதில் அளிப்பதில் கருத்து வேறுபாடுகளும், மோதல்களும் எழுந்தன.

கடற்கரையில் குழந்தை வடிவில் வானதூதரைச் சந்தித்த அனுபவம், புனித அகுஸ்தினை அறிவிலும் பணிவிலும் வளர்த்தது. எனவே, அவர், "அன்பைக் காணமுடிந்தால், மூவொரு கடவுளையும் காணமுடியும்" என்ற அற்புதக் கூற்றை பல தலைமுறைகளுக்கு, பாடமாக விட்டுச்சென்றார்.

நாம் கொண்டாடும் கிறிஸ்துவின் திரு உடல், திரு இரத்தம் என்ற மறையுண்மையில் அப்ப இரச வடிவில் கிறிஸ்து எப்படி பிரசன்னமாகியிருக்க முடியும் என்ற கேள்வி பல விவாதங்களை உருவாக்கியுள்ளது. 'எப்படி' என்ற கேள்வி நற்செய்தியிலும் ஒலிக்கிறது.

யோவான் 6:5152

இயேசு, யூதர்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியது: "விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக் கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்."

"நாம் உண்பதற்கு இவர் தமது சதையை எப்படிக் கொடுக்க இயலும்?" என்ற வாக்குவாதம் அவர்களிடையே எழுந்தது.

இவ்வுலகம் வாழும்பொருட்டு தன்னையே ஒரு கொடையாக வழங்கப்போவதாக இயேசு கூறியதை, சரியாகப் புரிந்துகொள்ளாமல் இது எப்படி இயலும் என்ற வாக்குவாதத்தை யூதர்கள் எழுப்பினர். அன்று எழுந்த 'எப்படி' என்ற வாக்குவாதம் பல நூற்றாண்டுகளாக திருஅவை வரலாற்றில், பல்வேறு வடிவங்களில், 'எப்படி' என்ற கேள்வியாக, விவாதமாக, வலம்வந்துள்ளது.

கேள்விகளால் மறையுண்மைகளை கூறுபோடும் முயற்சிகளைக் கைவிட்டு அந்த உண்மைக்குமுன் பணிவுடன் மண்டியிட்டு வணங்குவதே மனிதர்களுக்கு நலம் என்பதை புனிதர்கள் நமக்கு உணர்த்திச் சென்றுள்ளனர்.

மறையுண்மைகளை அறிவுக்குள் அடக்கிவிடும் முயற்சியில் எழுப்பப்படும் 'எப்படி' என்ற கேள்விக்குப் பதில் இந்த மறையுண்மைகள் 'ஏன்' நமக்கு வழங்கப்பட்டுள்ளன என்பதைப் புரிந்துகொள்வது மேல் என்பதை புனித அகுஸ்தின் போன்ற புனிதர்கள் புரிந்துகொண்டனர்.

இயேசுவின் பிரசன்னம் எப்படி அந்த அப்ப இரச வடிவில் உள்ளதென்பதைக் கூறும் இறையியல் விளக்கங்கள் பல நூல்களாக வெளிவந்துள்ளன. எப்படி என்ற கேள்விக்குப் பதிலாக ஏன் நம் இறைமகன் இயேசு அப்ப இரச வடிவில் நம்முடன் தங்கியுள்ளார் என்பதை உணர்ந்து கொள்வது நமக்குப் பயனளிக்கும்.

இறைமகன் ஏன் அப்ப இரச வடிவில் தன் பிரசன்னத்தை இந்த உலகில் விட்டுச்சென்றார்? அப்பமும், இரசமும் இஸ்ரயேல் மக்கள் தினமும் உண்ட எளிய உணவாக இருந்ததால் அவற்றின் வழியே தன் பிரசன்னத்தை விட்டுச் செல்ல இயேசு விழைந்தார்.

அடுத்து எந்த ஓர் உணவையும் நாம் உண்டபின் அது நம் உடலின் இரத்தமாக, தசையாக, எலும்பாக, நரம்பாக மாறிவிடுகிறது என்பது அடுத்த காரணமாக அமைந்திருக்க வேண்டும்.. அப்பத்திற்கும் இரசத்திற்கும் உள்ள இந்த அடிப்படை குணங்கள் தனக்கும் உண்டு என்பதை நிலைநாட்ட இயேசு இந்த வடிவைத் தேர்ந்தெடுத்தார். எளிய உணவாக நாம் தினமும் உண்ணும் உணவாக, நம் உடலாகவே மாறி நம்மை வாழவைக்கும் உணவாக, இறைவன் நம்முடன் வாழ்கிறார் என்பது நமக்கெல்லாம் தரப்பட்டுள்ள அற்புதமான கொடை. இந்தக் கொடையை, இந்த அன்புப் பரிசைக் கொண்டாடும் திருநாளே, இயேசுவின் திருஉடல், திருஇரத்தம் பெருவிழா.

தம்மையே மக்களுக்கென வழங்கிய இயேசுவைப் போல நாமும் மக்களின் நல்வாழ்வுக்கு, ஏதோ ஒரு வகையில், நம்மையே வழங்கும் வழிகளை கற்றுக் கொள் கிறிஸ்துவின் தூய்மை மிகு திருஉடல், திரு இரத்தப் பெருவிழா நமக்கு உதவுவதாக.

**-ஜெரோம் லூயிஸ்**

## குடும்ப வேர்கள் எனும் கலாசார பாரம்பரியம் கட்டிக்காக்கப்படவேண்டும்

### திருத்தந்தை பிரான்சிஸ்



குடும்ப வேர்கள் என்னும் கலாச்சாரப் பாரம்பரியத்தை எப்போதும் கொடையாக வைத்துக்கொள்ளுங்கள் என்றும் அவற்றை கேடயமாகவோ பாதுகாப்பு அரண்களாகவோ மாற்றுவதல்லாமல் மாறாக பகிர்ந்து கொள்வதற்கான செல்வமாக வைத்துக் கொள்ளுங்கள் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை வத்திக்கான் புனித பேதுரு பெஸிலிக்கா பேராலயத்தில் திருப்பயணிகள் 1000 பேரை சந்தித்த நிகழ்வின்போதே திருத்தந்தை பிரான்சிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

*Pacem in terris* என்னும் சுற்றுமடல் வெளியிடப்பட்டதன் 60ஆம் ஆண்டு நிறைவு மற்றும் திருத்தந்தை 23ஆம் யோவானின் விண்ணக பிறப்பு, பாப்பரசர் ஆறாம் பவுல் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு நிறைவையும் திருத்தந்தை பிரான்சிஸ் அதன்போது நினைவுகூர்ந்தார்.

இத்தாலியின் பெர்கமோ பிரேசியா ஆகிய பகுதிகளில் பிறந்து திருத்தந்தையர்களாகப் பணியாற்றி மறைந்த புனிதர்கள் விட்டுச்சென்ற புனித பாதைகள், கலாசாரங்கள் ஆகியவற்றினை நிலத்தின் வேர்களாக பாதுகாத்து செயற்படுத்த அந்த திருப்பயணிகளுக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை.

**-மெரீனா ராஜ்**




## கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய கொடியேற்றம்






கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. திருத்தலத்தின் பரிபாலகர் அருட்பணி லலித் பெரேரா அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற கொடியேற்ற நிகழ்வில், புனித அந்தோனியாரின் கொடி ஆசீர்வதிக்கப்பட்டு உயர்த்தப்படுவதையும் கலந்துகொண்ட விசுவாசிகளையும் படங்களில் காணலாம்.

# உறவின் மகத்துவத்தை உணர்த்தும் மரியன்னை - எலிசபெத் சந்திப்பு திருநாள்

கத்தோலிக்கத் திருச்சபையானது மே மாதத்தில் முக்கிய பல திருவிழாக்களைக் கொண்டாடுகிறது.

அந்த வகையில் அன்னை மரியாள் தம் உறவினர் எலிசபெத் கருவுற்றதை வானதூதரின் வழியாக அறிந்துகொண்டு அவரை சந்தித்த நிகழ்வைக் கொண்டாடும் விழாவை கத்தோலிக்கத் திருச்சபை மே 31ஆந் திகதி சிறப்பித்தது.

மரியாளை 'ஆண்டவரின் தாய்' என்று தூய ஆவியாரின் தூண்டுதலால் எலிசபெத் அறிக்கையிட்டதை இந்த விழா நமக்கு நினைவூட்டுகிறது.

மரியன்னை எலிசபெத்தம்மாளை சந்தித்த சம்பவமானது திருச்சபையில் முக்கியத்துவமளித்து கௌரவிக்கும் நிகழ்வாகிறது.

பரிசுத்த வேதாகமத்தில் இந்த சந்திப்பு இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"மரியா புறப்பட்டு யூதேயா மலைநாட்டிலுள்ள ஓர் ஊருக்கு விரைந்து சென்றார். அவர் செக்கரியாவின் வீட்டை அடைந்து எலிசபெத்தை வாழ்த்தினார். "மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டபொழுது அவர் வயிற்றிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளிற்று. எலிசபெத் தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்.

அப்போது அவர் உரத்த குரலில், "பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவள்: உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்? உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றினுள்ளே குழந்தை பேருவகையால் துள்ளிற்று. ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர் என்றார்.

அதைக் கேட்ட மரியாள் பின்வருமாறு கூறினார்: ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது. ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர்" என்பர்.

ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர். அவருக்கு அஞ்சி நடப்போருக்குத் தலைமுறை தலைமுறையாய் அவர் இரக்கம் காட்டி வருகிறார். அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்: உள்ளத்தில் செருக்குடன்



சிந்திப்போரைச் சிதறடித்து வருகிறார். வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்: தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். (53.... 56)

இந்தச் சந்திப்பில் பரிசுத்த ஆவியானவரின் செயற்பாடு காணப்படுகிறது. கர்ப்பிணியாக இருந்த அன்னை மரியாள் தமது அசௌகரியங்களைப் பாராது இன்னொரு கர்ப்பிணியான எலிசபெத்தைச் சந்திக்கச் செல்கின்றார். இது உறவுகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தைக் காட்டுகிறது.

அதேபோன்று, ஒருவரை ஒருவர் வாழ்த்தும் போது அந்த வாழ்த்து நம்மில் ஏற்படுத்தும் மாற்றங்களின் தன்மையையும் இந்த சந்திப்பு எமக்கு எடுத்துரைக்கிறது. இக்காலத்தில் ஒருவரை வாழ்த்துவது போற்றுவது என்பது மிக அரிதாகி வருகின்றது. அதுவும் நேரில் சென்று மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு பிறரை வாழ்த்துவது அதிலும் அரிது.

எமது எதிரிகளைக் கூட நாமே தேடிச் சென்று அவரிடம் பேசுவதும் மன்னிப்புக் கேட்பதும் அவரில் மாற்றத்தை ஏற்படுத்துவது உறுதி. இத்தகைய சந்திப்புகள் அன்றைய தினத்தில் மட்டுமன்றி முழு வாழ்க்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்துவதும் உண்டு.

**- எல். செல்வா...**

## கிழக்கில் சுரங்கம்,...

செயலாளருடன் பொதுமக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினார். மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் சுரங்கம் மற்றும் மணல் அகழ்வு நடைபெற்று வருவதாக குற்றச்சாட்டுகள் கிடைத்து வருவதாக இதன் போது ஆளுநரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

## பயங்கரவாத எதிர்ப்புச்...

விஜேயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார். நீதி அமைச்சர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளுடன் இந்த பேச்சுவார்த்தையை மேற்கொள்ளமுடியும் என்றும் கலந்துரையாடலுக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்ளும் வகையில், இந்த கலந்துரையாடலில் பங்குபற்ற விரும்புவர்கள் எதிர்வரும் ஜூன் 12ஆம் திகதிக்கு முன்பதாக justicemedia07@gmail.com என்ற ஈ மெயில் அல்லது 0112470822 இலக்க பெக்ஸ் மூலமாக நீதி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். தற்போது நடைமுறையிலுள்ள 1979 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, புதிய சட்ட மூலம் ஒன்றை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளது. இதையடுத்து, விசேட நிபுணர்கள் குழு ஒன்றை நியமித்து இந்த சட்ட மூலத்தை நீதியமைச்சு தயாரித்துள்ளது.

அந்த சட்ட மூலம் கடந்த மார்ச் (17) வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. documents.gov.lk என்ற இணையதளத்தில் இதனை பார்வையிட முடியும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

## உணவு பொருட்களின்....

இந்நிலையில், அதிகரித்துள்ள கோழி இறைச்சியின் விலைகள்,அடுத்த சில வாரங்களில் குறையலாமென அகில இலங்கை கோழிப்பண்ணையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சியின் விலை அதிகரிக்கப்படவில்லையென அச்சங்கத்தின் தலைவர் அஜித் குணசேக்கர குறிப்பிட்டுள்ளார்.

## பேக்கரி உற்பத்திகளின் ....

எரிவாயு மூலம் வெதுப்பக உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். இதன் காரணமாக, பேக்கரி உணவு உற்பத்தி பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்கமுடியாது. அதே நேரம், சமையல் எரிவாயு விலைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் விலைத்திருத்தங்களை தமது சங்கம் மேற்கொள்விலையென அகில இலங்கை பேக்கரி உற்பத்தி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## தங்கத்தின் விலை...

24 கேரட் 01 கிராம் – 20,100 ரூபா, 24 கேரட் 08 கிராம் (01 பவுண்) – 1,60,800 ரூ, 22 கேரட் 01 கிராம் – 18,4300, 22 ரூபா, கேரட் 08 கிராம் (01 பவுண்) – ரூ.147,400, 21 கேரட் 01 கிராம் – ரூ. 17,590, 21 கேரட் 08 கிராம் (1 பவுண்) – ரூ.140,700 என பதிவாகியுள்ளது.

## ஆலய தேர்த் திருவிழாவில்....

பூசாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் இங்கிரிய பிரதேசத்திலுள்ள கோவில் ஒன்றின் பூசாரி என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை அறியப்படவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முச்சக்கர வண்டியில்....

சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கர வண்டியை மக்கள் மறித்துள்ளனர்.

முச்சக்கர வண்டிக்குள், நான்கு கால்களும் கட்டப்பட்டு தலைகீழாக மாட்டை வைத்து அதனை இறப்பர் சீற்றால் சுற்றி கடத்திச் செல்வதை அவதானித்துள்ளனர். உடனடியாக பொலிஸாருக்கும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்கும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனுக்கும் தகவல் வழங்கப்பட்டது. இதனையடுத்து இரு பகுதியினரும் சம்பவ இடத்திற்கு சென்றிருந்தனர்.

மாட்டை முச்சக்கர வண்டியில் கொண்டு சென்றவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதுடன், மாட்டை இறைச்சிக்காக வெட்ட கொடுப்பதற்கு கொண்டு சென்றதை அவர் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து, இரவு ஒன்றரை மணிவரை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஊர்மக்களுடன் இணைந்து மாட்டை திருடுவதற்கு துணை நின்ற மற்றும் ஒரு நபரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

## யோஹானிக்கு....

கலை சிறப்பிப்புக்கான அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் உலகளாவிய அளவில் கலாசார பன்முகத் தன்மையை மேம்படுத்துவதற்கான அர்ப்பணிப்பை, கோல்டன் விசா அங்கீகரிக்கிறது.

Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

### Rate cuts will lead to more funds shifting into the Stock Market...

Daily Market Watch
05th June 2023

#### Market Commentary

The Stock Market opened the week with the All Share Price Index gaining 0.15% to close at 8,766.60 while the S&P SL 20 Index rose by 0.10% to close at 2,489.88. Turnover recorded LKR 710 million with John Keells Holdings accounting for 38% of the total.

Meanwhile, tourist arrivals recorded 83,309 for the month of May 2023, up by 176%YoY. Cumulative tourist arrivals for the first five months of 2023 recorded 524,486 compared to 378,521 reported during the same period in 2022. Together with improving macro economic conditions and last week's 250 bps policy rate cut, and our expectation of further rate cuts over the next few months, we expect investor confidence to increase and more funds to shift into the Stock Market.


#### Top Gainers and Loosers




#### Market Performance

| | 05.06.2023 | 02.06.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 8,766.6 | 8,753.8 | 0.15 |
| S&P SL 20 Index | 2,489.9 | 2,487.3 | 0.10 |
| Turnover (LKR mn) | 710.4 | 738.5 | -3.8 |
| Foreign Purchases (LKR mn) | 12.5 | 8.3 | 51.1 |
| Foreign Sales (LKR mn) | 8.5 | 20.3 | -58.1 |
| Market Cap (LKR bn) | 3,698.9 | 3,698.3 | 0.0 |
| Market Cap (US$ bn) | 12.7 | 12.7 | 0.0 |
| Traded Companies | 239 | 243 | -1.6 |
| Market PER (x) | 4.8 | 4.8 | 0.0 |
| Price to Book (x) | 0.9 | 0.9 | 0.0 |
| Dividend Yield (%) | 4.3 | 4.3 | 0.0 |


#### Relative Strength Index (RSI)




#### Contributors to ASPI




#### Turnover Breakdown





#### Key Rates

| | 05.06.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 20.29% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.84% |
| Treasury Bill Rate (364 Days) | 22.91% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 25.20% |

#### Market Benchmarks




#### Largest Trades




#### Corporate News

CASH DIVIDENDS
Aitken Spence PLC (SPEN) - LKR 4.00. XD date – 04.07.2023.
Royal Ceramics Lanka PLC (RCL) - LKR 0.50. XD date – 04.07.2023.
LB Finance PLC (LFIN) - LKR 3.00. XD date – 04.07.2023.
Central Finance Company PLC (CFIN) - LKR 1.75. XD date – 04.07.2023.
Swisstek (Ceylon) PLC (PARQ) - LKR 0.20. XD date – 04.07.2023.
Lanka Tiles PLC (TILE) - LKR 1.10. XD date – 24.07.2023.
Lanka Walltile PLC (LWL) - LKR 0.90. XD date – 04.07.2023.
Aitken Spence PLC (SPEN) - LKR 4.00. XD date – 28.06.2023.
C I C Holdings PLC (HHL) - LKR 2.50. XD date – 04.07.2023.
Watawala Plantations PLC (WATA) - LKR 4.00. XD date – 26.06.2023.
Sunshine Holdings PLC (SUN) - LKR 1.15. XD date – 26.06.2023.
Central Industries PLC (CIND) - LKR 3.00. XD date – 30.06.2023.
Hemas Holdings PLC (HHL) - LKR 1.95. XD date – 04.07.2023.
Hayleys Fabric PLC (MGT) - LKR 0.10. XD date – 26.06.2023.
Kelani Valley Plantations PLC (KVAL)- LKR 1.50. XD date – 27.06.2023.
Dipped Product PLC (DIPD) - LKR 0.50. XD date – 28.06.2023.
Haycarb PLC (HAYC) - LKR 1.00. XD date – 30.06.2023.
Keells Food Products PLC (KFP) - LKR 0.50. XD date – 30.06.2023.
PGP Glass Ceylon PLC (GLAS) - LKR 1.66. XD date – 20.07.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

# பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் திருவாசக முற்றோதல்

பதுளை மாவட்டம், பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணி சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவ காலத்தை முன்னிட்டு எதிர்வரும் 10.06.2023 சனிக்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல்' நிகழ்வு நடைபெற திருவருள் கூடியுள்ளது. இவ் திருவாசக முற்றோதலில், தமிழ்நாடு இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள 'திருமுறைச் செல்வன்', 'பண்ணிசை மணி' திரு.அ.முத்துக்குமார் ஓதுவார் அவர்களும் கலந்து சிறப்பிக்க இருக்கின்றார்கள்.

இந்தியாவின் காரைக்குடியை பிறப்பிடமாகக் கொண்ட இவர் இந்தியாவில் சகல பிரதேசங்களுக்கும் திருமுறை இசைப்பயணங்களை மேற்கொண்டுள்ளார். ஓதுவார் பணியில் சுமார் இருபது வருட அனுபவம் கொண்ட இந் உலகின் பல சிறப்புவாய்ந்த ஆலயங்களின் கும்பாபிஷேக நிகழ்வுகளிலும், சமய மேடைகளிலும், ஆலய திருவிழாக்களிலும் கலந்து பாடியுள்ளதோடு, தற்போது காஜாங், மலேசியா அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் ஓதுவராய்ப் பணி புரிவதும் குறிப்பிடத்தக்கது.

இந்த திருவாசக முற்றோதலில் 51 பதிகங்கள் 658 பாடல்கள் பாடப்படும். அனைத்தும் முழுமையாக பாடப்படும். 'தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவருக்கும் இறவா போற்றி' என பாடிப் பரவ அனைவரும் வாருங்கள் என ஆலய பரிபாலன சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.



## ஏ 09 வீதியில்....

விபத்து நேற்று நள்ளிரவு 12 மணியளவில் கனகராயன் குளத்துக்கும் மாங்குளத்துக்குமிடையில் 212ஆவது கிலோமீற்றர் பகுதியில் இடம்பெற்றது. விபத்தையடுத்து டிப்பர் வாகனம் அங்கிருந்து சென்றதுடன் பொது மக்கள் உதவியுடன் ஹையேஸ் வாகனத்திலிருந்த 07 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு 1990 அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## QR ஒதுக்கு...

எரிபொருள் முன்பதிவை தாமதமாக்குகின்றனர்.

இவ்வாறானவர்கள் இப்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்படவுள்ளன.

நிரப்பு நிலையங்களில், QR முறைமை நடைமுறையில் உள்ளதால் எரிபொருளுக்காக வரிசைகள் ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். இன்னும் இரண்டு மாதங்களில், 150 நிரப்பு நிலையங்களுடன் சினோபெக் நிறுவனம் விநியோக நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிறுவனம் விநியோகத்தை ஆரம்பித்ததன் பின்னர், தற்போது நடைமுறையிலுள்ள QR குறியீட்டு முறைமை நீக்கப்படுமென மின் சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த தெரிவித்துள்ளார்.

## உயிராபத்தை...

கொவிட் 19 நோய் தொடர்பான சுகாதார அமைச்சின் பிரதான இணைப்பாளரான டாக்டர் ஹம்தானி, இந்த HMPV வைரஸ் அமெரிக்க ஐக்கியஇராச்சியம் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகளில் மிக வேகமாக பரவி வருவதாக குறிப்பிட்டுள்ளார். இதனால், இலங்கையிலும் அது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டுமென கேட்டுள்ளார். கொவிட்19 மற்றும் காய்ச்சல் அறிகுறி யுடனான இந்த வைரஸ் சுவாசத்தின் ஊடாக உயிராபத்தை ஏற்படுத்தக் கூடியது என்றும், இதுவரை இலங்கையில் அதன் பரவல் காணப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இது தொடர்பில் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார்.

## தென்னிலங்கையில்....

இதற்கமைய, மேல், சப் ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் நேற்று (05) அடிக்கடி மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்பட்டதாகவும் திணைக்களம் தெரிவித்திருந்தது.

அத்துடன், நாடு முழுவதும் மணிக்கு 40 தொடக்கம் 45 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி காலப்பகுதியில், நாட்டின் பல பகுதியில் அதிகளவான மழைவீழ்ச்சி காலி மாவட்டத்தின் ஹினிதும பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. அப்பகுதியில் 101 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் இரண்டு நாட்களாக பெய்து வரும் கடும் மழையினால், நேற்று மாலை புலத்சிங்கள மொல்காவ, பரகொட, நாலியத்த பிரதேசங்களில் பல ஆறுகள் பெருக்கெடுத்து ஓடின. இதனால்,வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியதாக புலத்சிங்கள பிரதேச செயலாளர் ரங்கன பிரசாத் பெரேரா தெரிவித்தார்.

குக்குலேகங்கை அனல்மின் நிலையத்தின் வான் கதவுகள் திறக்கப்பட்டதையடுத்து குடா கங்கையின் தாழ்வான பகுதிகள் மற்றும் பாலிந்த கண்டி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாழ்வான பகுதிகள், வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி போக்குவரத்து தடைப்பட்டது.

நேற்று முன்தினம் மாலை குக்குலே கங்கை மின் நிலையத்தின் வான்கதவு திறக்கப்பட்டு நொடிக்கு 70 கனமீற்றர் நீர் கொள்ளளவு சிறிய ஆற்றில் திறந்து விடப்பட்டதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

பாலிந்த நுவர பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மகுரு ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால், பதுரலிய ஹெடிகல்ல வீதி மற்றும் அப்பகுதியில் உள்ள பல வீதிகள் நீரில் மூழ்கி நேற்று மாலை வரை போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. கடும் மழையால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் 43 குடும்பங்களைச் சேர்ந்த 149 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## பழங்கால கட்டடங்களை... (03 ஆம் பக்கத் தொடர்)

தொன்மைக்கு சேதம் விளைவிக்காத வகையில், நவீனமயப்படுத்தப்படுமென, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். நாட்டில் உள்ள பழமையான கட்டடங்கள் பல, முறையான பராமரிப்பு இல்லாததால் பாழடைந்து வருகின்றன. அவற்றை நவீனமயமாக்கி முதலீடுகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு வருமானம் ஈட்ட முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த காலத்தில் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி மெல்ல, மெல்ல தீர்க்கப்பட்டு வருகிறது. எனவே, எதிர்காலத்தில் நாட்டில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆதரவு கிடைக்குமெனவும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வேலைத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கினார். இத்திட்டத்திற்குப் பயன்படுத்தக்கூடிய வேறு இடங்களைத் தேடி அதற்கேற்ற வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறும் அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தற்போது நாடு முழுவதிலுமுள்ள இவ்வாறான இடங்கள் தொடர்பான தகவல்களை பெற்று வருவதாகவும், எதிர்காலத்தில் அந்த இடங்களையும் இந்த வேலைத்திட்டத்திற்கு பயன்படுத்த முடியும் எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## போதகர் ஜெரோமிடம்....

குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகி தங்க விற்பனை தொடர்பிலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளாரென்பதையும் அவர் நீதிமன்றத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அவரது செயற்பாடுகள் 14 நாடுகளில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் அதன்போது குறிப்பிட்டுள்ளார்.

மதங்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிட்ட குற்றத்துக்காக குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களம் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவை கைது செய்யவுள்ளதாக தெரிவித்துள்ள அவர், அதனை இரத்துச்செய்யக்கோரி இடைக்கால தடையுத்தரவொன்றை விடுக்குமாறு தாக்கல்செய்துள்ள அடிப்படை உரிமை மனுமீதான விசாரணை நேற்று நீதிமன்றத்தில் இடம்பெற்ற போதே, சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்த்தன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நீதிபதிகளான எஸ். துரைராஜா, குமுதினி விக்கிரமசிங்க மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் மனுமீதான விசாரணை நேற்று நடைபெற்றுள்ளது. அதன்போது அந்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவதற்கு நேற்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள மனுவை இரத்துச் செய்யுமாறு கோரி இடைத்தரப்பினர் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளனர். அதற்கிணங்க எல்லே குணவன்ச தேரர் உள்ளிட்ட அந்த 07 மதத் தலைவர்கள் சார்பில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்த்தன, விடயங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ பௌத்த, இந்து, இஸ்லாம் மதங்களுக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுள்ளாரென அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அதற்கு எதிராக இந்த இடைத்தரப்பினர் உச்ச நீதிமன்றத்திற்கு இதற்கு முன்பு அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளதுடன் அந்த மனுமீதான விசாரணை முன்னெடுக்கப்பட்ட போது, போதகரான ஜெரோம் பெர்னாண்டோ தொடர்பில் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொள்வதென சட்ட மாஅதிபர் உச்ச நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ளாரென சட்டத்தரணி சஞ்ஜீவ ஜயவர்த்தன நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அந்த விடயங்கள் தொடர்பிலான முன்னேற்றம் சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் ஜூலை 28 ஆம் திகதி விசாரணையை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கு மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி ரியென்சி அர்சகுலரத்ன, இந்த மனு தொடர்பில் விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் இடைப்பட்ட தரப்பினர் மனு தாக்கல் செய்துள்ள நிலையில் அதனை மேற்கொள்ள முடியாது.

அந்த இடைப்பட்ட தரப்பினர் இதற்கு முன்னர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக கூறப்படும் அடிப்படை உரிமை மனுவுடன் சம்பந்தப்பட்ட எந்த ஆவணமும் தமக்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தமது தரப்பினருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது வெளிநாட்டிலுள்ள அவர் நாடு திரும்பும் போது கைது செய்யப்படும் நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அவ்வாறானால் இந்த மனு தொடர்பில் விடயங்களை முன் வைப்பதற்கு திகதியொன்றை பெற்றுத் தருமாறும் அவர் நீதிமன்றத்தைக் கேட்டுக்கொண்டார். எனினும் இடைப்பட்ட தரப்பினர் மனு தொடர்பில் தான் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்போது சட்டமா அதிபரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் பிரியந்த தாவான, எவ்வாறாயினும் மேற்படி இடைத்தரப்பு மனு தொடர்பில் தாமும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விடயங்களை கவனத்திற்கொண்ட நீதிமன்றம் இடைத்தரப்பினரின் மனுவுக்கு அனுமதி வழங்கியதுடன் அது தொடர்பான எதிர்ப்புகளை மூன்று வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறும் பிரதிவாதிகள் தரப்புக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

## 648 Gas சிலிண்டர்களுடன்... (03 ஆம் பக்கத் தொடர்)

தந்தை மரணமடைந்ததையடுத்து சொத்துக்களைப் பிரிப்பதில் ஏற்பட்டுள்ள தனிப்பட்ட குரோதம் காரணமாக தாம், இந்த திருட்டை மேற்கொண்டதாகவிசாரணைகளின்போது சந்தேக நபர் தெரிவித்ததாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். சந்தேக நபரை வவுனியா மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## இணையம் ஊடாக... (03 ஆம் பக்கத் தொடர்)

களுத்துறை, திஹாகொடகேகாலை, அநுராதபுரம், கிராண்ட்பாஸ், கொடகவெல ஆகிய பொலிஸ் நிலையங்களில், இச்சந்தேக நபருக்கு எதிராக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## பீகாரில் இடிந்து விழுந்த... (03 ஆம் பக்கத் தொடர்)

2014 ஆம் ஆண்டு முதலமைச்சர் நிதீஷ் குமார் இப்பாலத்தை திறந்து வைத்திருந்தார். கடந்த வருடமும் இப் பாலத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது.

தற்போது இந்தப்பாலம் 1,700 கோடி செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. ககாரியா, பாகல்பூர் மாவட்டங்களை இணைக்கும் வகையில் கங்கை நதியில் இந்தப் பாலம் நிர்மாணிக்கப்படுகிறது.

இப்பாலம் இடிந்தமை குறித்து விசாரணை நடந்த முதலமைச்சர் நிதீஷ் குமார் உத்தரவிட்டுள்ளார். தவறிழைத்த அதிகாரிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இச்சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட மாநில எதிர்க்கட்சித் தலைவரான, பிஜேபியைச் சேர்ந்த சமரத் சௌதரி, முதலமைச்சர் நிதீஷ்குமார் தலைமையிலான பீஹார் அரசாங்கத்தில் ஊழல் பரவலாகியுள்ளதென குற்றம் சுமத்தியுள்ளார்.

## இலங்கையின் கடல்....

இதுகுறித்து கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாலைதீவு கடற்றொழில் மற்றும் விவசாயத் துறை அமைச்சர் ஹுசைன் ரஸீட் ஹசனுடன் கலந்துரையாடினார்.

இலங்கைக்கு வந்துள்ள மாலைதீவு கடற்றொழில் மற்றும் விவசாயத்துறை அமைச்சர் நேற்று (05) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது, இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான நீண்ட நட்புறவுகள் நினைவுபடுத்தப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழிலை பிரதானமான பொருளாதாரமாகக் கொண்டுள்ள மாலைதீவின் அனுபங்கள், தொழில்நுட்பங்களை பகிர்ந்து கொள்ள ஆர்வமாக உள்ளோம். இதற்கான திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுப்பது ஆரோக்கியமானது.

குறிப்பாக, அரபிக் கடலில் மீன் பிடிக்கச் செல்வதற்கான பயணப் பாதையாக மாலைதீவு கடல் பரப்பை இலங்கை கடற்றொழிலாளர்கள் பயன்படுத்த அனுமதிப்பது அவசியம். ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இலங்கை கடற்றொழிலாளர்கள் அசாதாரண சூழலை எதிர்கொள்ளும் சந்தர்ப்பங்களில் அவர்களை பாதுகாப்பதற்கான இணைந்த பொறிமுறை ஒன்றின் அவசியம்.

அதேபோன்று சீநோர் நிறுவனத்தின் ஊடாக உற்பத்தி செய்யப்படும் மீன்பிடிப் படகுகளுக்கு மாலைதீவில் சந்தை வாய்ப்பை உருவாக்கிக் கொள்வதும் சிறந்தது. நீர்வேளாண்மை மூலம் உற்பத்தி செய்யப்படுகின்ற மீன்களுக்கான உணவுகளை பெற்றுக்கொள்வது மற்றும் தரமான உணவுகளை இலங்கையில் உற்பத்தி செய்தல் தொடர்பாகவும் அமைச்சர் தனது கருத்தை வெளிப்படுத்தினார்.

இந்நிலையில் கருத்து தெரிவித்த மாலைதீவு கடற்றொழில் அமைச்சர், நட்பு நாடு என்ற வகையில் சாத்தியமான அனைத்து வகையான ஒத்துழைப்புக்களும் உதவிகளும் தொடரும். மாலைதீவு கடற் பரப்பை பயணப் பாதையாக பயன்படுத்த விரும்பினால் 72 மணி நேரத்துக்கு முன்னர் மாலைதீவு அதிகாரிகளுக்கு தெரியப்படுத்திய பின்னர் பயணிக்க முடியும். இலங்கை கடற்றொழில் அமைச்சரின் ஏனைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்கள் தொர்பாக ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

குறிப்பாக, மாலைதீவின் பிரதான மீன்பிடி முறையான தூண்டில் முறையை இலங்கையில் விருத்தி செய்வதன் மூலம் கரையோர மீன்பிடியை விருத்தி செய்வதுடன் இலங்கையை சூழவுள்ள கடல் வளத்தை முழுமையாக பயன்படுத்தும் நிலை ஏற்படும். ஆழ்கடல் தொழிலில் ஏற்படுகின்ற கால விரயம் மற்றும் உற்பத்தி செலவு போன்றவற்றையும் மீதப்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கை கடற்றொழிலாளர்கள் ஐஸ் கட்டிகளுக்காக கணிசமானளவு செலவு செய்வதை சுட்டிக்காட்டிய மாலைதீவு கடற்றொழில் அமைச்சர், தங்களது நாட்டில் கடற்றொழிலாளர்கள் பயன்படுத்தும் குளிர் நீர் பொறிமுறையை பயன்படுத்துவதன் மூலம் செலவை குறைத்துக் கொள்ள முடியும் என்றார். இது தொடர்பான தொழில்நுட்பங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

## தங்கத்தை நாட்டுக்குள்... (03 ஆம் பக்கத் தொடர்)

35 வயதுடைய இவர், இதற்கு முன்னரும் பல தடவைகள் இலங்கைக்கு விஜயம் செய்திருப்பது தெரிய வந்துள்ளது.

இவர், இம்முறை 24 மணி நேரம் தங்குவதற்கு மாத்திரம் இலங்கைக்கு வந்துள்ளார். இதைக் கருத்திற் கொண்ட சுங்க அதிகாரிகள், அவரது பயணப் பொதிகளை பரிசோதித்தனர்.இதன்போதே, சுங்க அதிகாரிகள் தங்கத்தை கண்டுபிடித்ததாக சுங்கத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இச்சந்தேக நபர் (03) காலை 6.45 மணியளவில் பாரிஸிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL501 இல், கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இதன்போது மேற்கொள்ளப்பட்ட சோதனையிலே, இவரது பொதியிலிருந்து தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் சோதனையில் அதனைக் கண்டுபிடிக்க முடியாத வகையில் அவற்றின் மீது கறுப்புப் பூச்சு பூசப்பட்டிருந்ததாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரான பிரான்ஸ் நாட்டவர் தண்டப்பணத்தை செலுத்த தவறியதால், சுங்க அதிகாரிகளால் நீர்கொழும்பு பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார். இவரை (08) வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# 'எக்டோ நூலக வாரம் -2023' அங்குரார்ப்பண நிகழ்வு

கல்முனை கல்வி கலாசார மேம்பாட்டுத் தாபனத்தினால் (எக்டோ) ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் எக்டோ நூலகத்தின் 20 ஆம் ஆண்டு பூர்த்தியினை முன்னிட்டு, மாணவர்கள் மற்றும் வாசகர்களை நூலகத்தில் அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளுதல், வாசிப்புத் திறனை மேம்படுத்துதல் மற்றும் நூல்களை சேகரித்தல் போன்ற நோக்கத்திற்காக 27.05.2023 தொடக்கம் 04.06.2023 வரை 'எக்டோ நூலக வாரம்2023' எனும் தொனிப்பொருளில் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு 27.05.2023 அன்று எக்டோ நூலகத்தின் கேட்போர் கூடத்தில் தாபனத்தின் தலைவர் எஸ்.எல்.எம். றிசாத் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலியும், விஷேட அதிதிகளாக கல்முனை அல்பஹ்ரியா மகா வித்தியாலய (தேசிய பாடசாலை) அதிபர் எம்.எஸ்.எம். பைசால், கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் வித்யாலய அதிபர் ஏ.ஜி.எம். றிசாத், கல்முனை அஷ்ஹறா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர். மஜீதியா, கல்முனை அல்மிஸ்பாஹ் மகா வித்தியாலய பிரதி அதிபர் ஐ.எல். எம். ஜின்னாஹ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், அப்துல் கபூர் ஞாபகார்த்த கல்லூரியின் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நூலக அங்கத்தவர்கள், ஏனைய உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

கலந்து கொண்ட அனைத்து அதிதிகளாலும் வாசிப்புப் பழக்கத்தினை அதிகரிப்பதற்கும் அறிவுத்திறனை விருத்தி செய்வதற்கும் இதர கல்வித் தேவையினை தேடிப் படிப்பதற்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தினை பயன்படுத்திக்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இதன் மற்றுமொரு அங்கமாக, இக்குறித்த காலப்பகுதியினுள் நூலகத்தில் புதிய அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளும் மாணவர்கள், வாசகர்கள் மற்றும் அங்கத்துவத்தை புதுப்பிப்பவர்களுக்கு அங்கத்துவக் கட்டணம் இலவசமாக்கப்பட்டுள்ளது.

அத்தோடு புதிதாக இணைந்து கொள்ளும் மாணவர்களை ஊக்குவிக்கும் முகமாக 10 மாணவர்களுக்கு குலுக்கல் முறையில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. மேலும் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அத்துடன்,நூலகத்திற்காக புத்தகங்களை சேகரிக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்படுகின்றது.







இந்நிகழ்வில் கல்முனை அஷ்ஹறா வித்யாலய அதிபர் எம். எச்.எஸ்.ஆர். மஜீதியா அவர்களாலும், அப்துல் கபூர் ஞாபகார்த்த கல்லூரியின் பழைய மாணவி பாத்திமா நஸ்கத் அவர்களாலும் ஒரு தொகுதி நூல்கள் எக்டோ நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டன.

மேலும், இத்தாபனம் மற்றும் நூலகத்தின் வளர்ச்சியில் சிரேஷ்ட ஆலோசகர்களாக இருந்து வழிநடத்திய பேராசிரியர் மர்ஹூம் ஏ.எல். எம். அப்துல் கபூர், முன்னாள் அதிபர் மர்ஹூம் எம்.வை.எம்.எச். காரியப்பர் ஆகியோரை நினைவு கூரும் முகமாக இந்நிகழ்வில் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**பி. எம். எம். ஏ. காதர்**
(மருதமுனை தினகரன் நிருபர்)

# திருச்செந்தூர் ஆலயத்தில் தொடரும் ஆச்சரியங்கள்!

தமிழ்நாட்டின் திருச்செந்தூர் பகுதி மக்களே ஆச்சரியத்தில் உறைந்து போயுள்ளனர்.இது ஒன்றும் முதல் முறை கிடையாது.. அடுத்தடுத்து இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து அங்கு நடந்து வருகின்றன.

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் 2 ஆம் படை வீடும், கடற்கரை ஓரத்தலமும் ஆனது திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்.

பல்வேறு மாநிலங்கள், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து தினமும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் இங்கு குவிவது வழக்கம்.

விடுமுறை காலங்களிலும் சரி, விசேஷ நாட்களிலும் சரி ஆயிரக்கணக்கான பக்தர்களும் சுவாமி தரிசனத்திற்காக வந்து செல்கின்றனர். கடலில் புனித நீராடிவிட்டு, அதற்குப் பிறகு, முருகப் பெருமானை வழிபட்டுச் செல்வது பக்தர்களின் வழக்கம்.



அப்படித்தான், இந்தக் கோடையில் விடுமுறை நாட்கள் என்பதாலும், நேர்த்திக்கடனை செலுத்திடவும் பொதுமக்கள் திருச்செந்தூரில் குவிந்து வருகிறார்கள். அந்தவகையில், தேனி மாவட்டம் லட்சுமிபுரத்தைச் சேர்ந்த இந்திரா என்பவர், தன்னுடைய குடும்பத்துடன் திருச்செந்தூருக்கு சென்று கடலில் புனித நீராடினார்.

அப்போது, இந்திரா கையில் அணிந்திருந்த ஒன்றரை சவரன் தங்க வளையல், கடல்நீரில் மாயமாகிவிட்டது. இதனால் இந்திரா தங்க நகையை காணாமல் பதறிப் போனார்.

இதனிடையே, கடலில் சிப்பி அரித்துக் கொண்டிருந்த தொழிலாளர்களிடம் தங்க வளையல் கிடைத்திருக்கிறது. அது குறித்து விசாரித்தபோதுதான், அது இந்திரா தவறவிட்ட வளையல் என்பது தெரியவந்தது. அதற்குப் பிறகு, வளையலை இந்திராவிடம் சிப்பி அரிக்கும் தொழிலாளர்கள் கொண்டுவந்து பத்திரமாக ஒப்படைத்தனர்.

இ ப் ப டி த் த ான் சில மாதங்களுக்கு முன்பு, திருப்பூரைச் சேர்ந்த ரஜினிகாந்த் என்பவர் குடும்பத்தினருடன் சுவாமி தரிசனம் செய்வதற்காக வந்திருந்தார்.. அப்போது கடலில் கு ளி த் து வி ட் டு வெளியே வந்து பார்த்தபோது தன் கழுத்தில் அணிந்திருந்த 10 பவுன் தங்கச் சங்கிலி காணாமல் போயிருப்பதை பார்த்து அதிர்ந்து போனார். கோயிலில் உள்ள காசி விஸ்வநாதன் என்கிற அர்ச்சகரிடம் தன்னுடைய தங்கச் சங்கிலி கடலில் காணாமல் போனது பற்றி அதிர்ச்சியுடன் கூறினார்.



அதற்கு அந்த அர்ச்சகர், "உங்க தங்க செயின் எங்கேயும் போகாது. முருகன் மேல பாரத்தை போட்டுட்டு மனமுருக வேண்டுங்க கிடைச்சிடும்" என்றார். அதற்குப் பிறகு, கடலில் சிப்பி அரிக்கும் தொழிலாளர்கள் 40 பேர், தொடர்ந்து 8 மணி நேரம் கடலில் மூழ்கிக் காணாமல் போன 10 பவுண் தங்கச்சங்கிலியை தேடினர். இறுதியில், பார்த்திபன் என்ற சிப்பி அரிக்கும் தொழிலாளியின் அந்த தங்கச்சங்கிலி கிடைத்தது.

அது ரஜினிகாந்த் தவறவிட்டது என்பது தெரியவந்ததையடுத்து அவரிடம் ஒப்படைத்தார்.

இதனால் ஆச்சரியப்பட்ட ரஜினிகாந்த், தங்கச்சங்கிலியை தேடிக் கொடுத்த கடல் சிப்பி அரிக்கும் தொழிலாளர்களை, ஆரத்தழுவி கண்ணீர் மல்க தனது நன்றியைத் தெரிவித்தார்.

"கடல்ல செயின் காணாமல் போனதும் ரொம்ப மனம் நொந்துட்டேன். அர்ச்சகர் சொன்னது மாதிரியே எம் பெருமான் முருகனை மனமுருக வேண்டி, நெத்தியில விபூதியை பூசினேன். 8 மணி நேரத்துல என் செயின் கிடைச்சிடுச்சு" என்றார் அவர்.

ஓம் முருகா என்று சொன்னபடியே, கோயில் கோபுரம் நோக்கிக் கும்பிட்டார் ரஜினிகாந்த். தங்க வளையல் கிடைத்த மகிழ்ச்சியில் இந்திராவும் அப்படித்தான் பூரித்து போய் உள்ளார்.

# பிரித்தானியா நாட்டில் கல்வி கற்கும் வாய்ப்பு, இலங்கை இளைஞர், யுவதிகளுக்கு வரப்பிரசாதம்

கல்வி மற்றும் வேலைவாய்ப்பின் நிமித்தம் நாட்டிலிருந்து, வெளிநாடுகளுக்குச் செல்பவர்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எதிர்காலத்தில் மேலும் அதிகமானவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

அரசதுறை உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் திணைக்கள விடுமுறை பெற்று வெளிநாடுகளுக்குச் செல்ல முடியும் என்ற அரசின் அறிவிப்பையடுத்து, அரசதுறை ஊழியர்களும் வெளிநாடு பயணிக்கின்றனர். எதிர்காலத்தில் மேலும் அதிகமானவர்கள் வெளிநாடு செல்லுவதற்கான ஆர்வம், விருப்பத்தினை வெளிப்படுத்தி, பயண ஆயத்தங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் இலங்கை இளைஞர், யுவதிகள் பிரித்தானியா நாட்டில் உயர்கல்வி கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் *Merit Educational Services* நிறுவனம் அட்டாளைச்சேனை 14, பிரதான வீதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா நாட்டிலுள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் இலங்கை இளைஞர், யுவதிகள் உயர் கல்வி பெற்றுக் கொள்வதற்கான வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குதல், அவர்களுக்கான பணிகளை இலகுபடுத்திக் கொடுத்தல், பயண ஒழுங்குகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன பிரஸ்தாப அலுவலகத்தின் பிரதான பணிகளாகும்.





பிரித்தானியா நாட்டில் உயர்கல்வி கற்க விரும்புபவர்களுக்குத் தேவையான வழிகாட்டல், ஆலோசனைகளை வழங்குதல், சர்வதேசப் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களுடன் தொடர்பு மற்றும் இணைப்பினை ஏற்படுத்திக் கொடுத்தல், வேலைவாய்ப்பு மற்றும் வருமானமீட்டும் வழிமுறைகளை அறிமுகப்படுத்தல், ஏமாற்றம் இல்லாத நம்பிக்கையான பயண ஏற்பாடுகளுக்கான முன்னாயத்தங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்ற பணிகள், சேவைகளை புதிய அட்டாளைச்சேனை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சின் ஓய்வுநிலை செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. சாபிர், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, அக்கரைப்பற்று மாநகர ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி, தென்கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஜெளபர், அட்டாளைச்சேனை உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸாபிர், இறக்காமம் உதவிப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.நஸீல், அட்டாளைச்சேனை ஜும்மாப் பெரியவாயல் நம்பிக்கையாளர் சபைத் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ். ஜுனைதீன், இறக்காமம் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் ஜெமீல் காரியப்பர், ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் யூ.எம்.வாஹித், ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்கள் எஸ்.எல்.அப்துல் காதர், மௌலவி யூ.எம்.நியாஸி, ஓய்வுநிலை அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி பதிவாளர் எஸ்.எம்.பஸீர், அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலாளர் எம்.ஐ. எம்.பாயிஸ், திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், *Merit Educational Services* நிறுவனத்தின் நிர்வாகிகள் என அதிகமானோர் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

**முகம்மட் றிஸான்**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.06.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

| லொத்தர் | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து / இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் |
| --- | --- | --- | --- | --- |
| மஹஜன சம்பத | 5135 | ரூ. 11,935,422.00 | B | 1 3 1 4 0 6 |
| Mega Power | 1483 | ரூ. 326,856,674.00 (அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00) | E (சுப்பர் இலக்கம் 17) | 16 24 28 47 |
| ராசி சுப பலன் (Handahana) | 444 | ரூ. 3,075,195.20 | மீனம் (விசேட இலக்கினம்: மீனம்) | 32 39 53 54 |
| தன நிதானய | 1165 | ரூ. 92,995,058.40 | S | 12 58 71 76 |
| ஜாதிக சம்பத | 1590 | ரூ. 11,858,688.00 | மிதுனம் | 5 6 8 7 8 5 |
| கொவிசெத (Govisetha) | 3377 | ரூ. 60,072,503.20 | Z | 08 62 67 73 |

## நவீன ரஷ்ய... (04 ஆம் பக்கத் தொடர்)

இதனாலேயே நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தையாக புஷ்கின் கருதப்படுகிறார். புஷ்கின் எந்த சூழலிலும் சுயமரியாதையை விட்டுக் கொடுக்காமல் உழைக்கும் மக்களுக்காக குரல் கொடுத்தார்.

இதனால் அன்றைய ரஷ்யா முழுவதும் ஜார் மன்னரின் உளவாளிகள் தீவிரமாக புஷ்கினை கண்காணித்து வந்ததால் படைப்புகளை வெளியிட முடியாத நிலை இருந்தது.

புஷ்கினின் 'நான் அவளை நேசித்தேன்' எனும் காதல் கவிதை பல யுகம் சென்றாலும், காலத்தால் அழியாத காதல் வர்ணங்களாக என்றும் காட்சியளிக்கின்றது. தலைசிறந்த கவிஞரும் உலகம்புகழ் நாடகாசிரியருமான கருதப்படும் அலெக்சாண்டர் செர்ஜியேவிச் புஷ்கின், நவீன ரஷ்ய இலக்கியத்தின் பிதாமகனாகவே என்றும் தென்படுகின்றார். அத்துடன் புஷ்கினின் மிகச்சிறந்த படைப்புக்களான இயூஜின் ஒனேகின், கப்டனின் மகள், போரிசு கோதுனோவ், ருசுலானும் லுத்மீலாவும் ஆகிய நூல்கள் வரலாற்றுப் புகழ்வாய்ந்தவை. புஷ்கினின் படைப்புகள் ஆங்கிலத்தில் மட்டுமன்றி, பல்வேறு மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு பல நாடுகளில் வெளிவந்தன.

'நவீன ரஷ்ய இலக்கியத்தின் தந்தை' என்று போற்றப்பட்ட புஷ்கின் 38 வயதில் (1837) மறைந்தார். இன்றும் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ்பர்கில் கடைசியாக புஷ்கின் வாழ்ந்த வீடு தற்போது அருங்காட்சியகமாக மாற்றப்பட்டுள்ளது.

# கிழக்கின் குரல்



# கல்முனை மாநகர சபையினால் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்

## மாநகர ஆணையாளரினால் ஆரம்பித்து வைப்பு

**(கல்முனை விசேட, சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)**



நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்து வருகின்ற நிலையில், கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைவாக கல்முனை மாநகர சபையினால் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு, கொத்தணி சுத்திகரிப்பு வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் திங்கட்கிழமை (05) கல்முனை கடற்கரைப் பள்ளி வளாகத்தில் இவ்வேலைத் திட்டம் ஆரம்பமானது. இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபையின் அனைத்து திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் ஆளணியினரும் களமிறக்கப்பட்டு, குப்பைகள் யாவும் சேகரித்து, அகற்றப்படும் என நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாநகர ஆணையாளர் அஸ்மி தெரிவித்தார். அதன் அடிப்படையில் கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளில் சுத்திகரிப்பு பணிகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தங்களது வீடு, வளவுகளை துப்புரவு செய்து, உக்கும் கழிவுகளை வேறாகவும் உக்காத கழிவுகளை வேறாகவும் தரம்பிரித்து மாநகர சபையின் வாகனங்களில் ஒப்படைக்க வேண்டும்.

குறிப்பாக டெங்கு நுளம்புகளின் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைகின்ற கொள்கலன்களையும் கழிவுப் பொருட்களையும் தவறாது சேகரித்து ஒப்படைக்குமாறு இதன்போது அவர் கேட்டுக் கொண்டார்.



உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை மற்றும் திறந்த பல்கலைக்கழகம் என்பன இணைந்து திங்கட்கிழமை (05) பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்து முகமாக, பிளாஸ்டிக், பொலித்தீனை சுத்தம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் அஸாத் எம். ஹனிபா மற்றும் திறந்த பல்கலைக்கழக பிரதிப் பணிப்பாளர் சரண்யா லவன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர் இஸ்ஹாக் ஆகியோர் கலந்து கொண்ட போது.

# அட்டாளைச்சேனையில் சுற்றாடல் தின நிகழ்வுகள்

**(திராய்க்கேணி தினகரன் நிருபர்)**

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, அட்டாளச்சேனை பிரதேச செயலகத்தில் அட்டாளச்சேனை பிரதேச செயலாளர் எம். ஏ. சி. அகமது ஷாபிர் தலைமையில் பிளாஸ்டிக் கழிவு பொருட்கள் முகாமைத்துவ தினம் மற்றும் சுற்றாடல் தினம் என்பன கொண்டாடப்பட்டன. இந் நிகழ்வில் விசேட பேச்சாளராக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சுற்றுச்சூழல் அதிகாரி எம். ஐ. எம். இஷ்ஹாக் கலந்து கொண்டார்.

அத்துடன் உதவிப் பிரதேச செயலாளர் நஹிஜா முசாபிர், நிர்வாக உத்தியோகத்தர் சலீம், உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எல். ஏ. மஜீத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இளைஞர் யுவதிகளுக்கு விழிப்புணர்வு

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

இயற்கையைப் பேணிப்பாது காப்பதனை நோக்காகக் கொண்டு, இளைஞர் யுவதிகளிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் பரீட்சார்த்த விழிப்புணர்வு செயற்பாடுகள், வெற்றியளித்திருப்பதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமங்களில் அமுலாக்கம் செய்யப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை (04) இடம்பெற்ற “பசுமையான சூழலை உருவாக்குவோம், பொலித்தீன் பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்ப்போம்” எனும் நிகழ்வில் இளைஞர் யுவதிகள் தாங்காளாவே தங்களது பெற்றோர் சகிதம் முன்வந்து தமது வீட்டையும் வீட்டுச் சூழலையும் துப்புரவு செய்ததோடு பயன்தரும் மரங்களை நாட்டுவதிலும் ஈடுபட்டனர்.

# "கனிகளைப் பறிக்கும் நேரம்" நூல் வெளியீட்டு நிகழ்வு

**(தோப்பூர் குறூப் நிருபர்)**



உஸ்தாத் அல்முஃப்தி முஹம்மது சௌமி கரீம் (அர்ரஷாதி) எழுதிய மனிதவள மேலாண்மை தொடர்பான அரபு மொழி மூலமான "கனிகளைப் பறிக்கும் நேரம்" நூல், ஞாயிற்றுக்கிழமை (4) மூதூர் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் நத்துவதுல் உலமா அரபுக் கலாசாலையின் தலைவர் உஸ்தாத் எம்.எம்.கரீம் தலைமையின் நடைபெற்றது.

"கனிகளைப் பறிக்கும் நேரம்" நூலானது மனித மேலாண்மை தொடர்பான அரபு மொழியில் வெளிவந்துள்ள இலங்கையின் முதலாவது நூலாக கருதலாம்.

இந் நூலாசிரியர் புத்தாக்க சிந்தனை மையம் என்ற நிறுவனம் ஊடாக பல்வேறு துறைசார், சமூக நலன் வேலைத்திட்டங்களை செயற்படுத்தி வருகின்றார். இதேவேளை உஸ்தாத் கே.சௌமி, அரபுலக பத்திரிகைகள் பலவற்றுக்கு பல்தரப்பட்ட தலைப்புகளில் ஆக்கங்களை பிரசுரம் செய்பவர்.

இந்நூல் வெளியீட்டு நிகழ்வின் அதிதிகளாக அஷ்ஷெஹ் எம். ரியாஸ், அஷ்ஷெஹ் எம்.சபூர், நூல் நயவுரையை நஹீப் நிஸாத் நளீமி மேற்கொண்டதோடு, நன்றியுரையை நண்பர் புஹாரி ரீஷா மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பரீட்சை முறைகேடுகளுக்கு பர்தா ஆடை காரணமல்ல

## பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப்

**(கிண்ணியா தினகரன்,முள்ளிப்பொத்தானை குறுப், கந்தளாய் தினகரன் நிருபர்கள்)**



க.பொத. சா/த பரீட்சைக்குத் தோற்றும் முஸ்லிம் மாணவிகள் பர்தா தொடர்பிலான விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க தயாராக இருக்கிறார்கள். எனினும், பரீட்சை மண்டப அதிகாரிகள் மாணவிகளின் மனநிலையை புரிந்துகொண்டு அவர்களை முறையாக தெளிவுபடுத்த வேண்டும் என, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவிகளுக்கு பரீட்சை மண்டபத்தில் பர்தா அணிய மறுப்பு தெரிவிக்கப்படுகின்றமை தொடர்பில் மாணவிகள் பலரும் முறைப்பாடுகள் கையளித்துள்ள நிலையிலேயே, ஞாயிற்றுக்கிழமை தனது கிண்ணியா காரியாலயத்தில் வைத்து இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார். அவர் ஊடகங்களுக்கு மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கும் பரீட்சை முறைகேடுகளை தவிர்ப்பதற்கும் பரீட்சை மண்டபத்திற்குள் பர்தா அணிய தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பரீட்சை முறைகேடுகளுக்கு பர்தா ஆடை காரணம் என்று கூறுவதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் முறை குறித்து முன் கூட்டியே தேவையான விளக்கங்களை பரீட்சை திணைக்களம் பாடசாலைகளுக்கு வழங்கி இருந்தால் இந்த தேவையற்ற பிரச்சினைகளை குறைத்திருக்க முடியும்.

இதுவிடயமாக பாராளுமன்றம் ஊடாக சிறந்த தீர்வொன்றை பெற்று மாணவர்களின் உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# டெங்கை கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் இஸ்ஸடீன்

**(பாலமுனை விசேட நிருபர்)**

நாட்டில் தற்போது டெங்கு காய்ச்சல் மிக தீவிரமாக பரவி வரும் நிலையில், அரசாங்கமும் டெங்கினைக் கட்டுப்படுத்துவதற்கு தேசிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில், பொதுமக்களும் இவ் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட வேண்டும் என, அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எம் எம்.இஸ்ஸடீன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டல்களின் கீழ், அட்டாளைச்சேனை பிரதேசத்திலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் மிகத் தீவிரமாக செயற்பட்டு வருகின்றோம்.

கிழக்கு மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைவாக அண்மையில் பாடசாலைகள் மற்றும் அரச திணைக்களங்களில் பாரிய சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மாணவர்களினதும், அரச ஊழியர்களினதும் பங்கேற்புடன் இதனை வெற்றிகரமாக முன்னெடுத்தோம். குறிப்பாக பொதுமக்களும் தங்களது வீடுகள் மற்றும் சுற்றுச் சூழலை துப்புரவு செய்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

சுகாதாரத் துறையினரால் மாத்திரம் டெங்கினைக் கட்டுப்படுத்த முடியாது அதற்கு பொதுமக்களும் பூரண ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் என்றார்.

# இரு கைதிகள் விடுதலை

**(கந்தளாய் தினகரன் நிருபர்)**

பொசன் தினத்தினை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் திருகோணமலை சிறைச்சாலையில் இரண்டு சிறைக் கைதிகள் சனிக்கிழமை (3) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலை சிறைச்சாலை பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், இதன் போது சிறுகுற்றங்கள் புரிந்த மற்றும் தண்டப்பணம் செலுத்த முடியாத சிறைக்கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

# காத்தான்குடியில் தானம் வழங்கும் நிகழ்வு



**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

பொசன் தினத்தை முன்னிட்டு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் தானம் வழங்கும் நிகழ்வு, சனிக்கிழமை (03) காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.ஐ உவைஸ், காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எஸ் எம் ரஹீம் ஆகியோர் தலைமையில் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது வீதியில் சென்ற பயணிகள் பொதுமக்களுக்கு பிஸ்கட் மற்றும் குளிர்பானம் என்பன வழங்கப்பட்டன.

# மூதூர் பிரதேசத்தில் வீடு வீடாகச் சென்று டெங்கு பரிசோதனை

**(தோப்பூர் குறூப் நிருபர்)**

மூதூர் பிரதேசத்தில் தற்போது அதிகமான டெங்கு நோயாளர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள நிலையில், வீடு வீடாகச் சென்று டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அடையாளப்படுத்தி பொது மக்களை விழிப்பூட்டும் நிகழ்வுகள் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நெய்தல் நகர் மற்றும் அக்கரைச்சேனை பிரதேசதங்களில் மேற்கொள்ளப்பட்டன.

சனிக்கிழமை நெய்தல் நகர் கிராமத்தில் 655 வீடுகளுக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது , இதில் 05 வீடுகளில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகி இருந்தமை கண்டறியப்பட்டதுடன், 32 இடங்களில் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்பட்டதால் வீட்டு உரிமையாளர்களுக்கு பொது சுகாதார பரிசோதகரினால் சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை மூதூர் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவுபகுதியில் 687 வீடுகளுக்கு தரிசிப்பு மேற்கொள்ளப்பட்டது, இதில் 06 இடங்களில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகி இருந்தமை கண்டறியப்பட்டதுடன், 28 இடங்களில் டெங்கு நுளம்பு பரவும் அபாயம் காணப்பட்டதால் வீட்டு உரிமையாளர்களுக்கு பொது சுகாதார பரிசோதகரினால் சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# துறைமுகத்துக்கு சொந்தமான காணியை பொது தேவைக்கு வழங்க நடவடிக்கை

## பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப்

**(ஒலுவில் விசேட நிருபர்)**

ஒலுவில் துறைமுக மீள் குடியேற்ற வீட்டுத் திட்டத்திலுள்ள துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான காணியை மீள் குடியேற்ற கிராமத்தின் பொதுத் தேவைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.எம். முஷாரப் தெரிவித்தார்.


ஒலுவில் துறைமுக மீள் குடியேற்ற திட்ட பொது மைதானத்திற்கு காணியை வழங்குமாறு, துறைமுக நிர்மாணிப்பினால் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு சுபீட்சமாக வாழ உட்கட்டுமான அபிவிருத்திகள் செய்வதற்கு காணியை வழங்குமாறும் மீள் குடியேற்ற கிராமத்தில் வாழும் மக்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, வியாழக்கிழமை (01) துறைமுக அதிகார சபையின் உபதலைவர் ஜி.யூ.கே. அல்கவத்தகே உடன் நடைபெற்ற கலந்துரையாடலில், காணியை பொது மைதானம் மற்றும் பொதுத் தேவைகளுக்கு வழங்குவதற்கு வாக்குறுதி வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



வாழைச்சேனை பிறைந்துரைச்சேனை மஸ்ஜிதுல் ஹிழ்ரியா பள்ளிவாசல் ஏற்பட்டில் "நாட்டில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து பெறுமதி மிக்க உயிர்களை காப்போம்" என்ற தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (04) பள்ளிவாசலில் நடைபெற்றது. இதில் இளைஞர், யுவதிகள் உட்பட சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். இப் பள்ளிவாசல் நிர்வாகத்தினால் சமூக சேவை திட்டங்கள், போதை ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்வுகள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# நகர்வலம்



விடை எழுதுவதற்கு மாணவருக்கு உதவினார்

## கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவர் பணி நீக்கம்

### அநுராதபுரத்தில் சம்பவம்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நடைபெற்று வரும் கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியிருக்கும் மாணவர்கள் சிலருக்கு வினாத்தாள்களுக்கு விடை எழுத உதவி வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பாடசாலை ஆசிரியர் ஒருவர் கண்காணிப்பு பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண உதவி மாகாண கல்வி பணிப்பாளர் (பரீட்சை) எஸ்.ஆர். பியங்கர தெரிவித்தார்.

அநுராதபுரம் கருக்கங்குளம் விஜயபா பாடசாலை பரீட்சை நிலையத்தில் கண்காணிப்பு கடமையில் இருந்த ஆசிரியர் ஒருவரே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆசிரியர் அந்தப் பிரதேசத்தில் பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி வரும் ஆசிரியர் என்பதும் தெரியவந்துள்ளது.

தன்னுடைய பிரத்தியேக வகுப்புக்களுக்கு வருகை தந்த மாணவர் குழுவினருக்கு வினாத்தாள்களுக்கு விடையளிப்பதற்கு உதவி வழங்கியமை தொடர்பில் ஏனைய மாணவர்களின் பெற்றோர்களினால் கல்வி அதிகாரிகளுக்கு செய்த முறைப்பாட்டிற்கமைய பரீட்சை கடமையில் இருந்து அவரை நீக்கியுள்ளதாக பரீட்சை பணிப்பாளர் தெரிவித்தார்.

## மாத்தறை மாவட்ட சுற்றுலாத்துறை மேம்படுத்தலை ஆராய கலந்துரையாடல்

### துறைசார்ந்த அமைச்சர்கள் பங்கேற்பு





**(வெலிகம தினகரன் நிருபர்)**

மாத்தறை மாவட்ட சுற்றுலா கைத்தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான ஆலோசனைகள் பற்றிய கலந்துரையாடலொன்று மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, கரையோர பாதுகாப்பு, சுற்றுலாத்துறை பொலிஸ் நிலையங்களை மேம்படுத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இதில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ, மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பாராளுமன்ற உறுப்பினர் நிபுண ரணவக்க, பொலிஸ் மா அதிபர் சி.டி விக்ரமரத்ன, இராணுவ தளபதி விகும் லியனகே உட்பட மாவட்ட செயலாளர்கள், அமைச்சின் செயலாளர்கள், அரச உயர் அதிகாரிகள், பொலிஸார், கடற்படை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வறுமை நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 200 பில்லியன் ரூபா நிதி

### வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வறுமை நிலையில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்காக அரசாங்கம் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் சமூக நலன்புரி திட்டங்களுக்கு அதிக நிதியை ஒதுக்க திட்டமிட்டுள்ளதாக திறைசேரியின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அந்த வகையில் வறுமை நிலை மக்களுக்கான நலன்புரி திட்டங்களுக்காக அடுத்த வருடம் 200 பில்லியன் நிதியை ஒதுக்கவுள்ளதாக அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய திட்டங்களுக்காக இந்த வருடத்தின் இறுதிக்குள் உலக வங்கியிடமிருந்து 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடன் உதவியாக எதிர்பார்க்கப்படுவதாகவும் இரண்டு பாரிய கடனுதவிகளாக அதனை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

உலக வங்கியின் மேற்படி கடனுதவி நாட்டில் குறைந்த வருமானம் பெறும் மூன்று மில்லியன் குடும்பங்களுக்கு எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கான நலன்புரி திட்டங்களுக்காக பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## ஆயதுல்லாஹ் ரூஹுல்லாஹ் கொமெய்னியின் 34ஆவது ஞாபகார்த்த தினம் கொழும்பில்

**ருஸைக் பாரூக்**




கொழும்பில் உள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசு தூதரகத்தின் கலாசார நிலையம் ஒழுங்கு செய்த ஈரானிய இஸ்லாமியப் புரட்சியின் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லாஹ் ரூஹுல்லாஹ் கொமெய்னியின் 34 ஆவது ஞாபகார்த்த நினைவு தினம் "சமகால உலகில் இமாம் கொமெய்னியின் சிந்தனையின் தாக்கத்தை ஆய்வு செய்தல்" என்ற தலைப்பில் ஈரான் கலாசார நிலைய கேட்போர் கூடத்தில் கவுன்சிலர் கலாநிதி பி. மோஸாமி குடார்சி தலைமையில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜோர்ஜ் ஐ.எச். குக் மற்றும் பேராதனை பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். வீரவர்தன ஆகியோர் ஈரானுக்கு இமாம் கொமெய்னியின் பங்களிப்பையும், வரலாற்று இஸ்லாமியப் புரட்சிக்கு வழிவகுத்த அவரது பெரும் முயற்சிகள் மற்றும் சிறப்பான சேவைகளையும் பாராட்டி உரையாற்றினார். ஈரான் தூதரகத்தின் பாதுகாப்பு அதிகாரி ஹோமோயுந் அழியாறி, பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவின் தலைவர் கே. சொஹைல் மற்றும் அரசியல் பிரிவின் தலைவர் முஸ்தபா ஹாஷிமி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வெலிகமயில் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம்; பல வீடுகள் சோதனை

**(வெலிகம தினகரன் நிருபர்)**

வெலிகம பகுதியில் கடந்த வாரத்தை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்ட நிலையில், பல இடங்கள் சோதனையிடப்பட்டன.

இதன் போது டெங்கு நுளம்புகள் பெருகும் வகையில் காணப்பட்ட 31 வீடுகளும், டெங்கு நுளம்பு பெருகும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்த 75 இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் இரண்டு வீட்டு உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், ஏனைய 29 வீட்டு உரிமையாளர்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளதாக வெலிகம வெலிபிடிய சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முதலாவது ஹஜ் குழு மக்கா நோக்கி பயணம்

**தெஹிவளை, கல்கிசை குறூப் நிருபர்**




2023 ஆம் ஆண்டுக்கான புனித ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக 64 பேர் கொண்ட முதலாவது ஹஜ் யாத்திரிகர்கள் குழு ஞாயிற்றுக்கிழமை (04) காலை 10.00 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினூடாக புனித மக்கமா நகர் நோக்கி பயணமாகினர். இவர்களை வழியனுப்பும் நிகழ்வு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம், இலங்கை ஹஜ் குழு மற்றும் இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகம் ஆகியவற்றின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி, புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதான பதிரன, வீசா பகுதிக்கான பொறுப்பதிகாரி சாலிஹ் அப்துல்லாஹ் அல்ஃபராஜி, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் பைசல் ஆப்தீன், இலங்கை ஹஜ் குழுவின் தலைவர் இப்றாகிம் அன்சார், இலங்கை விமானப் போக்குவரத்து அதிகார சபையின் உப பணிப்பாளர் கலாநிதி அஜித் மென்டிஸ், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் அலா அஹமட், ஹஜ் குழு உறுப்பினர்களான இபாஸ் நப்கான், ஹனீபா இஸ்ஹாக், இலங்கை ஹஜ் பயண முகவர்கள் சங்கங்களின் பிரதிநிதிகள், இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரக அதிகாரிகள், விமான நிலைய உயர் அதிகாரிகள் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நாச்சியாதீவு விவசாய நிலங்களில் படைப்புழுவின் தாக்கம் அதிகரிப்பு

### வேளாண்மை பயிர்களும் அழிவுறும் நிலையில் - விவசாயிகள் கவலை

**திறப்பனை தினகரன் நிருபர்**



அநுராதபுரம் மாவட்ட நாச்சியாதீவு விவசாய பிரிவில் இம்முறை செய்கை பண்ணப்பட்டுள்ள நெல் வேளாண்மை நிலங்களில் படைப் புழுவின் தாக்கம் அதிகரித்துள்ளதெனவும் என்றுமில்லாதவாறு படைப் புழுக்களின் அதிகரிப்பால் வேளாண்மை பயிர்கள் அழிவுறும் நிலையில் காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அ / ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின், சிராவஸ்திபுர விவசாய சேவை மத்திய நிலைய நிர்வாக பிரிவுக்கு உட்பட்ட நாச்சியாதீவு அல் அக்ஸா விவசாய கழக மேற்பார்வையின் கீழுள்ள சுமார் 430 ஏக்கர் வயல் நிலங்களில் அதிகமான வயல் நிலங்களுக்கு இப் புழுக்கள் பரவியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சிறுபோகத்தின் போது செய்கை பண்ணப்பட்டு சுமார் 21 நாட்களை கடந்த நிலையிலும், வேளாண்மை பயிர்களை உண்டு அழித்து வரும் இப் படை புழுக்களை கிருமி நாசினிகளை கொண்டு இலகுவில் அழித்துவிட முடியாத நிலை காணப்படுவதாக விவசாய கழக தலைவர் எம். பி.எம்.ஹனீபா (விவசாயி) தெரிவித்தார்.

இலட்சக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து இம்முறை சிறுபோக வேளாண்மை செய்கையில் ஈடுபட்டும், படை புழுக்களின் தாக்கம் ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளதாக எஸ்.எம்.ரியால்தீன் (விவசாயி) தெரிவித்தார்.

இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இப் பகுதிக்கு விஜயம் செய்து நேரில் இது பற்றி ஆராய்ந்து, உரிய தீர்வை வழங்க வேண்டும் என மற்றொரு விவசாயியான ஏ.ஆர். ரஹ்மான் வேண்டுகோள் விடுத்தார்.

## சீனன்கோட்டை பெருகமலையில் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு

**(பேருவளை விசேட நிருபர்)**




பேருவளை, சீனன்கோட்டை பெருகமலை கல்வி அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டிலான மாணவர் கௌரவிப்பு நிகழ்வு பெருகமலை ஸாக்கிரீன் குர்ஆன் மத்ரஸா மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. பகுதி நேர வகுப்பில் கலந்துகொண்டு தேசிய பரீட்சைகளில் சித்தியடைந்த மற்றும் கூடிய புள்ளிகளை பெற்ற மாணவர்கள் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பெருகமலை கல்வி அபிவிருத்தி அமைப்பு பிரதேச மாணவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி கடந்தசில ஆண்டுகளாக மேலதிக வகுப்புக்களை நடாத்தி வருவதோடு தரம் 5 புலமைப்பரிசில், க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர் தரம் பரீட்சைகளில் சித்தியடைந்த மற்றும் கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை சான்றிதழ் மற்றும் விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

இந்நிகழ்வில் அல் ஹுமைஸரா தேசிய பாடசாலை அதிபர் முஹம்மத் லியாஸ்தீன், நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரி அதிபர் பஹீமா பாயிஸ், சீனன் கோட்டை பள்ளிச் சங்க இணைச் செயலாளர் எம். எம்.எம் சிஹாப் ஹாஜியார், களுத்துறை கல்வி வலய இஸ்லாம் பாட ஆசிரிய ஆலோசகர் பாரிஹா இம்தியாஸ், ஸாக்கிரீன் ஜும்ஆ பள்ளி வாசல் நிர்வாக சபை செயலாளர் அஷ்ஷெய்க் மக்கிமன்ஸூர் (நளீமி), ஸாக்கீரீன் குர்ஆன் மத்ரஸா அதிபர் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி எஸ். எச்.எம் இம்ரான் (ஹுமைதி), ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியை ஹாதிமா மசூர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண்ணொருவர் கொலை

### சந்தேக நபர் தலைமறைவு

**அநுராதபுரம் தினகரன், கல்நேவ தினகரன் நிருபர்கள்**

கெக்கிராவ செக்குபிட்டிய பகுதியில் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

தனது கணவர் குழந்தைகளுடன் வாடகை வீட்டில் வசித்து வந்த 35 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

தனது மனைவியை யாரோ கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்துள்ளதாக அவரது கணவர் கடந்த (02) அதிகாலை கெக்கிராவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

குறித்த சந்தர்ப்பத்தில் மனைவி வேறு அறையில் தூங்கிக் கொண்டிருந்ததாக கணவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கொலைக்கான காரணம் மற்றும் சந்தேக நபர் தொடர்பில் இதுவரை எவ்வித தகல்களும் கிடைக்கவில்லை என பொலிசார் குறிப்பிட்டனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கெக்கிராவ பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத்தின் "வானலைகளில் ஒரு வழிப்போக்கன்" அரை நூற்றாண்டு அனுபவப் பதிவுகள் நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (03) கொழும்பில் நடைபெற்றது.நிகழ்வில் பிரதம அதிதியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும், கௌரவ அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். நூலின் முதற்பிரதியை எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் குமார் நடேசன் பெற்றுக் கொண்டார். தலைமையுரையை லண்டன் சட்டத்தரணியும் மற்றும் பீ.பீ.சி, அறிவிப்பு, தயாரிப்பாளருமான விமல் சொக்கநாதன் நிகழ்த்தினார். சிறப்புரையை பேராசிரியர் வல்லிபுரம் மகேஸ்வரன், நூல் ஆய்வுரை பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், நூல் விமர்சனத்தை ஊடகத்துறை கலாநிதி எம் ரஸ்மின் நிகழ்த்தினார். ஜி.போல் அந்தனி, திருமதி வசந்தி தயாபரன் ஆகியோரும் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு

# கொட்டகலை நகரில் விழிப்புணர்வு பேரணி






உலக சுற்றாடல் தினமான (ஜூன் 05 ஆம் திகதி) நேற்று கொட்டகலை நகரில் நகரவாசிகள் உள்ளிட்ட அனைத்து மக்களுக்கும் சூழல் தொடர்பான விழிப்புணர்வு பேரணி மற்றும் துண்டுப் பிரசுர விநியோகமும் நடைபெற்றது.

கொட்டகலையில் இயங்கும் 'சிந்தனை பவுன்டேஷனின் ஸ்தாபகர் ரமேஷ் ரிஷிகேசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பொது மக்களுக்கு சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாதைகளுடன் சிந்தனை பவுண்டேஷன் மாணவர்கள் கொட்டக்கலை ரயில் கடவையில் இருந்து ரொசிட்டா நகரில் அமைந்துள்ள பிரதேச சபை காரியாலயம் வரை பேரணியாக வந்தனர்.

அத்துடன் நகரின் சுகாதாரத்தை மேம்படுத்தல்,உள்ளக பிரதேசங்களில் தேக்கி வைக்கப்படும் குப்பை கூளங்களை அகற்றல்,வீதிகளை சுத்தம் செய்தல் போன்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து கொட்டகலை பிரதேச சபை செயலாளர் சரத் விக்கிரமசிங்கவிடம் மாணவர்கள் மனு ஒன்றையும் கையளித்தனர்.

இதை தொடர்ந்து 'மாற்றத்தை பிறரிடம் இருந்து எதிர்பார்க்காமல் நம்மிடம் இருந்தே ஆரம்பிப்போம்' எனும் தொனிப்பொருளில் சிந்திக்க வைக்கும் அறிவுரைகள் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் மாணவர்களால் வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆ.ரமேஸ்

# அமெரிக்க-சீன வாணிப அமைச்சர்கள் வொஷிங்டனில் பேச்சுவார்த்தை

## அமெரிக்க நிறுவனத்தின் மீது சீனா கட்டுப்பாடு விதிப்பு

அமெரிக்க வாணிப அமைச்சர் ஜினா ரெய்மொன்டோவுக்கும் சீன வாணிப அமைச்சர் வாங் வென்டாவோவுக்கும் கடந்த வாரம் வொஷிங்டனில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெளிப்படையானதாகவும் பொருள் சார்ந்ததாகவும் அமைந்திருந்ததாக வொஷிங்டன் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவு சமீப காலமாக முறுகல் நிலையில் காணப்பட்ட பின்னர் இப்போதுதான் இரு நாட்டு அமைச்சர் மட்ட பேச்சுவார்த்தை இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் ஹீரோஷிமாவில் நடந்து முடிந்த ஜி7 உச்சிமாநாட்டில், பொருளாதார ரீதியாக வெளி நாடுகளைக் கட்டாயப்படுத்தும் சீன தந்திரோபாயத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது தொடர்பாக தலைவர்கள் இணக்கம்(ள்) தெரிவித்ததன் பின்னர் இச்சந்திப்பு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப் பேச்சுவார்த்தையின் போது இரு நாடுகளிலும் காணப்படும் வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகள் மற்றும் எந்தெந்த துறைகளில் இணைந்து செயல்பட முடியும் என்பன கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டதாக அமெரிக்க வாணிப திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சீனாவில் இயங்கும் அமெரிக்க வர்த்தக நிறுவனங்கள் மீது சீனா திடீர் நடவடிக்கைகளை மேற்கொண்டது தொடர்பாக இப்பேச்சுவார்த்தையின் போது ரெய்மொன்டோ தன் கவலையை வெளியிட்ட அதே சமயம் சீன அமைச்சர், சீனாவுக்கு ஏற்றுமதியாகும் செமிகண்டக்டர்கள், சில பொருட்களின் ஏற்றுமதி மற்றும் முதலீடுகள் தொடர்பிலான அமெரிக்க அரசின் கட்டுப்பாடுகள் பற்றி தன் கரிசனையை வெளியிட்டார் எனவும் அறிய முடிகிறது.

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்திலுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் வாழ்த்து

கிழக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமனம் பெற்றுள்ள இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமானுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.



தனது சேவைக் காலத்தில் மக்களின் தேவைகளை அறிந்து எண்ணற்ற சேவைகளை மக்களுக்குச் செய்ய வாழ்த்துத் தெரிவிப்பதாக கமல்ஹாசன் மேலும் தெரிவித்துள்ளார். அதற்கு நன்றி தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கமல்ஹாசனை கிழக்கு மாகாணத்திற்கு வருகை தருமாறு அழைப்பும் விடுத்துள்ளார்.



ஸ்ரீலங்கா சாரணர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட '2022 ஆம் ஆண்டு ஜனாதிபதி சன்மானத்தை' வென்ற சாரணர்களுக்கு சான்றிதழ் பட்டம் வழங்கும் நிகழ்வு வடமேல் மாகாணத்தில், மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் அகில விராஜ் காரியவசம் ஆகியோர் தலைமையில் வெள்ளிக்கிழமை (02) மாகாண சபை அலுவலகத்தில் நடைபெற்றபோது.....

# பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கு இந்தியா என்றும் கைகொடுக்கும்



மாவத்தகம தினகரன் நிருபர்

இலங்கையின் பெருந்தோட்ட பயிர் வளர்ச்சிக்கும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பணிபுரியும் பெருந்தோட்ட மக்களின் மேம்பாட்டுக்கு அன்று முதல் இன்று வரையும் இந்தியா இலங்கையுடன் நேச நாடாக இருந்து கொண்டு பாரிய பங்களிப்பை நல்கி வருவதுடன் இரு நாடுகளுக்கிடையிலான உறவை மேலும் வலுப்படுத்தி வருகின்றோம் என்று கண்டி உதவி இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் இரண்டாம் நிலைச் செயலாளர் கவுன்சிலர் பி.சோமராஜ் தெரிவித்துள்ளார்.

கண்டி கிறிஸ்து நாதர் ஆலயத்தின் ஏற்பாட்டில் 'மலையகம் 200' நினைவு கூறல் நிகழ்வு தேவலாயத்தின் மண்டபத்தில் சபை குருவான அருட்பணியாளர் செல்டன் சமாதானம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக குருநாகலை மறைமாவட்ட பிரதான குரு முதல்வர் அருட்பணியாளர் நிசாந்த பெர்ணான்டோ கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் தமிழ் வர்த்தக சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். பரமேஸ்வரன், குருநாகலை முன்னாள் மறைமாவட்ட பிரதான குரு முதல்வர் அருட்பணியாளர் குமாரலியனகே, நிர்வாக குழு உறுப்பினர் ஜோன்ஸ் பாஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வரலாற்று நிகழ்வை நினைவு கூறும் இவ்வாண்டில் மலைய மக்களின் மாண்பை சிறப்பிக்க எம்மை அர்ப்பணிப்போம். மலையக மக்களின் நலன்களுக்கான கூட்டுச் செயற்பாட்டை ஊக்குவிப்போம். வறுமைக்கு பசிக்கும் எதிராக போராடும் அவசியத்தை உணர்த்துவோம் என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மலையக மக்களின் மேம்பாட்டுக்காக பங்காற்றி வரும் பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் வறிய மலையகப் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் தெல்தோட்டைப் பிரதேச தமிழ், முஸ்லிம், சிங்கள சிறார்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் மேம்படுத்தும் வகையில் பொசன் நோன்மதி சமய கலாசார வழிபாடுகளைக் கண்டறிந்து கொள்வதற்காக குக்குலாப்பான சந்துருவன் போதி ஸ்ரீ விஹாரைக்கு விஜயம் செய்த போது,... (படம் மாவத்தகம தினகரன் நிருபர்)

# தலாய்லாமா மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அவதூறு குற்றச்சாட்டுக்கள்

## திபெத்திய மக்களுக்கு வேதனையளிப்பதாக விளக்கம்

சீன சார்பு இணைய தளங்களில் தலாய்லாமாவுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் பாலியல் அவதூறு கதைகள், திபெத்திய ஆன்மிகத் தலைவருக்கு மட்டுமன்றி உலகெங்கும் வாழும் அனைத்து திபெத்தியர்களுக்கும் அவமானத்தை ஏற்படுத்தி உள்ளதாக திபெத்தியர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

87 வயதான தலாய்லாமா திபெத்தின் தலைவராகவும், புத்தரின் மறுபிறப்பாகவும், திபெத்தின் ஆன்மிகக் குருவாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டவர் என்பதோடு பெரும்பாலான உலக நாடுகளும் திபெத் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட வேண்டிய நிலைப்பாட்டிலேயே உள்ளன. எனினும் அந் நாட்டை ஆக்கிரமித்துள்ள சீனா, திபெத் தமக்குரிய மாகாணம் என்ற நிலைப்பாட்டுக்கு உலக அங்கீகாரம் வேண்டி இதுவரை மேற்கொண்ட எல்லா முயற்சிகளுக்கும் இந்தியாவில் தஞ்சடைந்துள்ள தலாய்லாமா முட்டுக்கட்டை போடுவதாக கருதி அவரை சிறுமைப்படுத்தும் பல முயற்சிகளை மேற்கொண்டு வந்துள்ளது.

அவற்றில் வெற்றிகரமாக நடத்தப்பட்ட இணைய வழி போலிப் பரப்புரையாக இப்பாலியல் குற்றச்சாட்டு கருதப்படுகிறது.

கடந்த பெப்ரவரி 28ம் திகதி ஒரு இந்தியத் தாயார் தன் எட்டு வயது குழந்தையுடன் தலாய்லாமாவை சந்திக்கச் செல்கிறார். குழந்தையை தூக்கி வைத்து கொஞ்சும் அவர் ஒரு கட்டத்தில் தன் நாக்கை வெளியே துருத்தியபடி குழந்தையின் வாய்க்கருகே கொண்டு செல்கிறார்.

ஒரு வீடியோவின் இக்கட்டத்தை மட்டும் வெட்டி எடுத்து சீனாவுக்கு வெளியே இருந்து இயங்கும் சீனாவின் இணையத்தளங்கள் தலாய்லாமா சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கினார். என்ற அபாண்டமான பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. திபெத்திய கலாசாரம் பற்றி தெரியாத மேற்கத்தி நாட்டவர்கள் இந்தக் காணொளியைப் பார்த்து அதை சிறுவர் துஷ்பிரயோகமாகவே கருதி தலாய்லாமாவுக்கு எதிரான கருத்துகளை தெரிவித்து வருவதை சீன கம்யூனிஸ்ட் கட்சி தமது முயற்சி வெற்றியளித்துள்ளதாக கருதுவதாக திபெத்தியர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

லாடன் தெதோங் என்ற திபெத்திய செயற்பாட்டாளர்கள், பெரியவர்கள், குழந்தைகளை கொஞ்சும் போது தம்மிடம் கொடுப்பதற்கு எதுவும் இல்லாத நிலையில் நாக்கை துருத்தி 'இதைத் தின்' என்று சொல்வது வழக்கம் என்றும் செல்லமாக செய்யப்பட்டதை வேண்டுமென்றே சீனாவினால் பெரிதுபடுத்தப்பட்டு விட்டதாகவும் விளக்கம் தந்துள்ளார்.

# பெரட்டாசி தோட்டத்துக்கு பஸ் சேவையை ஆரம்பிக்கக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்





ஹற்றன் சுழற்சி நிருபர்

புசல்லாவை, பெரட்டாசி தோட்டத்திற்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சேவையை உடன் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புசல்லாவை, கெமுனுபுர சந்தியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இப்போராட்டத்தில் தோட்ட மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள் என பலரும் பங்கேற்றனர். கடந்த மே 27 ஆம் திகதி இ.போ.ச பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை கம்பளை டிப்போ வழங்கியிருந்தது. பஸ் சேவை ஆரம்ப நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் கூட இடம்பெற்றிருந்தன.

எனினும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டால் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது அனுமதிக்க முடியாத செயல் என போராட்டத்தில் பங்கேற்றோர் கோஷங்களை எழுப்பினர். அத்துடன், தமது கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

பெரட்டாசி வீதி ஊடாக பேரணியாக வந்த மக்கள், கெமுனுபுர சந்தியை வந்தடைந்த பின்னர் போராட்டத்தை முன்னெடுத்தனர். உடனடியாக இ.போ.ச பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என இடித்துரைத்தனர்.

# தெவட்டகஹ ஜும்ஆப்பள்ளிவாசலில் 206ஆவது உரூஸ் முபாறக் நிகழ்வு



ஏ.எஸ்.எம்.ஜாவித்

கொழும்பு 7, தெவட்டகஹ ஜும்ஆப்பள்ளிவாசலின் ஏற்பாட்டில் செய்க் உஸ்மான் வலியுல்லாஹ் தர்ஹாவின் 206ஆவது உரூஸ் முபாறக், குர்ஆன் தமாம் மற்றும் விசேட துஆப் பிரார்த்தனை வைபவம் பள்ளிவாசலின் தலைவர் றியாஸ் ஸாலி மற்றும் நிர்வாக அங்கத்தவர்களின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (04) சிறப்பாக நடைபெற்றது. இதன்போது ஆண்கள், பெண்கள் என பெருந்திரளானவர்கள் கலந்து கொண்டதுடன் வருகை தந்த அனைவருக்கும் பகல் உணவும் வழங்கி வைக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

# சடலம் மீட்பு

சாவகச்சேரி விசேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி கல்வயல் வீதி நுணாவில் கிழக்கு பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்தே நேற்று காலை முதியவரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நுணாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 81 வயதான அருட்பிரகாசம் என்ற முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டின் வெளி அறையில் இவர் சடலமாக கிடந்துள்ளார். முதியவரின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வரிக் கோவைகள் திறக்கப்பட்டுள்ளபோதும் அனைவரும் வரி செலுத்த தேவையில்லை

## வரி செலுத்த தவறியுள்ளோர் எண்ணிக்கை மிக அதிகம் – அமைச்சர் சுசில் தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



வரிக் கோவைகள் திறக்கப்பட்டுள்ள போதிலும் நாட்டில் அனைவரும் வரி செலுத்த வேண்டும் என்ற கட்டாயமில்லை என பாராளுமன்ற சபை முதல்வரும் கல்வியமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் நாட்டில் வரி செலுத்த வேண்டியவர்கள் மற்றும் அதற்கான தகுதி கொண்டவர்கள் வரி செலுத்துவதை தொடர்ந்தும் தவற விட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எமது நாட்டில் வரி செலுத்த வேண்டியவர்களில் பெரும்பாலானோர் அதனை செலுத்துவதில்லை.

அந்த வகையில் மிக சிறிய எண்ணிக்கையிலானோரே அதனை தொடர்ந்து செலுத்தி வருகின்றனர். ஆவணங்கள் திறக்கப்பட்டுள்ள போதிலும் அனைவரும் வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. எனினும் திறக்கப்பட்ட ஆவணங்களை நோக்கும்போது அந்த வலையமைப்புக்குள் எந்தளவு எண்ணிக்கையானோர் உள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

நாட்டில் அரசர் காலம் தொடங்கி இதுவரை அரசாங்கத்துக்கு கிடைக்கும் வரிகள் மூலமாகவே மக்களுக்கான நலன்புரி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு

(மாங்குளம் குருப் நிருபர்)



முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு நேற்றுமுன்தினம் (4) காலை முதல் நேற்று (05) அதிகாலை வரை சிறப்பாக நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயபொங்கல் நிகழ்வினை முன்னிட்டு கடந்த 29.05.23 அன்று முல்லைத்தீவு பெருங்கடலில் எடுக்கப்பட்ட கடல் தீர்த்தம் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு கடல் நீரில் விளக்கெரியும் அற்புதம் அம்மன் சந்நிதானத்தில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் (04) முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய விநாயகருக்கான சிறப்பான பூஜைகள் நடைபெற்றதை தொடர்ந்து அம்மன் சந்நிதானத்தில் பூஜை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து ஏட்டில் எழுதப்பட்ட கண்ணகி அம்மனின் வரலாறு படிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நண்பகல் பூஜை இடம்பெற்றது.



பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான புதிய கலீபதுல் குலபாவுக்காக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய கலீபதுல் குலபா உஸ்தாத் மௌலவி அல்ஹாஜ் முஹம்மத் ஸுஹ்ர் ஆலிம் (பாரி) அவர்களை அண்மையில் அன்னாரின் காலி நாவின்னையில் உள்ள இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது,...

(படம்: பேருவளை விசேட நிருபர்)

# சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் 132 ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸ்

பேருவளை விசேட நிருபர்



வரலாற்றுப் பிரசித்திபெற்ற பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் 132ஆவது வருட ஷாதுலிய்யா மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவமும் புதிதாக கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்ட காலி அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளர் மௌலவி எம்.இஸட். ஸுஹ்ர் (பாரி) அவர்களுக்கு வரவேற்பளிக்கும் நிகழ்வும் (10.06.2023) சனிக்கிழமை மாலை அஸர் தொழுகையின் பின்னர் கலீபத்துஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.ஐ.எம். ரபீக் (பஹ்ஜி), எம்.எம். செய்னுல் ஆப்தீன் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் நடைபெறும். சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் மேற்படி மஜ்லிஸ் நடைபெறுவதோடு தொடர்ந்து 9 நாட்கள் மனாகிப் மஜ்லிஸ் இடம்பெறுவதோடு, உலமாக்களினால் மார்க்க உபன்னியாசங்களும் நிகழ்த்தப்படும்.

தினமும் இடம்பெறும் மனாகிப் மஜ்லிஸில் ஆத்மீக ஞானி இமாம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (ரலி) அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஆன்மீகப் பணிகள் பற்றிய விசேட மார்க்கச் சொற்பொழிவும் நடைபெறவுள்ளது.

கலீபதுல் குலபா காலி அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளர் மௌலவி எம்.இஸட். ஸுஹ்ர் (பாரி) கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அஷ்ஷெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா (முர்சி) ஆகியோர் தமாம் மஜ்லிஸில் உரையாற்றவுள்ளதாக சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம். சிஹாப் தெரிவித்தார்.

சீனன்கோட்டை ஜாமியதுல் பாஸியதுஷ் ஷாதுலிய்யா கலாபீட 6 வது தலைப்பாகை சூட்டும் நிகழ்வும் இடம்பெறவுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சீனன்கோட்டை பள்ளிச் சங்க தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியாரின் வழிகாட்டலின் கீழ் இடம்பெறும் இம் மஜ்லிஸில், கலீபாக்கள், உலமாக்கள், முகத்தமீன்கள், இஹ்வான்கள் பங்குபற்றுவர்.

## கண்டி மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழு விவகாரம்

# சாகும்வரை உண்ணாவிரதத்துக்கு தயாராகும் குமுதி

எம்.ஏ.அமீனுல்லா

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்ட காரியாலயத்தில் இணைப்பு அதிகாரி பதவிக்கு இருவர் கோரியதால் ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக இன்று (06) அலுவலகம் திறக்கப்படாவிடின் அலுவலகம் முன் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பிக்க போவதாக மேற்படி அலுவலகத்தின் இணைப்பு அதிகாரியாகப் பணியாற்றிய திருமதி குமுதி விதான கூறுகிறார்.

பிராந்திய அலுவலகத்தின் கண்டி மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தராக 08 வருடங்களாக கடமையாற்றிய திருமதி குமுதுனி விதான கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அதையடுத்து ஏப்ரல் 03 ஆம் திகதி மனித விரஞ்சன் டயஸ் சுமன சேகர நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் சட்டவிரோதமானது என குமுதி விதான தெரிவித்துள்ளார். குறித்த நியமனம் சட்டவிரோதமானது எனக் கூறி திருமதி குமுதினி விதான இடமாற்றத்தை நிராகரித்ததுடன் தொடர்ந்தும் குறித்த பதவியில் இருந்துள்ளார்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு தெரியாமல் உரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் தொடர்பில் கவனம் செலுத்தாத தவிசாளர் மற்றும் செயலாளரும் சேவையை விட்டு விலகியுள்ளதாகவும், நேற்று முன்தினம் 04 ஆம் திகதி தமக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் திருமதி குமுதி விதான தெரிவித்தார்.

ஆணைக்குழுவின் செயலாளர் ரஞ்சித் உயங்கொட மற்றும் குழுவினர் கடந்த 30 ஆம் திகதி கண்டி அலுவலகத்திற்கு சீல் வைத்து, அங்குள்ள கெப் வண்டியை கொழும்பில் உள்ள பிரதான அலுவலகத்திற்கு கொண்டு சென்றதுடன், அன்று முதல் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டி மாவட்ட அலுவலகம் பொலிஸ் பாதுகாப்பில் உள்ளது. இந்த தன்னிச்சையான முடிவுகளால் தனது சம்பளம் கூட இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகவும் திருமதி குமுதி விதான தெரிவித்துள்ளார்.


**செலான் வங்கி பீ.எல்.சி.**

(2007ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்ட இலக்கம் 7 இற்கு அமைய PQ 9 என்ற குறிப்பீட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ம் ஆண்டின் 4ம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறிவிப்பது என்னவென்றால், வங்கிகளினால் கடன்களை மீள பெறுவதற்கான திருத்தப்பட்ட 1990ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) பிரிவு 8 இன் கீழ் செலான் வங்கி பீ.எல்.சி. பணிப்பாளர்கள் சபையினால், 2023/03/28 திகதி நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம்.

**கிளை : காலி**

**கணக்கு இலக்கம் : 0160-30358067-001**

**உனவட்டுனவில்** உள்ள **ஜனத் அபயகுணவர்தன பலிகவதனகே மற்றும் ரவிந்து நிலுக்கா அபயகுணவர்தனா** ஆகியோர் **கடப்பாட்டாளர்கள்/ அடகுவைத்தவர்கள்** ஆக உள்ளதுடன், செலான் வங்கி பீ.எல்.சி (2007 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்ட இலக்கம் 7 இன் கீழ் நிறுவன பதிவு இலக்கம் PQ9 இல் பதிவு செய்யப்பட்டது) சார்பில், பிரசித்த நொத்தாரிசு **டபிள்யூ. தசித்த பிரியாந்தியினால்** அத்தாட்சிப்படுத்தப்பட்ட, **29 மார்ச் 2018** திகதியிடப்பட்ட **1817, 07 நொவம்பர் 2016** திகதியிடப்பட்ட **1334 மற்றும் 1336** ஆகிய இரு முறிகள் மற்றும் **28 மார்ச் 2017** திகதியிடப்பட்ட **1487** ஆகிய இலக்க அடகு முறிகள் மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், **17 ஜனவரி 2023** திகதியன்று வட்டி உள்ளடங்கலாக செலான் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது **ஏழு கோடியே முப்பத்து மூன்று லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு ரூபா நாற்பத்து ஏழு சதம் (ரூபா 73,387,152.47)** மற்றும் ஏனைய வசதி வாய்ப்பிற்கான வட்டி (கடனை தாமதித்து கொடுப்பதற்கான வசதி வாய்ப்பு தவிர்ந்த) சொல்லப்பட்ட முறிகளுக்கு அமைய கீழே தெரிவிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு அமையவும், செலான் வங்கி பீ.எல்.சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் திருத்தப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணைகளில் மேலதிகமாக முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட **1817, 1334, 1336 மற்றும் 1487** ஆகிய இலக்க அடகு முறிகள் மற்றும் சொல்லப்பட்ட **ஏழு கோடியே முப்பத்து மூன்று லட்சத்து எண்பத்து ஏழாயிரத்து நூற்று ஐம்பத்து இரண்டு ரூபா நாற்பத்து ஏழு சதம் (ரூபா 73,387,152.47)** கொண்ட பணத்தொகையை **18 ஜனவரி 2023** திகதி முதல் கீழே தெரிவிக்கப்பட்ட வகையிலான வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் சொல்லப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 இன் கீழ் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) முழு தொகையினையும் அறவிடுவதற்காக, உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் **திருமதி.சந்திமா கமகேயினால்** பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

(a) சொல்லப்பட்ட **காலதாமத மூலதன கடன்** II தொடர்பான வசதி வாய்ப்பான **ஆறு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று இருபத்து ஐந்து ரூபா முப்பத்து ஒரு சதம் (ரூபா 64,359,625.31)** என்பது **17 ஜனவரி 2023** திகதிப்படி **நான்கு கோடியே நாற்பத்து மூன்று லட்சத்து எழுபத்து ஏழாயிரம் ரூபா (ரூபா 44,377,000.00)** தொகை அத்துடன் **18 ஜனவரி 2023 திகதி** முதல் முழுமையாக செலுத்தும் வரை வருடாந்தரம் கொண்ட தொகைக்கு **பதினெட்டு (18%)** சத வீதம் வட்டியுடன் சேர்த்து, வருடாந்தரம், முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

(b) சொல்லப்பட்ட **SMILE III மறுநிதியளிப்பு கடன்** வசதி வாய்ப்பான **தொண்நூறு லட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐந்நூற்று இருபத்து ஏழு ரூபா பதினாறு சதம் (ரூபா 9,027,527.16)** என்பது **17 ஜனவரி 2023** திகதிப்படி **எழுபத்து மூன்று லட்சத்து அறுபத்து எட்டாயிரத்து நாநூற்று இருபத்து ஒரு ரூபா (ரூபா 7,368,421.00)** அத்துடன் **18 ஜனவரி 2023** திகதி முதல் சொல்லப்பட்ட தொகைக்கான வட்டி வீதமான **பத்து (10%) சத வீதம்** வருடாந்தரம், முழு கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படும் வரை.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் உள்ள ஹபராதுவ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட யட்டேஹிமுல்ல மேற்கு - 137B கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட உனவட்டுனவில் உள்ள **புவக்வத்த மறுபெயர் போனவிஸ்ரவ மறுபெயர் ருமஸ்சலகந்தவின்** காணித்துண்டு A இன் உப பிரிவு, உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பீ. விதானகேயினால் தயாரிக்கப்பட்ட 28 நொவம்பர் 2014 திகதியிடப்பட்ட 1134 வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு A1 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் **வடக்கு** ருமஸ்சல கந்த மறுபெயர் போனவிஸ்ரவ (PP702 இன் காணித்துண்டு 8 மற்றும் 9) **கிழக்கு** ருமஸ்சல கந்த மறுபெயர் போனவிஸ்ரவ (PP702 இன் காணித்துண்டு 14) **தெற்கு** இந்த வரைபடத்தில் உள்ள காணித்துண்டுகள் A2 மற்றும் A5 **மேற்கு** புவக்வத்த மறுபெயர் புவக்கடற வத்த மற்றும் இரண்டு ரூட்ஸ் மற்றும் ஆறு தசம் எட்டு இரண்டு பேர்ச் (ஏ0:ரூ02:பே6.82) அல்லது 0.21958 ஹெக்டயர்கள் விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

காணித்துண்டு A3 என அடையாளம் இடப்பட்ட பின்வரும் காணி மீதானதும் உடனானதுமான வழிக்கான உரிமையுடன

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் உள்ள ஹபராதுவ பிரதேச சபை மற்றும் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட யட்டஹமுல்ல 137B கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட உனவட்டுனவில் உள்ள **புவக்வத்த மறுபெயர் போனவிஸ்ரவ மறுபெயர் ருமஸ்சலகந்தவின் காணித்துண்டு A** இன் உப பிரிவு, உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ்.பீ. விதானகேயினால் தயாரிக்கப்பட்ட 28 நொவம்பர் 2014 திகதியிடப்பட்ட 1134 வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு A3 என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் **வடக்கு** அதே வரைபடத்தின் காணித்துண்டு யு1 மற்றும் காணித்துண்டு A2 **கிழக்கு** ருமஸ்சல கந்த மறுபெயர் போனவிஸ்ரவ (PP 702 இன் காணித்துண்டு 14) **தெற்கு** அதே காணியின் காணித்துண்டு B **மேற்கு** வீதி, ஒன்பது தசம் ஆறு எட்டு பேர்ச் (ஏ00:ரூ00:பே9.68) அல்லது 0.02446 ஹெக்டயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டது.

பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. தசித்த பிரியந்தியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 29 மார்ச் 2018 திகதியிடப்பட்ட அடகு முறி இலக்கம் 1817 இன் கீழ் ஆதனம் அடகு வைக்கப்பட்டது.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்ட இரண்டாவது அட்டவணை**

தென் மாகாணம், காலி மாவட்டத்தில் உள்ள ஹபராதுவ பிரதேச சபை எல்லைக்கு உட்பட்ட ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள யத்தேஹீமுல்ல 137B கிராம சேவகர் பிரிவிற்கு உட்பட்ட உனவட்டுனவில் உள்ள புவக்வத்த மறுபெயர் போனவிஸ்ரவ மறுபெயர் ருமஸ்சலகந்தவின் காணித்துண்டு A இன் இணைக்கப்பட்ட காணித்துண்டுகள் B1, B2, B3 B4, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. வீரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 20.02.2014 திகதியிடப்பட்ட 2193 இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு $B^7$ என அடையாளம் இடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் **வடக்கு** அதே காணியின் (வரைபட இலக்கம் 138C) காணித்துண்டு $B^6$ **கிழக்கு** ருமஸ்சல கந்த மறுபெயர் போனவிஸ்ரவ (PP 702 இன் காணித்துண்டு 14) **தெற்கு** காணித்துண்டு B5 (வரைபட இலக்கம் 138C) மற்றும் அதே காணியின் காணித்துண்டு C **மேற்கு** புவக்வத்த மறுபெயர் புவக்கடறவத்த மற்றும் இரண்டு ரூட் மற்றும் மூன்று தசம் ஒரு பேர்ச் (ஏ:0ரூ02:பே3.1) அல்லது 0.2102 ஹெக்டயர் விஸ்தீரணத்துடனான நிலம், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாம்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் ஏ. வீரசிங்கவினால் தயாரிக்கப்பட்ட 19.04.2011 மற்றும் 23.05.2011 திகதியிடப்பட்ட வரைபட இலக்கம் 138C இல் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு $B^6$ என அடையாளம் இடப்பட்ட காணி மீதும் உடனானதுமான வழி உரிமை மற்றும் **ஏனையவைகளும்** உள்ளடக்கப்பட்டுள்ளன.

பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. தசித்த பிரியந்தியினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 07 நொவம்பர் 2016 திகதியிடப்பட்ட 1332, 1334 1336 மற்றும் 28 மார்ச் 2017 திகதியிடப்பட்ட 1487 ஆகிய எல்லா அடகு முறிகளும் அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

**சபையின் பணிப்பாளர்களின் கட்டளைக்கு அமைய**

**(திருமதி) வி.ஏ. பரணகம**
**சட்டத்தரணி**
**உதவி பொது முகாமையாளர் - சட்டத்துறை.**

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| வந்தாறுமூலை கமநல நெற்களஞ்சிய வீதியின் மேம்படுத்தல்கள் |
| கஞ்சிரான்குடா பிரதான வீதிக்கான மேம்படுத்தல்கள் |
| முனைக்காடு உள்ளக வீதிகளுக்கான மேம்படுத்தல்கள் |
| கஞ்சிரான்குடா உள்ளக வீதிகளுக்கான மேம்படுத்தல்கள் |
| மகிழடித்தீவு மற்றும் கொக்கட்டிச்சோலை உள்ளக வீதிகளுக்கான மேம்படுத்தல்கள் |
| முனைக்காடு கிழக்கு மற்றும் முனைக்காடு மேற்கு மற்றும் கிழக்கு உள்ளக வீதிகளுக்கான மேம்படுத்தல்கள் |
| கடுக்காமுனை உள்ளக வீதிகளுக்கான மேம்படுத்தல்கள் |
| களுவாஞ்சிக்குடி 6 ஆம் மைல் கட்டை வீதிக்கான மேம்படுத்தல் |
| BTT வீதி 60+850 இலிருந்து 61+350 கிமீ வரையிலான வீதிக்கு அஸ்பால்ட் கொன்கிறீட் மேற்பதித்தல். |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.06.07 ஆம் திகதியிலிருந்து 2023.06.14 ஆம் திகதி வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் - செயற்றிட்ட அடையாளம்: P 163305

## கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம்

01. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (LDSP) செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
02. வாழைச்சேனை, கோரளைப்பற்று பற்று பிரதேச சபையின் சார்பில் உள்ளூராட்சி அதிகாரசபையின் பெறுகைக் குழு தலைவர் பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவற்றிற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
03. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) நடைமுறையின் ஊடாக இடம்பெறும்.
04. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள துறை மற்றும் தரத்திற்கு நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (ICTAD) பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
05. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணை (பிரிவு 5) இல் வழங்கப்பட்டுள்ளன.
06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வாழைச்சேனை, கோரளைப்பற்று பிரதேச சபையின் செயலாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி இல. 065-2257275 தொலைநகல்: 065-2257275 மின்னஞ்சல் முகவரி: koralaipattups@gmail.com) என்பதுடன் விலைமனு ஆவணங்களை இதே இடத்தில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை பரீட்சித்துப் பார்க்கலாம்.
07. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வாழைச்சேனை, கோரளைப்பற்று பிரதேச சபையின் செயலாளருக்கு மீளளிக்கப்படாத 4,000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்துவதன் பேரில் மற்றும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் 06-06-2023ஆம் திகதி முதல் 2023-06-19ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ள வேண்டும்.
08. விலைமனுக்களை செயலாளர், கோரளைப்பற்று பிரதேச சபை, வாழைச்சேனை எனும் முகவரிக்கு 2023-06-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்பதாக ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
09. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் இறுதி நாளின் பின் 2023-09-15ஆம் திகதி வரை விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும்.
10. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் 2023-06-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு வாழைச்சேனை, கோரளைப்பற்று பிரதேச சபை செயலகத்தில் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.
12. ஒப்பந்தத்தை வழங்குதல் தொடர்பில் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.
13. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன் எந்த நேரத்திலும் இந்தப் பெறுகையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை தொழில் தருநர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

| வேலை விபரங்கள் மற்றும் விலைக்கோரல் இலக்கம் | விலைக் கோரல் தொகை (மில்லியன் ரூபாவில்) வெட் இன்றி | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் மற்றும் துறை | தேவையான விலைமனுப் பிணை முறி | |
|---|---|---|---|---|---|
| | | | | விலைமனுப் பிணை முறி தொகை (ரூபா)) | செல்லுபடிக் காலம் |
| முறக்கொட்டாஞ்சேனையில் பல்நோக்கு சேவை நிலையத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) **LDSP/EP/BT/KPPS/2021/01** | 12.85 மில். | 30 நாட்கள் | C6 மற்றும் அதற்கு மேல் கட்டிடம் | 130,000.00 | 2023-10-03 வரை |

**தலைவர்,**
**உள்ளூராட்சி பெறுகைக் குழு, LDSP,**
**செயலாளர்,**
**கோரளைப்பற்று பற்று பிரதேச சபை, வாழைச்சேனை,**
**2023-06-06**

# களனிப் பல்கலைக்கழகம்

# விலைக்கோரலுக்கான அழைப்பு

| | | |
|---|---|---|
| திகதி | : | 2023 ஜூன் 05ஆம் திகதி |
| கடன் மற்றும் தலைப்பு | : | கடன் 3698/3699 - விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம் |
| ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு | : | MOE/STHRD/KE/CRG/R2-E54: களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்தின் X-RAY Diffractometer (XRD) முறைமைக்கான பெறுகை |
| விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி | : | 2023 ஜூலை 05ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு |

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி, அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. களனி பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, செயற்றிட்ட பிரதி பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் MOE/STHRD/KE/CRG/R2-E54 களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்தின் X-RAY Diffractometer (XRD) முறைமைக்கான பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது களனி பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்தின் உத்தேச நூலகக்கட்டிடத்திற்கு இயந்திரவியல் பொறியியல் வேலைத்தளத்திற்காக உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல் நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பதை அடக்குகின்றது.
3. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
4. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.

| உருப்படி இல. | விபரங்கள் | அலகுகளின் எண்ணிக்கை | கடந்த 5 வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல். (இல. ரூபா) | கடந்த மூன்று வருடங்களில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலை மனுதாரரினால் பெற்றுக் கொள்ளப் பட்ட மொத்த பணக் கொடுப்பனவு களாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு. (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறித் தொகை (இல. ரூபா) |
|---|---|---|---|---|---|
| லொட் 1 | X-RAY Diffractometer System (XRD) | 01 | 38 மில்லியன் | 152 மில்லியன் | 800,000 |

5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11ஆம் தளம் (அறை இல. L 11-5)**
**கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனி பல்கலைக்கழகம், பல்கலைக்கழக டிரைவ்,**
**புலுகஹ சந்தி, கண்டி வீதி, களனி, இலங்கை.**
**தொலைபேசி** : **+94 (0)11 2984879, 071-9607455, 071-4492382**
**தொலைநகல்** : **+94 11 2984879**
**மின்னஞ்சல்** : **dpd-sthrd@kln.ac.lk**

6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "MOE/STHRD/KE/CRG/R2-E54 களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்தின் X-RAY Diffractometer (XRD) முறைமைக்கான பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு வேண்டுகோள் ஒன்றையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 15,000.00 ரூபாவை செலுத்துதல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் 2023 ஜூலை 04ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை வழங்கப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023 ஜூன் 13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு களனி, கண்டி வீதி, பல்கலைக்கழக டிரைவ், களனி பல்கலைக்கழகத்தின் கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடத்தின் மாநாட்டு அறையில் இடம்பெறும்.
8. 2022 ஜூலை 13ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்திட்ட அமுல்நடாத்தல் பணிமனை,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**11ஆம் தளம் (அறை இல. L 11-5)**
**கணனி மற்றும் தொழில்நுட்பவியல் பீடம்,**
**களனி பல்கலைக்கழகம், பல்கலைக்கழக டிரைவ்,**
**புலுகஹ சந்தி, கண்டி வீதி, களனி,**

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் **மூலப்பிரதி** மற்றும் **நகல்பிரதி** என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "MOE/STHRD/KE/CRG/R2-E54 களனிப் பல்கலைக்கழகம், கணனி மற்றும் தொழில்நுட்பப் பீடத்தின் X-RAY Diffractometer (XRD) முறைமைக்கான பெறுகை" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,**
**கல்வி அமைச்சு,**
**363E, ஹொரகஹகந்த வீதி, தலங்கம வடக்கு,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல. இலங்கை.**
2023 ஜூன் 05

# SD & CC

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

# பெறுகை அறிவித்தல்

## பாவிக்கப்பட்ட வாகனங்கள், பொறித்தொகுதிகள், இயந்திராதிகள், கருவிகள், கொங்கிறீட் உற்பத்திகள் மற்றும் கனரகப் பொருட்களின் விற்பனை

இரத்மலான, 7ஆம் இலக்கத்திலுள்ள பொருபன வீதி, அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபன இடப்பரப்பு, மஹியங்கனை வேரகன்தொட்ட கொன்கிறீட் திறந்தவெளி மற்றும் பன்னலவிற்கு அருகாமையிலுள்ள போபிட்டிய கொன்கிறீட் திறந்தவெளி மற்றும் மதவச்சி கொங்கிறீட் திறந்தவெளி, பன்னங்கமுவ மற்றும் பரந்தன் முற்றவெளியிலுள்ள பின்வரும் பாவிக்கப்பட்ட உருப்படிகளின் விற்பனைக்காக அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபன, கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவரினால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

**"Construction Machinery & Vehicles, Concrete Mixers, Dozer, Water Pumps, Poker Vibrators, Light plant, Hardware items, Tools, Spare Parts, Aluminum Bars, Tyres, Furniture, Foundry Soil, Steel Bars (High Tension, & Tor / Mild Steel), Concrete Products (Pipes, Beams, Slabs, Fence Posts etc) and other Unserviceable Items"**

3,000.00 + 2.5% SSCL + 15% VAT ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர், இரத்மலான, பொருபன பாதை, 7ஆம் இலக்கத்திலுள்ள அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் இயையுடைய வேலைத் தளங்களில் திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 4.00 மணி வரையும் உருப்படிகளை பரீடசித்துப் பார்க்கலாம்.

கேள்விகள் தலைவர், கூட்டுத்தாபன பெறுகைக் குழு, அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம், இல. 7, பொருபன வீதி, இரத்மலானை என முகவரியிடப்பட்டு முத்திரையிடப்பட்டு, பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வியைத் தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"TENDER FOR THE SALE OF USED VEHICLES, MACHINERY & MATERIALS"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

கேள்வி ஆவணங்கள் 2023.06.26ஆம் திகதியன்று மதியம் 12.00 மணி வரையும் வழங்கப்படும்.

இரத்மலான, பொருபன வீதி, 7ஆம் இலக்கத்திலுள்ள அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்தில் 2023.06.27ஆம் திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் மூடப்பட்டு அதன் பின்னர் உடனடியாகவே அதே இடத்தில் திறக்கப்படும். தாமதமான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட விலைமனு பிணையமொன்றை விலைமனுதாரர் வழங்கல் வேண்டும் அல்லது ஒவ்வொரு முன்வைப்புடனும் ஒவ்வொரு உருப்படியின் பெறுமதியின் 2% இற்கு நிகரான வீதத்தில் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

எந்தவொரு மேலதிக விபரங்களையும் இரத்மலான, பொருபன வீதி, 7ஆம் இலக்கத்திலுள்ள அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபன வழங்கல் முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தொலைபேசி இல.:** 2632146/ 2607560/ 2607566.

**தலைவர்,**
**கூட்டுத்தாபன பெறுகைக் குழு,**
**அரச அபிவிருத்தி நிர்மாண கூட்டுத்தாபனம்.**

**இல. 7, பொருபன வீதி,**
**இரத்மலான.**

*"உட்கட்டமைப்பு நிர்மாணத்தின் முன்னோடிகள்"*


# கொழும்பு மாநகர சபை

## 2023ஆம் ஆண்டிற்கான வரி மதிப்பீட்டு ஆவணங்களை பரிசோதித்தல்

கொழும்பு மாநகர சபை அதிகாரப் பகுதியினுள் அமைந்துள்ள சகல சொத்துக்களுக்காகவும் சொத்து விபரங்கள், வருடாந்த பெறுமதி மற்றும் காலாண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய வரிப்பணம் போன்றவற்றை உள்ளடக்கிய 2023 ஆம் ஆண்டிற்குரிய வரி மதிப்பீட்டு ஆவணங்களை பொது மக்களின் பார்வைக்காக கொழும்பு மாநகர சபையின் மாநகர வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் சாதாரண கடமை நேரங்களுள் வைக்கப்பட்டுள்ளதென மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 235 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறியத்தருகின்றேன்.

2023 ஆம் ஆண்டின் வரி மதிப்பீட்டு அறிவித்தலின் சான்றுபடுத்தப்பட்ட பிரதியொன்றை அல்லது வரிப்பணம் பதிவேட்டின் தெரிவுசெய்யப்பட்ட பகுதியின் பிரதியொன்றை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கும் சொத்து உரிமையாளருக்கு உரிய கட்டணத்தை செலுத்தி வரி மதிப்பீட்டுத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளவும் முடியும்.

**ஜே.எம். பத்ராணி ஜயவர்தன**
**மாநகர ஆணையாளர்,**
**கொழும்பு மாநகர சபை**

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 | 011 2 429 342/ 343

# பிரசித்த ஏல விற்பனை

01ம், 02ம் மார்ச் 2023, 06ம், 07ம் ஏப்ரல் 2023, 03ம், 04ம் மே 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல, இரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 22 ஜீன் 2023 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

**வரையறுக்கப்பட்ட கம்பனியின் தீர்மானிக்கப்பட்ட மூலதனத்தை குறைப்பது சம்பந்தமான பொது அறிவித்தல்**

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்ட 59(2) பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது

கம்பனியின் பெயர் : S.F.L.Services (Pvt) Ltd

கம்பனி பதிவிலக்கம் : PV1463

தீர்மானிக்கப்பட்ட மூலதனம் : ரூ.17,760,000,000/- (1,776,000,000 பங்குகள்)

குறைப்பிற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்ட மூலதனம் : ரூ.16,275,000,000/- (1,627,500,000 பங்குகள்)

Secretary,
S.F.L.Services (Pvt) Ltd
05.06.2023

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம்**
**(460 ஆம் அத்தியாயம்)**
**7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்டஈட்டு பரீட்சைகள் 2023.06.09ஆந் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக்காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.10.12 ஆம் திகதி 2301/36 மற்றும் 2022.09.15 ஆம் திகதி 2297/55 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | குருநாகல் | | |
| பிரதேச செயலாளர் பிரிவு | பொல்பித்திகம | | |
| கிராம சேவகர் பிரிவு | 352 பொகொள்ள | | |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | 4-3/10/2019-MV/465-G DIVPP/LAND/LA/ACQUI/3-2/352/4 | | |
| வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல | முழு காணியின் விஸ்தீரணம் |
| இ.நி.வ இலக்கம் 1 இல் பிற்சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 2 | பல்லேகெலே | 132, 134, 136, 144, 148, 149, 153, 154, 157, 160-164, 170-172, 174, 177, 179, 181 வரை | 1.6356 ஹெக்டயார் |
| இ.நி.வ இலக்கம் 9 இல் பிற்சேர்க்கை இல 8, தாள் இலக்கம் 13 | வவ்லேவ | 400, 402-404, 407, 414, 417-420, 422, 423, 426, 427 வரை | 1.0514 ஹெக்டயார் |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | 4-3/10/2019-MV/465-G DIVPP/LAND/LA/ACQUI/3-2/352/4 | | |
| வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல | முழு காணியின் விஸ்தீரணம் |
| இ.கி.வ இலக்கம் 2851 இல் பிற்சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 3 | பொகொள்ள | 49, 50, 52, 54, -59, 61-67, 71, 72, 74-79, 82, 83, 85-87 வரை | 1.9772 ஹெக்டயார் |

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

**பிரதேசசெயலாளர், காரியாலயம், பொல்பித்திகம.**
**திகதி : 2023.06.01**

# இலங்கை வங்கி

## ஏல விற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.**

கடன் தொடர்பு இல. 82321573

இல.120, முரகல க்ரபிக்ஸ், குருநாகலை வீதி, ஜெயகங்கா சந்தி, தலாவை எனும் முகவரியைச் சேர்ந்த திரு.ரணசிங்ஹ ஆராச்சிகே பியசேன மற்றும் திரு.ரத்னாயக்க ஆனந்த ரத்னாயக்க ஆகியோரின் பொறுப்புகளுக்காக இல. 120, முரகல க்ரபிக்ஸ், குருநாகலை வீதி, ஜெயகங்கா சந்தி, தலாவை எனும் முகவரியைச் சேர்ந்த திரு.ரணசிங்ஹ ஆராச்சிகே பியசேன என்பவரின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.03.03ஆம் திகதியன்றும் 2023.05.19ஆம் திகதியன்றும் வெள்ளிக்கிழமைகளில் முறையே 2322 மற்றும் 2333 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.03.10ஆந் திகதி வெள்ளிக்கிழமை மற்றும் 2023.05.18ஆந் திகதி வியாழக்கிழமை டெய்லி நியூஸ், தினகரன் மற்றும் தினமின ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவினையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷன், ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.06.28ஆம் திகதி புதன்கிழமை மு.ப.11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

'அரச காணி' (கொட இடம) என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் என்.பீ. ஏக்கநாயக்க தயாரித்த 2014.05.22ஆம் திகதிய 1677ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டு 01 வட மத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், நுவரகம் பலாத கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில், அனுராதபுரம் மாநகர எல்லைகளுள், வன்னியன்குளம கனாதர கோரளை, இல-246 கிராம அலுவலர் பிரிவில் வன்னியாகுளம என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு 01 ஆனது வடக்கில் இவ்வரைபடத்தில் 2ஆம் இலக்கக் காணித்துண்டையும் கிழக்கில் இவ்வரைபடத்தில் 2ஆம் இலக்கக் காணித்துண்டையும் தெற்கில் F.V.P259 என்ற வரைபடத்தில் 647ஆம் இலக்கக் காணித்துண்டையும் மேற்கில் F.V.P259 என்ற வரைபடத்தில் 642ஆம் இலக்கக் காணித்துண்டையும் (வீதி) எல்லைகளாகக் கொண்டுள்ளது. அங்குள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அனைத்துடனும் இருபத்து மூன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-றூ0- பே23.20) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து எட்டு ஏழு ஹெக்டேயர்கள் (0.0587 ஹெக்டேயர்கள்) பரப்பளவில் காணித்துண்டு 01 LDO D 30/40 எனும் இலக்கத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டக் காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 01 நில அளவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட F.V.P259 என்ற வரைபடத்தில் 646ஆம் இலக்கக் காணித்துண்டினது துணைப் பிரிவும் மீளளவையுமாகும். இது பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

நில அளவை பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட F.V.P259 என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான 'ரஜயே இடம' (கொட இடம) என அழைக்கப்படும் 646ஆம் இலக்கக் காணித்துண்டானது வட மத்திய மாகாணம், அனுராதபுர மாவட்டம், நுவரகம் பலாத கிழக்கு பிரதேச செயலகப் பிரிவில், அனுராதபுரம் மாநகர எல்லைகளுள், வன்னியன்குளம கனாதர கோரளை, இல-246 கிராம அலுவலர் பிரிவில் வன்னியன்குளம என்ற கிராமத்தில் அமைந்துள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட காணித்துண்டு 646 வடக்கில் F.V.P259 என்ற வரைபடத்தில் 643, 644, 645ஆம் இலக்கக் காணித்துண்டுகளையும் கிழக்கில் F.V.P259 என்ற வரைபடத்தில் 645ஆம் இலக்கக் காணித்துண்டையும் தெற்கில் F.V.P259 என்ற வரைபடத்தில் 647ஆம் இலக்கக் காணித்துண்டையும் மேற்கில் F.V.P259 என்ற வரைபடத்தில் நாகசேன மாவத்தையின் ஒதுக்கத்தையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டு அங்குள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள், மற்றும் அனைத்துடனும் பூச்சியம் தசம் ஒன்று பூச்சியம் மூன்று ஹெக்டேயர்கள் (0.103 ஹெக்டேயர்கள்) பரப்பளவில் LDO D 15/46 எனும் இலக்கத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டக் காணிப்பதிவகத்தில் பதியப்பட்டுள்ளது.

**ஒதுக்கங்கள்:**

1. இக்காணியில் அல்லது அதற்கு மேலுள்ள கனிமங்கள் (இவ்வனுமதியில் விலைமதிப்பற்ற கல் எனக் குறிப்பிடப்படும்) அனைத்தினதும் உரிமையும் அத்தகையவற்றை தோண்டுவதற்கும், தேடுவதற்கும், அங்கு பணியாற்றுவதற்கும் மற்றும் எடுத்துச் செல்வதற்குமான உரிமையும் அரசுக்கே உரியதாகும்.
2. காணி உரிமையாளருக்கு காணிமீதுள்ள உரிமையானது இவ்வனுமதித் திகதியில் தற்போதுள்ள எந்தவொரு வழியுரிமைக்கும் அல்லது பிற சேவக உரிமைக்கும் உட்பட்டதாகும்.

**நிபந்தனைகள்:**

1. 0.0253 ஹெக்டேயர்கள்/ஏக்கர்/-மேட்டுநிலம்......ஹெக்டேயர்கள்/ஏக்கர்கள் நீர்பாசன நிலம் எனப்படும் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றினை உரிமையாளர் விற்பனை செய்யக்கூடாது.
2. உரிமையாளர் இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள ¼ குறைந்தபட்சப் பகுதியைவிடக் குறைவான பங்கின் பிரிக்கப்படாத பங்கினை விற்பனை செய்யக்கூடாது. அதாவது.
3. நிபந்தனை 1இல் குறிப்பிடப்பட்டுள்ள துணைப்பிரிவின் அலகினை விட பரப்பளவில் குறைவான இக்காணியின் பிரிக்கப்பட்ட பங்கொன்றிற்கு எந்வொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.
4. நிபந்தனை 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள இக்காணியின் குறைந்தபட்சப் பகுதியை விடக் குறைவான பிரிக்கப்படாத பங்கொன்றிற்கு எந்வொரு நபரும் உரிமையாளராகக் கூடாது.
5. இக்காணியோ அல்லது அதன் எந்வொரு பகுதியோ நீர்ப்பாய்ச்சத்தகு பிரதேசமாகவிருப்பின் அல்லது உள்ளடக்கம்...6 ஏற்கனவே கட்டுமானத்தின்போது கட்டப்பட்ட அல்லது இனிமேல் கட்டப்படவிருக்கும் நீர்ப்பாசனப் பணியின்போது நீர்ப்பாசனத்திற்கு உட்படுமாயின், உரிமையாளர் நீர்ப்பாசனப் பகுதியைப் பொறுத்து நீர்ப்பாசனக் கட்டளை (அத்தியாயம் 453) ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும் இணங்க வேண்டும்.
6. அரச முகவரின் எழுத்துப்பூர்வமான அனுமதியையும் உரிய அதிகார சபையிடம் உரிமத்தினையும் பெற்றாலன்றி, உரிமையாளர் இக்காணியில் அல்லது அதன் உள்ளிருக்கும் கனிமங்களைத் தோண்டவோ, தேடவோ, எடுக்கவோ, உபயோகப்படுத்தவோ, விற்கவோ இல்லையெனில் அப்புறப்படுத்தவோ கூடாது.
7. பிரதேச செயலாளரின் எழுத்துமூலமான முன் அனுமதியின்றி காணியினது அல்லது அதன் எந்தவொருப் பகுதியினதும் இயல்பினை மாற்றக்கூடாது.

ஏலவிலை கூறுவோர் 025 2275090 என்ற தொலைபேசி எண் ஊடாக தலாவை கிளையின் முகாமையாளரைத் தொடர்புகொண்டு

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி.
செல்வி. பீ.ஜீ.என். இரோசினி
முகாமையாளர்
இலங்கை வங்கி, தலாவை.
திகதி: 2023.05.23

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# பலாங்கொட நகர சபை

## விலைமனு அறிவித்தல்

பலாங்கொட நகர சபையின் பொது சந்தை இலக்கம் 17 என்ற கோழி இறைச்சிக்கடை அறையைக் குத்தகைக்கு விடுவதற்காக தகைமையுள்ள குத்தகைக்காரரொருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

2023 ஜுலை 27 முதல் 2024 ஜுலை 26 வரையான ஒருவருட காலத்திற்கு பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கோழி இறைச்சிக் கடையைக் குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பலாங்கொட நகர சபையின் செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கருமங்கள் செயற்பாடுகளை மேற் கொள்ளும் அலுவலராகிய திசாநாயக்க முதியன்சேலாகே ஜனித் உதயங்க தர்மரத்ன ஆகிய என்னால் 2023 ஜுன் 27 அன்று மு.ப. 10.00 வரை ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் அலுவலக தொலைபேசி இலக்கம் 045-4930830ஐ அழைத்து அல்லது info@balangode.cu.gov.lk இணையத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**விலைமனுப்படிவங்களை வழங்கல்**
2023 ஜுன் 26 அன்று பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப்படிவங்கள் பலாங்கொட நகர சபை அலுவலகத்தில் வழங்கப்படும்.

**விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல்**
2023 ஜுன் 27 அன்று மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் பூரணப்படுத்தப்பட்ட முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரடியாகச் சேர்த்தல் அல்லது செயலாளர், பலாங்கொட நகர சபை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் 2023. ஜுன் 27 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு முன்வைக்கலாம். தாமதமாகக் கடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**விலைமனுத்திறத்தல்**
2023 ஜுன் 27 அன்று மு.ப. 10.30 இற்கு விலைமனுத்திறக்கப்படும். அவ்வேளையில் விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**அட்டவணை**

| தொடர் இலக்கம் | விலைமனுக் கோரப்படும் வியாபாரத்தின் தன்மை | மீளளிக்கப் படும் விலைமனு வைப்புத் தொகை ரூபா | படிவக் கட்டணம் ரூபா | ஆகக் குறைந்த மாதாந்த டெண்டர் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | பொதுச் சந்தை இல. 17 கோழி இறைச்சிக் கடை | 10,000.00 | 1,000.00 | 33,000.00 |

**விஷேட நிபந்தனைகள்**

- ✓ விலைமனுக்களை உள்ளடக்கும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் விலைமனுவின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.
- ✓ விலைமனுத் தொகையுடன் மற்றும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களிற்காக அரச வரிகளும் செலுத்தப்படல் வேண்டும்.
- ✓ தேர்ந்தெடுக்கப்படும் குத்தகைக்காரர்கள் ஒப்பந்தப் பிணைத் தொகையாக மூன்று மாதங்களிற்கான (3) தொகையை சபைக்குச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அதனை இரண்டு தவணைகளாக சபையில் செலுத்துதல் வேண்டும். அத்தொகையின் மூன்றிலொன்று அல்லது ஒரு மாத வாடகையை குத்தகைக்காரர் தேர்ந்தெடுத்த பின்னர் முதல் ஒரு மணித்தியாலத்திற்குள் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மிகுதியுள்ள இரண்டு பகுதிகளையும் அல்லது இரண்டு மாத வாடகையை ஒரே முறையில் செலுத்தி 2023 ஜுலை 26 அன்று ஆகும்பொழுது ஒப்பந்தத்தில் கைச் சாத்திடுதல் வேண்டும்.
- ✓ அனைத்து அல்லது எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை பலாங்கொட நகர சபையின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.
- ✓ இதற்கான நிபந்தனைகள் மற்றும் விபரக்குறிப்புக்கள் விலைமனுப் படிவங்களுடன் வழங்கப்படும்.
- ✓ மேலதிக விபரங்களிற்காக வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் அழைக்கவும்.

**டி.எம்.ஜே.யூ. தர்மரத்ன,**
**செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கருமங்கள் செயற்பாடுகளை அமுலாக்கும் அலுவலர்,**
**பலாங்கொட நகர சபை.**

2023 மே 06ஆம் திகதி
**பலாங்கொட நகர சபையில்**

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-09

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பெறுகைக்குழு தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார்.

| No. | Category | Qty |
|---|---|---|
| 1 | Intense Black Web ink | 1000 kg |

விலைமனு ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம் 2023.06.26ஆந் திகதி பி.ப. 2.00 மணி வரையாகும்
விலைமனு குறிப்பு இல. : SCP2/NCB04/IB/Web/2022-1

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000/- கொண்டதும் அத்துடன் விலை மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்கள் கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பெறுகைக்குழு தலைவர்,**
**'அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு -08.**
2023.06.06
**தொலைபேசி: 011-2694898**
**இணையத்தளம்: www.documents.go.lk**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **13/06/2023**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **14/06/2023**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **15/06/2023**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.

திகதி : **15/06/2023**
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

# பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 04/10/17/24 ஜூலை 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 04/10/17/24 ஜூலை 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 04/10/17/24 ஜூலை 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 05/11/18/25 ஜூலை 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 06/12/19/26 ஜூலை 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 07/13/20/27 ஜூலை 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 08/14/21/28 ஜூலை 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE
இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

# L O L C ஜெனரல் இன்சூரன்ஸ் PLC - PQ00251202

## 2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான பட்டியலிடப்பட்டதன் விளைவாக 2வது வருடாந்தப் பொதுக்கூட்டம்

LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சியின் பட்டியலிடப்பட்டதன் விளைவாக 02வது வருடாந்த பொதுக்கூட்டம் (AGM) மெய்நிகர் வருடாந்தப் பொதுக் கூட்டத்தை நடத்துவதற்காக கொழும்பு பங்குச் சந்தை (CSE) வழங்கிய வழிகாட்டுதல்களுக்கு இணங்க ஒலி-ஒளி மூலம் 2023 ஜூன் 30ஆம் தேதி காலை 10.00 மணிக்கு 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, ராஜகிரிய எனும் நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை மையமாகக் கொண்டு நடைபெறும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சந்தையில் குறைந்த அளவு காகிதம் கிடைப்பதால், பங்குதாரர்களுக்கு வருடாந்த அறிக்கையின் அச்சிடப்பட்ட நகல்களை நிறுவனத்தால் வழங்க முடியவில்லை என்று பங்குதாரர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

நிறுவனத்தின் பணிப்பாளர் சபை, 2022/04ஆம் இலக்க CSE சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க பட்டியலிடப்பட்ட நிறுவனங்களுக்கு உட்பட்ட கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடுதல் விதிகளின் 7.5 (b) (i) விதியினால் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்வதை கவனத்தில் கொண்டு, 2022 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையை நிறுவனத்தின் இணையதளத்திலும் (https://www.lolcgeneral.com/) CSE இன் இணையதளத்திலும் (https://www.cse.lk) வெளியிடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (https://www.cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LGIL.N0000.) "நிதி - ஆண்டு அறிக்கைகள்" என்ற தலைப்பின் கீழ், பங்குதாரர்களின் குறிப்புக்காக உள்ளது. வருடாந்தப் பொதுக் கூட்டத்திற்கான அறிவிப்பு, பதிலாள் படிவம், பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை மற்றும் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான பதிவு படிவம் ஆகியவை நிறுவனத்தின் இணையதளத்திலும் (https://www.lolcgeneral.com/) CSE இன் இணையதளத்திலும் (https://www..cse.lk/pages/company-profile/company-profile.component.html?symbol=LGIL.N0000.) "அறிவிப்புகள்" என்ற தலைப்பின் கீழ் உள்ளன. மெய்நிகர் வருடாந்தப் பொதுக்கூட்டத்திற்கான பதிவு மற்றும் பங்கேற்பது தொடர்பான தொடர்புடைய வழிமுறைகளை மேற்கூறிய இணைய இணைப்புகளிலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

பங்குதாரர்கள் ஏதேனும் சந்தேகங்களுக்கு, LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சியின் நிறுவனச் செயலகப் பிரிவில் திருமதி சதுரங்கனி செனவிரத்னவை அலுவலக நேரத்தில் (காலை 8.30 முதல் மாலை 5.00 வரை) எந்த வேலை நாளிலும் தொடர்பு கொள்ளலாம்:

தொலைபேசி: 011 5880880 (நீடிப்பு 2360)

மின்னஞ்சல்: chathuranganis@lolc.com

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ள, அல்லது கலந்துகொண்டு வாக்களிக்க உரிமையுள்ள பங்குதாரர்கள், மெய்நிகர் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் மட்டும் கலந்துகொள்ள பதிலாளை (proxy) நியமிக்கலாம் அல்லது மெய்நிகர் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்ளலாம் மற்றும் அவரது இடத்தில் வாக்களிக்கலாம். பதிலாள் நிறுவனத்தின் பங்குதாரராக இருக்க வேண்டிய அவசியமில்லை. பதிலாள் படிவத்தை மேற்கூறிய இணைய இணைப்புகளில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**LOLC ஜெனரல் இன்சூரன்ஸ் பிஎல்சி**

**LOLC கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**
**நிறுவனத்தின் செயலாளர்கள்.**

2023 ஜூன் 05

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை - பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கட்டிட திருத்தவேலைகள், மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் சேவை மற்றும் தொலைபேசி தொடர்பாடல் முறைமையைப் பராமரிப்பதற்கு ஒப்பந்தக்காரர்களை நியமித்துக் கொள்வதற்காக 2023.06.20ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கட்டிட திருத்தவேலைகள்

| இல. | ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர் | ஆவணக் கோவை இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | ICTAD தரம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | வெளி நோயாளர் பிரிவு மற்றும் சிகிச்சைக் கட்டிடத்தில் (புதிய நிர்வாகக் கட்டிடம்) நீர் வடிகாலமைப்பு முறைமை மற்றும் மலசலகூடம் / குளியலறை வசதிகளை மறுசீரமைத்தல் மற்றும் விஸ்தரித்தல்) | DGHP/ACC/F8/20-02/2023 | 3,500.00 | C8, C7 அல்லது C6 | 152,000.00 |
| 2 | B சத்திரசிகிச்சையகத்தின் கூரை திருத்தவேலைகள் | DGHP/ACC/F8/20-03/2023 | 3,500.00 | C9, C8 அல்லது C7 | 50,000.00 |

02. மின் பிறப்பாக்கி இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் சேவை செய்தல்

| இல. | ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர் | ஆவணக் கோவை இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | 72KVA மின் பிறப்பாக்கி இயந்திரத்தை பராமரித்தல் மற்றும் சேவை செய்தல் | DGHP/ACC/F8/32/2023 | 3,000.00 | 4,000.00 |
| 2 | 650KVA மின் பிறப்பாக்கி இயந்திரத்தை பராமரித்தல் மற்றும் சேவை செய்தல் | DGHP/ACC/F8/33/2023 | 3,000.00 | 12,000.00 |

03. தொலைபேசி தொடர்பாடல் முறைமையைப் பராமரித்தல் **2023/2024**

| இல. | ஒப்பந்தத்தின் / வேலையின் பெயர் | ஆவணக் கோவை இலக்கம் | விலைமனு ஆவணக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறிக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1 | தொலைபேசி தொடர்பாடல் முறைமையைப் பராமரித்தல் 2023/2024 | DGHP/ACC/F8/34/2023 | 3,000.00 | 20,000.00 |
| 2 | 650KVA மின் பிறப்பாக்கி இயந்திரத்தை பராமரித்தல் மற்றும் சேவை செய்தல் | DGHP/ACC/F8/33/2023 | 3,000.00 | 12,000.00 |

01. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரலின் கீழ் கட்டிட நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகளுக்காக விலைகளைக் கோருகையில் 50 மில்லியன் ரூபாவுக்கு குறைந்த நிர்மாணங்களுக்கு பிராந்திய முன்னுரிமையாக 05% மற்றும் CIDA முன்னுரிமை (Regional Preference) 4/2016(II) அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
02. விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விலைமனு ஆவணக் கட்டணமாக இந்த வைத்தியசாலையின் கணக்காளருக்கு பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது கதுருவெல இலங்கை வங்கியின் கணக்கு இலக்கம் 7040277, DIRECTOR – DISTRICT GENERAL HOSPITAL POLONNARUWA என்ற கணக்கிற்கு பணத்தை வைப்பிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. விலைமனுக்களைக் கொள்வனவு செய்யும் போது கட்டிட நிர்மாணங்கள் மற்றும் திருத்தவேலைகள் தவிர கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் உருப்படிக்கு இயைபான விலைக்கோரல் பெறுமதி 05 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்டால், விலைமனுதாரர் அல்லது அவர் சார்பான பிரதிநிதியொருவர், உப பிரதிநிதியொருவர் அல்லது முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் கொழும்பு பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொண்ட பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. இந்த விலைக்கோரலுக்கு இயைபான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் (Pre-Bid Meeting) 2023-06-15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொலன்னறுவை மாவட்ட வைத்தியசாலையின் 02ஆம் மாடியில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ள உத்தேசிக்கும் வழங்குநர்கள் நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் ஊடாக 2023-06-13ஆம் திகதிக்கு முன் dghpolonnaruwapro@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
05. விலைக்கோரல் தனி உருப்படியாக முன்வைக்கப்பட்டுள்ளது என்பதுடன் தனி உருப்படியாகவே விலைக்கோரல் மதிப்பீடு மேற்கொள்ளப்படும். விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்கும் போது பதிலீடுகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் கூடாது என்பதுடன் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
06. மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.
07. ஆர்வம் கொண்ட மற்றும் தகைமையுடைய விலைமனுதாரர்கள்/முகவர்கள் அல்லது பெயரிடப்படுபவர்களால் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளப்படும் முழுமையான கேள்வி ஆவணத் தொகுதியில் மாத்திரம் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
    i. பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு வரையப்பட்ட கடிதத் தலைப்பிலான எழுத்து மூலக் கடிதம்
    ii. மேற்காணும் வகையிலான மீளளிக்கப்படாத கட்டணத்தை பொலன்னறுவை மாவட்டப் பொது வைத்தியசாலை கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு
08. பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் 027-2225780 அல்லது 027-2222261 (நீடிப்பு இல. 362) எனும் தொலைபேசி இலக்கங்களின் வாயிலாக விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2023-06-19ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தினுள் கடமை நாட்களில் மட்டும் பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகை மற்றும் கிரய முகாமைத்துவ பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
09. பெறுகை ஆவணங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உருப்படியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, பொலன்னறுவை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு 2023-06-20ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து (அன்றைய தினமே பி.ப. 2.00 மணிக்கு) பொலன்னறுவை மாவட்ட பொது வைத்தியசாலையில் உள்ள மைத்திரிபால சிறிசேன கேட்போர் கூடத்தில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதியொருவர் கலந்து கொள்வாரானால் அதை உறுதி செய்யும் ஆவணத்தை நிறுவனத்தின் கடிதத் தலைப்பின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. இந்தப் பெறுகை தொடர்பில் வைத்தியசாலை பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**பொலன்னறுவை.**
2023-06-02.

Marriage Proposals in the Sunday Observer
Is the best way to fulfil your Future Dreams

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்

### 2023/2024 ஆண்டில் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன வளவிலுள்ள கட்டிடங்களின் ஜெனிட்டோரியல் சேவைகள் மற்றும் தோட்டப் பராமரிப்பு வேலைகள்

**விலை மனு இலக்கம்: 40/2023.06.28**

2023.08.01 முதல் ஒரு வருட காலத்திற்கு மேற்படி சேவைகளை வழங்குவதற்காக முன்னணி ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குநர்கள் மற்றும் கட்டிடங்கள் மற்றும் தோட்டப்பராமரிப்பு வேலை வழங்குநர்களிடமிருந்து இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.

2023.06.27 அன்று அல்லது அதற்கு முன்னர் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பணிப்பாளர் (பெறுகை) இற்கு எழுத்துருவ விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து வார வேலை நாட்களில் (திங்கள் முதல் வெள்ளி வரை வர்த்தக விடுமுறை தினங்கள் தவிர்ந்த) இதற்கான விதிமுறைகளை ஏனைய விபரங்கள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய மாதிரி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத ரூபா 5,000.00 இற்கான (ரூபா ஐயாயிரம்) தொகை விலைமனுப் படிவத் தொகுதி ஒன்றிற்காக அறவிடப்படும் பெறுகை அலுவலகத்தில் விலைமனுப் படிவங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.

விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைமனுப் பிணையமொன்று விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2023.06.28 அன்று பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்னர் கொழும்பு 07 சுதந்திர சதுக்கம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், பெறுகைக் குழுத்தலைவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். 2023.06.28 அன்று பி.ப. 3.00 கடந்ததும் உடனடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அனுமதிபெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுத் திறக்கப்படும்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம், கொழும்பு -07.**

Repeat Your Ad For Better Offers


Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

106



**கார்கள்** விற்பனைக்கு

NC CAU- 5149 Zotye Z100 2016 car for அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொலைபேசி 0714 5429 5 8. 033790

113

**சுசூகி கார்கள்** விற்பனைக்கு

NC CAH-0761 Suzuki alto, 201 sscar அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 31 0, காலி வீதி, கொழும்பு 03 தொலைபேசி 0711 210810. 033792


119



**பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

CPLP-0478 Toyota 2016 lorry அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொலைபேசி 0714 542958. 033791

122



**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

NW AAB-8029 Bajaj 2012 three wheel அதியுயர் விலைக்கு வெலிபெல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03 தொலைபேசி 0711 2108 1 0. 033793

### வேலைவாய்ப்பு

325



**தொழில்துறை** பொது

கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு பொதி செய்வதற்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு சம்பளம் 50, 000/ - முதல் 60,000/ வரை. 0779718 056, 0740065770, 074 1705817 033745

தேங்காய் பால் பொருட்கள் நிறுவனத்தின் பெக்கேஜிங் துறைக்கு ஆண் மற்றும் பெண் அவசரமாக தேவை. சம்பளம் 45,000/- 55, 000/- உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு. 0779718056, 074 006 5770, 074 1705817 033749

**Repeat Your ad For Better Offers**


## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம்

### (460 ஆம் அத்தியாயம்)

### 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக் கொண்டுள்ள கீழ்குறிப்பிடப்பட்டுள்ள காணிகளின் விபரங்கள் சம்பந்தமாக அச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் உரிமை மற்றும் நஷ்ட ஈட்டு பரீட்சைகள் 2023.06.08ஆந் திகதி பொல்பித்திகம பிரதேச சபை அலுவலகத்தில் என்னால் நடைபெறவுள்ளது என்பதை பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது. இக் காணிகளுக்கான உரித்துடையவர்கள் சமுகமளிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 2022.11.02 ஆம் திகதி 2304/42 இலக்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

| | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | குருநாகல் | | |
| பிரதேச செயலாளர் பிரிவு | பொல்பித்திகம | | |
| கிராம சேவகர் பிரிவு | 334 கம்புவடவன | | |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | 4-3/10/2019-MV/465-I DIVPP/LAND/LA/ACQUI/3-2/334/15 | | |
| வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல | முழு காணியின் விஸ்தீரணம் |
| இ.கி.வ இலக்கம் 3125 இல் பிற்சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 3 | கரகஸ்வெவ | 146, 148, 151, 153, 154, 155, 156, 158, 159, 160, 161, 164, 166, 167, 168, 169, 172, 173, 175, 176, 179, 180, 181, 183-190, 192-194, 196-204, 206, 207, 209, 211, 213, 214, 215, 217, 219, 221-224, 227, 228, 231, 232, 235 வரை | 3.6448 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3114 இல் பிற்சேர்க்கை இல 3, தாள் இலக்கம் 3 | கம்புவடவன | 466 | 0.0194 ஹெக்டயார் |
| இ.நி.வ இலக்கம் 11 இல் உள்வரைபட இல.2, தாள் இலக்கம் 3 | கல்கிரிய | 9,10,11 | 0.1026 ஹெக்டயார் |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | 4-3/10/2019-MV/465-J DIVPP/LAND/LA/ACQUI/3-2/334/15 | | |
| வரைபட இல. | கிராமத்தின் பெயர் | துண்டு இல | முழு காணியின் விஸ்தீரணம் |
| இ.கி.வ இலக்கம் 3116 இல் பிற்சேர்க்கை இல 1 தாள் இலக்கம் 2 | போரவெவ குருன்னேலேகம | 84-86, 89, 93, 94, 97-100,103-106, 109-113, 115, 116, 120-122 வரை | 1.9639 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3118 இல் பிற்சேர்க்கை இல 2 | வீரசங்கிலியாகம | 129,130,132 வரை | 0.0275 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3117 இல் பிற்சேர்க்கை இல 1,தாள் இலக்கம் 1 | நிப்புனகம | 20 | 0.0427 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3114 இல் பிற்சேர்க்கை இல 2, தாள் இலக்கம் 2 | கம்புவடவன | 366, 368, 369, 370, 371, 372, 374, 376, 377, 380, 381, 384-387, 389, 390, 392- 396, 398, 400-404, 406, 408-412, 414-423, 425, 426, 428, 429-441, 443-455, 457, 459-465 | 5.8556 ஹெக்டயார் |
| இ.கி.வ இலக்கம் 3119 இல் பிற்சேர்க்கை இல 3, தாள் இலக்கம் 3 | பலுகஸ்வெவ | 182, 183 | 0.0245 ஹெக்டயார் |
| காணி அமைச்சின் இலக்கம் எனது குறிப்பு இல | 4-3/10/2019-MV/463-C DIVPP/LND/LA/ACQUI/3-2/334/15 | | |
| இ.கி.வ இலக்கம் 3124 இல் பிற்சேர்க்கை இல 8,தாள் இலக்கம் 9 | பொரவெவ | 567, 568, 570, 573-575, 578, 579, 582, 583, 586, 591, 594, 597, 600, 602, 604, 607, 609-622, 625-631, 633, 634, 636-641, 643, 644, 646-649, 653-655 வரை | 4.5398 ஹெக்டயார் |

**பிரதேச செயலாளர், காரியாலயம், பொல்பித்திகம.**
**திகதி : 2023.06.01**

**டி.எம்.எஸ். தஸநாயக்க**
**பிரதேச செயலாளர்,**
**பொல்பித்திகம.**

## மேல் நீதிமன்றம் - கல்முனை

## கேள்வி அறிவித்தல்

கல்முனை மேல் நீதிமன்ற வலயத்திற்குட்பட்ட நீதிமன்ற வளாகங்களில் சுத்திகரிப்புப் பணிகளை மேற் கொள்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் தகுதி வாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

**தொகுதி 01**

01. மேல் நீதிமன்றம் கல்முனை
02. மாகாண மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம் கல்முனை
03. மாவட்ட நீதிமன்றம் கல்முனை
04. நீதவான் நீதிமன்றம் கல்முனை

**தொகுதி 02**

01. மாவட்ட நீதவான் நீதிமன்றம் அக்கரைப்பற்று
02. மாவடட நீதவான் நீதிமன்றம் பொத்துவில்
03. நீதவான் நீதிமன்றம் சம்மாந்துறை

எனவே சுத்திகரிப்புப் பணிகளை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக விபரங்களையும் கல்முனை மேல் நீதிமன்றக் கணக்குப் பிரிவில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா 1000/-யும் மீளளிக்கக் கூடிய வைப்பக ரூபா 2500/-யும் செலுத்தி 19.06.2023 திங்கட் கிழமை பி.ப. 12.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பங்கள் 19.06.2023 பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக் கொள்வதுடன் பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சுத்திகரிப்புப் பணிகளை மேற் கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

**மேல் நீதிமன்ற நீதிபதி**
**மேல் நீதிமன்றம்,**
**கல்முனை.**
**மேலதிக தொடர்புகளுக்கு: 067 2224984, 067 2225458**

## பிரசித்த ஏல விற்பனை

02ம், 03ம் நவம்பர் 2022, 01ம், 02ம் டிசம்பர் 2022, 03ம், 04ம் ஜனவரி 2023, 02ம், 03ம் பெப்ரவரி 2023 01ம், 02ம் மார்ச் 2023, 03ம், 04ம் ஏப்ரல் 2023, 03ம், 04ம் மே 2023 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீமானிக்கப்பட்டுள்ள தங்க நகைகளும் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| பொலன்னறுவை, நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, மெதிரிகிரிய, தெஹியத்தகண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குளியாபிட்டி, நாரம்மல, கலேவேலா, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டி, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, பண்டாரவளை, ஹட்டன, மஸ்கெலியா, தம்புள்ளை, கந்தலே, திகனா. | 23 ஜூன் 2023 |
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரணை, பண்டாரகம, மத்துகம, பதுரலியா, பலாங்கொடை, இரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவை, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டி, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை, பதுளை நகர கிளை, அம்பலாந்தோட்டை | 24 ஜூன் 2023 |
| புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளியா, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு14, கணேமுல்லா, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிடிய, சிலாபம், கொச்சிக்கடை, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, மீனுவங்கொட, கட்டுநாயக்க-அவிரிவத்த,வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, மாவனல்ல, கல்பிட்டிய, கெக்கிரவா, அனுராதபுரம் நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சியா, தம்புத்தேகம, நொச்சியாகம. | 26 ஜூன் 2023 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம, மஹரகம நகர கிளை, கொட்டாவ, அத்துருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொஹுவாலா, கிஜைம்பெட்டா வீதி கிளை, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொரளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரான்ட்பாஸ், கிரிபத்கொடை, தெல்கொடை,கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, அடிமை தீவு, கார்ப்பரேட் அலுவலகம் கொழும்பு 03, தலைமை அலுவலகம் கொழும்பு 07 | 27 ஜூன் 2023 |
| செங்கலடி, வாழைச்சேனை, மன்னார், சாவகச்சேரி, கிண்ணியா, திருகோணமலை, வவுனியா, கொக்கட்டிக்சோலை, ஆராயம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, மல்லாவி, வட்டுக்கோட்டை, சங்கனை, எறாவூ, வகாரை, மத்திய முகாம், சேருநுவர இகிரண், கோப்பாய், கொடிகமம், பரிதித்துறை, திருக்கோவில், திருகோணமலை நகர கிளை, பேசாலை. | 28 ஜூன் 2023 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

**LB FINANCE**

உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## இலங்கை வங்கி

### 1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.

02.07.2019ல் நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கி பணிப்பாளர் சபை விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு திரு.ஈ.டப்ளியூ.எஸ்.பீ. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 29.08.2011 திகதியிட்ட பிணை ஈட்டுமுறி இல.321, பிரசித்த நொத்தாரிசு திரு.ஈ.டப்ளியூ.எஸ்.பீ. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 18.11.2013 திகதியிட்ட ஈட்டுமுறி இல.799, பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 25.10.2016 திகதியிட்ட ஈட்டுமுறி இல.3612 ஆகியவற்றின் பேரில் பேராதனை, உடபேராதெனிய, இல.189/1 என்னும் முகவரியில் அமைந்த எஸ்.எஸ்.டீ. லங்கா பிரைவேற் லிமிட்டெற்றிடமிருந்து 31.05.2019 வரை முதல் மற்றும் வட்டி (1ஆவது வசதி)பதினொரு மில்லியன் எழுநூற்று அறுபத்தெட்டு ஆயிரத்து முந்நூற்று இருபது ரூபாய்களும் தொண்ணூற்றி ஆறு சதங்களும் (ரூபா.11,768,320.96) (2ஆவது வசதி) எண்ணூற்று தொண்ணூற்றி ஆறு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து ரூபாய்களும் எழுபத்தொன்பது சதங்களும் (ரூபா.896,955.79) அத்துடன் 1ஆவது வசதி பத்து மில்லியன் அறுநூற்று இருபத்து நான்கு ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து இரண்டு ரூபாய்களும் எட்டு சதங்களில் (ரூபா.10,624,942.08) ஆண்டுக்கு பதினாறு (16%) வீதத்திலும், 2ஆவது வசதி எண்ணூற்று எழுபத்தேழு ஆயிரத்து நாற்பத்தாறு ரூபாய்களும் முப்பத்தெட்டு சதங்களில் (ரூபா.877,046.38) ஆண்டுக்கு நான்கு (4%) வீதத்திலும் 01.06.2019 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை மேலும் வட்டியும் பேராதனை, உடபேராதெனிய, இல.189/1 என்னும் முகவரியில் அமைந்த எஸ்.எஸ்.டீ. லங்கா பிரைவேற் லிமிட்டெற்றிடமிருந்து வருமதியாகவுள்ளது.

2. பிரசித்த நொத்தாரிசு திரு.ஈ.டப்ளியூ.எஸ்.பீ. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 29.08.2011 திகதியிட்ட பிணை ஈட்டுமுறி இல.321, பிரசித்த நொத்தாரிசு திரு.ஈ.டப்ளியூ.எஸ்.பீ. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 18.11.2013 திகதியிட்ட ஈட்டுமுறி இல.799, பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஆர்.வீ. அந்தரவெவ அத்தாட்சிப்படுத்திய 25.10.2016 திகதியிட்ட ஈட்டுமுறி இல.3612 ஆகியவற்றின் பேரில் கடன் வசதி 1ன் மீது பதினொரு மில்லியன் எழுநூற்று அறுபத்தெட்டு ஆயிரத்து முந்நூற்று இருபது ரூபாய்களும் தொண்ணூற்றி ஆறு சதங்களும் (ரூபா.11,768,320.96), கடன் வசதி 2ன் மீது எண்ணூற்றுத் தொண்ணூற்றி ஆறு ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தைந்து ரூபாய்களும் எழுபத்தொன்பது சதங்களும் (ரூபா.896,955.79) அத்துடன் 01.06.2019 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 26ம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ம் பிரிவு (397ம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு.துசித்த கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 21ம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கண்டி மேற்தரக்கிளை பிரதான முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

மத்திய மாகாணம் கண்டி மாவட்டம் ஹாரிஸ்பத்துவில் குலகம்மனசியபத்து ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகம் மற்றும் பிதேசசபை எல்லைகளில் பல்லேமுல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் ஹல்லொலுவ உடகமயில் அமைந்த பின்னலந்தவத்த என அழைக்கும் காணியிலிருந்து கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இல.P8064ல் அறிக்கையிடப்பட்ட, அல்லது தொடுக்கப்பட்டதும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே.எம்.எச்.நவரத்ன தயாரித்த 20.06.1976 திகதியிட்ட வரைபடம் இல.1886Pல் விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடக்கில் துண்டு 7Aம், கிழக்கில் கட்டாரங்கல தேவாலயக் காணியும், தெற்கில் துண்டு 3Aம், மேற்கில் ஹல்லொளுவ கட்டுகஸ்தோட்டைப் பாதையும் எல்லைகளாகக் கொண்டு பதினைந்து பேர்ச்சுகள் (ஏ0.ரூ0.பே15) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் T31/23ல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட காணி அண்மையில் பின்வருமாறு மீளளவை செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட ஹல்லொலுவயில் அமைந்த பின்னலந்தேவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஆர்.பீ.மொரகனே தயாரித்த 19.01.2001 திகதியிட்ட வரைபடம் இல. 722ல் விபரித்த பிரிக்கப்பட்ட எல்லை நிர்ணயித்த காணித்துண்டு வடகிழக்கில் நடைபாதையும் அஸ்கிரி தேவாலய காணியும், தென்கிழக்கில் கட்டாரங்கல தேவாலயக் காணியும், தென்மேற்கில் ஜயந்த கருணாரத்னவின் காணியும், வடமேற்கில் ஹல்லொளுவ கட்டுகஸ்தோட்டைப் பாதையும் எல்லைகளாகக் கொண்டு பதின்மூன்று தசம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0.ரூ0.பே13.6) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மண், மரங்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.
டி.எம்.டி.என்.ஜயதிலக
பிரதான முகாமையாளர்
இலங்கை வங்கி
மேற்தரக்கிளை, கண்டி

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## பொருட்கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N - 12

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இருப்பு வைத்திருப்பவர்கள் அல்லது ஆர்டர் செய்த 45 நாட்களுக்குள் பொருட்களை வழங்கக் கூடியவர்கள் விலை மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

1) **குறிப்பு எண்** :- SI/LP/WPP/22.5/70/2023/06
**பொருட்கள்** :- White Printing Paper 22.5" 70gsm ± 2.5% - 100MT ±10% **விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்** : 2023/06/27 - பி.ப 2.00 மணி. **மீளளிக்கப்படாத கட்டணம்** : ரூபா 13,000.00

2) **குறிப்பு எண்** :- SI/LP/WPP/19/70/2023/07
**பொருட்கள்** :- White Printing Paper - 19" - 70gsm ± 2.5% - 25MT ± 10% **விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்** : 2023/06/27 பி.ப. 2.00 மணி. **மீளளிக்கப்படாத கட்டணம்** : ரூபா 6,500.00

3) **குறிப்பு எண்** :- SI/LP/WPP/21/60/2023/08
**பொருட்கள்** :- White Printing Paper - 21" - 60gsm ± 2.5% - 100MT ±10% **விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்** : 2023/06/27 **மீளளிக்கப்படாத கட்டணம்** : ரூபா 13,250.00

4) **குறிப்பு எண்** :- SI/LP/WPP/28/60/2023/09
**பொருட்கள்** :- White Printing Paper - 28" - 60gsm ± 2.5% - 50MT ±10% **விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதி தினம்** : 2023/06/27 - பி.ப.2.00 மணி. **மீளளிக்கப்படாத கட்டணம்** : ரூபா 4,700.00

2023/06/27 ஆந் திகதி பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கோரல் முடிவுறும் அவ்வேளையிலேயே மனுக்கள் திறந்து வைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வெளிநாட்டு வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு மனு தொடர்பிலும் மீளளிக்கப்படாத மேற்குறிப்பிட்ட கட்டணம் செலுத்தப்படல் வேண்டுமெனவும் அவை தொடர்பான எழுத்து மூலமான கடிதம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்துக்கு முந்திய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னதாக விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலதிக விபரங்களிற்கு வேலை நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.15 மணி வரை வெளிநாட்டு வழங்கல் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பொருட் கொள்வனவுத் தலைவர்**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு - 08.**
**தொலைபேசி/∴பெக்ஸ் :- 011-2694172 / 011-2694898**
**இணையத்தளம் :- www.documents.gov.lk**
2023/05/31

# கிளிநொச்சியில் நீச்சல் பயிற்சி



**கிளிநொச்சி குறூப் நிருபர்**

கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆரம்ப நீச்சல் பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியை சேர்ந்த எட்டு பாடசாலைகளின் 100 மாணவர்களுக்கு ஆறு நாள் நீச்சல் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் முழுமையாக பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி றோட்ரிக்கோ விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தில் கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகத்தினால் இந்த நீச்சல் பயிற்சி அளிக்கப்பட்டது.

# ஊக்கமருந்து சோதனையில் சிக்கினார் நிலானி ரத்நாயக்க

ஊக்கமருந்து சோதனையில் தோல்வி அடைந்துள்ள இலங்கையின் தடைதாண்டி ஓட்ட வீராங்கனை நிலானி ரத்நாயக்க போட்டித் தடைக்கு முகம்கொடுக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதன்படி நிலானி பங்கேற்ற ஊக்கமருந்து சோதனையில் அவரது உடலில் சர்வதேச ஊக்கமருந்து தடுப்பு நிறுவனத்தால் தடை செய்யப்பட்ட கூறு ஒன்று இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அவருக்கு நான்கு ஆண்டுகள் வரை தடை விதிக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில்



நடைபெற்ற இராணுவ மெய்வல்லுனர் போட்டியில் பெண்களுக்கான 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் பங்கேற்ற நிலையிலேயே நிலானி ஊக்கமருந்து சோதனையில் சிக்கியுள்ளார்.

எதிர்வரும் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கையின் பதக்க எதிர்பார்ப்பை கொண்டவராக நிலானி உள்ளார். எனினும் தாம் தெரிந்தே அந்த தடை செய்யப்பட்ட ஊக்கமருந்தை பயன்படுத்தவில்லை என்றும் இது தொடர்பிலான விசாரணைக்கு முகம்கொடுக்க தயாராக இருப்பதாகவும் நிலானி குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைக்கு இரு தங்கம்




தென் கொரியாவில் நடைபெற்றுவரும் ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் இலங்கை நேற்று (05) இரு தங்கப் பதக்கங்களை வென்றது.

பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் தருஷி கருணாரத்ன 2.05.63 நிமிடங்களில் போட்டித் தூரத்தை முடித்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். அதேபோன்று 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியிலும் இலங்கை தங்கம் வென்றுள்ளது.

அதேபோன்று ஆடவருக்கான முப்பாய்ச்சல் போட்டியில் யசிரு மலித இலங்கைக்கு வெண்கலப்பதக்கத்தை வென்றுகொடுத்தார். இதன்படி இலங்கை இரண்டு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் இரு வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் 4ஆவது இடத்தில் உள்ளது.

# மெஸ்ஸி சவூதி கழகத்தில் ஒப்பந்தமாவதற்கு வாய்ப்பு



லயனல் மெஸ்ஸியும் பிரான்ஸின் கரிம் பென்சிமாவும் சவூதி அரேபியக் கால்பந்து அணிகளில் சேரவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அல் ஹிலால் அணியைச் சேர்ந்த மூத்த அதிகாரிகள் 35 வயது மெஸ்ஸியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள பிரான்ஸ் சென்றுள்ளனர்.

அவர்கள் மெஸ்ஸியின் தந்தையையும் நிர்வாகியையும் சந்திக்கத் திட்டமிட்டிருப்பதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பிரான்ஸின் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணியுடனான மெஸ்ஸியின் கடைசி ஆட்டம் கடந்த சனிக்கிழமை (3 ஜூன்) நடைபெற்றது.

இதற்கிடையே பிரபல கால்பந்து வீரர் கரிம் பென்சிமா ரியல் மெட்ரிட் அணியிலிருந்து வெளியேறுவது உறுதியாகியுள்ளது. அவரும் சவூதியின் இல் இத்திஹாத் அணியுடன் ஒப்பந்தம் செய்திருப்பதாக அந்நாட்டு ஊடகம் தெரிவித்தது.

கடந்த ஆண்டு கிறிஸ்டியானோ ரொனால்டோ சவுதியின் அல் நாசர் அணியுடன் ஒப்பந்தம் செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆப்கான் அணிக்கு அபராதம்



இலங்கைக்கு எதிராக ஹம்பாந்தோட்டையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) நடைபெற்ற இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியில் குறிப்பிட்ட நேரத்திற்குள் ஓவர்களை வீசத் தவறிய ஆப்கானிஸ்தான் அணிக்கு தமது போட்டிக் கட்டணத்தில் 20 வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நேரத்தில் ஆப்கான் அணி ஒரு ஓவர் தாமதித்தது உறுதி செய்யப்பட்டதை அடுத்து சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் போட்டி மத்தியஸ்தர் ரஞ்சன் மடுகல்ல இந்த அபராதத்தை விதித்துள்ளார்.

ஆப்கான் அணித் தலைவர் ஹஷ்மதுல்லா தவறை ஒப்புக்கொண்டிருப்பதோடு குறித்த அபராதத்தை செலுத்த இணங்கியுள்ளார்.

இந்தப் போட்டியில் அப்கானிஸ்தான் அணி 132 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடர் 1–1 என சமநிலை பெற்றுள்ளது.

இந்நிலையில் தொடரை தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டி நாளை (07) அதே ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# இப்ராஹிமோவிக் ஓய்வு



ஏசி மிலான் கழகத்தின் சுவீடன் நாட்டு முன்கள வீரர் ஸ்லாடன் இப்ராஹிமோவிக் கால்பந்து போட்டிகளில் இருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.

மிலான் அணியுடனான ஒப்பந்தம் ஜூன் மாத நிறைவோடு காலவதியான நிலையிலேயே அவர் தனது ஓய்வை வெளியிட்டுள்ளார். "நான் உங்களிடம் இருந்தன்றி கால்பந்துக்கு விடைகொடுக்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

தனது 24 வருட கால்பந்து வாழ்வில் இப்ராஹிமோவிக் ஒன்பது கழகங்களுக்கு விளையாடி இருப்பதோடு தமது நாடு மற்றும் கழகங்களுக்காக மொத்தம் 561 கோல்களை புகுத்தியுள்ளார்.

சுவீடன் அணிக்காக அதிக கோல்களை பெற்றவர் என சாதனை படைத்திருக்கும் 41 வயதான அவர் அந்த அணிக்கு 121 சர்வதேச போட்டிகளில் 62 கோல்களை புகுத்தியுள்ளார்.

2016 யூரோ தொடருக்குப் பின்னர் சர்வதேச கால்பந்தில் இருந்து இப்ராஹிமோவிக் ஓய்வுபெற்றபோதும் 2021இல் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளுக்காக சுவீடன் அணிக்கு திரும்பினார். எனினும் அந்த அணி உலகக் கிண்ணத்திற்கு தகுதி பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

4 குழந்தைகளின் மரணம்

# 20 ஆண்டு சிறை இருந்த தாய்க்கு பொது மன்னிப்பு

அவுஸ்திரேலியாவின் மிக மோசமான பெண் தொடர் கொலையாளி என அழைக்கப்பட்ட பெண் ஒருவர் அவரது நான்கு குழந்தைகளையும் கொல்லவில்லை என்பதை உறுதி செய்யும் புதிய ஆதாரங்கள் வெளியானதை அடுத்து பொது மன்னிப்புப் பெற்றுள்ளார்.

ஒரு தசாப்த காலத்தில் தனது நான்கு குழந்தைகளை கொன்றதாக குற்றங்காணப்பட்ட கத்லீன் பெல்பிக் என்ற பெண் கடந்த 20 ஆண்டுகள் சிறை அனுபவித்து வந்தார்.

எனினும் அந்தக் குழந்தைகள் இயற்கையாக இறந்திருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுவதாக அண்மைய விசாரணை தெரிவித்துள்ளது.

இந்நிலையில் 55 வயதான அந்தப் பெண்ணின் வழக்கு, அவுஸ்திரேலியாவில் மிகப்பெரிய நீதி தவறிய சம்பவமாக பதிவாகியுள்ளது.

பெல்பிக் தான் நிரபராதி என தொடர்ந்து கூறிவந்தபோதும், அவ



ருக்கு 2003ஆம் ஆண்டு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1989 மற்றும் 1999க்கு இடையே அவரது ஒவ்வொரு குழந்தையும் 19 நாட்கள் தொடக்கம் 19 மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் திடீரென மரணித்துள்ளனர். இவர்களின் மரணத்திற்கு மரபணு மாற்றமே காரணம் என்று புதிய ஆய்வு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் பெல்பிக்கு முழுமையான பொது மன்னிப்பு அளிக்கும் ஆவணத்தில் கைச்சாத்திட்டுள்ள நியூ சவுத் வேல்ஸ் ஆளுநர், அவரை சிறையில் இருந்து உடன் விடுவிக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

# ஆப்கானில் தொல்பொருட்களை கடத்த முயன்றவர்கள் சிக்கினர்

ஆப்கானிஸ்தான், பாமியன் புத்தர் சிலைகள் உள்ள பகுதியின் 12 தொல்பொருட்களையும் குறிப்பிட்ட மண் வகையையும் வெளிநாட்டு பிரஜைகள் எடுத்துச்செல்ல மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

பாமியன் விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது வெளிநாட்டு பிரஜைகளிடமிருந்து இப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக தலிபான்கள் தலைமையிலான அரசின் தகவல் மற்றும் கலாசார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானிலும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் பழங்காலப் பொருட்களின் வர்த்தகம் இரகசியமான முறையில் இடம்பெறுவதை வெளிநாட்டு பிரஜைகளிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டுள்ள பொருட்கள் எடுத்துக்காட்டுவதாக காமா செய்தி ஸ்தாபனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# சவூதியின் உற்பத்திக் குறைப்பால் சர்வதேச எண்ணெய் விலை ஏற்றம்

குறைவடைந்து வரும் எண்ணெய் விலையை உயர்த்தும் நடவடிக்கையாக எண்ணெய் உற்பத்தியை தொடர்ந்து குறைப்பதற்கு எண்ணெய் உற்பத்தி நாடுகள் இணங்கியுள்ளன.

எதிர்வரும் ஜூலையில் நாளுக்கு ஒரு மில்லியன் பீப்பாய்களை குறைப்பதாக சவூதி அரேபியா அறிவித்திருப்பதோடு 2024 இல் இருந்து நாளொன்றுக்கு மேலும் 1.4 மில்லியன் பீப்பாய்களை குறைக்க இலக்கு வைத்திருப்பதாக ஒபெக் பிளஸ் நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

உலக மசகு எண்ணெய் உற்பத்தியில் ஒபெக் பிளஸ் நாடுகள் 40 வீதத்தை பெற்றிருக்கும் நிலையில் அதன் முடிவுகள் எண்ணெய் விலையில் பெரும் தாக்கத்தை செலுத்துவதாக உள்ளது.

ஆசிய வர்த்தகத்தில் நேற்று (06) பிரெண்ட் மசகு எண்ணெய் 2.4 வீதம் அதிகரித்து பீப்பாய் ஒன்று 77 டொலர்களாக பதிவானது.

ரஷ்யா தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (04) ஏழு மணி நேரம் நீடித்த ஒபெக் பிளஸ் கூட்டத்தில், எண்ணெய் விலை வீழ்ச்சி அடைந்திருப்பதற்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

2022 ஒக்டோபர் தொடக்கம் ஒபெக் பிளஸ் முன்னெடுத்துள்ள



மொத்த உற்பத்திக் குறைப்புகள் நாளொன்றுக்கு 3.66 மில்லியன் பீப்பாய்களை தொட்டிருப்பதாக ரஷ்ய பிரதமர் அலெக்சான்டர் நொவக் தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு மற்றும் அதன் கூட்டணியை உள்ளடக்கி இருக்கும் ஒபெக் பிளஸ் அமைப்பு, உலகளாவிய தேவையில் சுமார் 2 வீதமான நாளுக்கு இரண்டு மில்லியன் பீப்பாய்களை குறைக்க ஏற்கனவே இணங்கியுள்ளது.

"இந்த பேச்சுவார்த்தை மூலம் 2024 இறுதி வரை இந்த ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது" என்று நொவக் தெரிவித்தார்.

கடந்த மே மாதத்தில் அமுலுக்கு வரும் வகையில் கடந்த ஏப்ரலிலும் எதிர்பாராத வகையில் நாளுக்கு 1.6 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்திக் குறைப்புக்கு இணக்கம் எட்டப்பட்டது. அந்த முடிவு எண்ணெய் விலையை அதிகரித்த போதும் நிரந்தரமான மீட்சி ஒன்றை கொண்டுவரத் தவறியது.

இந்த ஒரு மில்லியன் பீப்பாய் குறைப்பானது தேவையெனில் ஜூலை மாதத்தைத் தாண்டியும் நீடிக்கப்படும் என்று சவூதி வலுசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல் லஸிஸ் பின் சல்மான் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்புக்கு மத்தியில் எண்ணெய் உற்பத்திகள், விலை வீழ்ச்சி மற்றும் அதிக சந்தை ஏற்ற இறக்கத்தை எதிர்கொண்டுள்ளது.

ஒபெக் அமைப்பு அதிக வலுசக்தி செலவுகள் ஊடாக உலக பொருளாதாரத்தை குறைமதிப்புக்கு உட்படுத்துவதாகவும் விலைகளை கையாள்வதாகவும் மேற்கத்திய உலகம் குற்றம்சாட்டுகிறது. உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு தொடர்பில் ரஷ்யா மீதான தடைகளை அந்த அமைப்பு பொருட்படுத்துவதில்லை என்றும் குற்றம்சாட்டுகிறது.

எனினும் கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலான காலத்தில் மேற்கத்திய நிதிக் கொள்கை பணவீக்கத்திற்கு இட்டுச் சென்றிருப்பதோடு அது எண்ணெய் உற்பத்தி நாடுகள் தமது பிரதான ஏற்றுமதியின் பெறுமதியை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க தூண்டி இருப்பதாக ஒபெக் தரப்பு பதலளித்துள்ளது.

# சவூதி நாட்டில் ஈரானிய தூதரகம் இன்று திறப்பு

கடந்த ஏழு ஆண்டுகளாக மூடப்பட்டிருந்த சவூதி அரேபியாவில் உள்ள ஈரானிய தூதரகம் இன்று திறக்கப்படவுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

சீனாவின் மத்தியஸ்தத்தில் கடந்த மார்ச் மாதம் ஈரான் மற்றும் சவூதி இடையிலான இராஜதந்திர உறவை மீண்டும் ஆரம்பிக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.



இந்நிலையில் சவூதி நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டிருந்த ஈரானிய இராஜதந்திரிகள் அலிரேசா எனாயதி தலைமையில் மீண்டும் சவூதிக்கு திரும்பவுள்ளனர். எனாயத்தி முன்னர் குவைட்டுக்கான ஈரானிய தூதுவராக செயற்பட்டவராவார். "புதிதாக நியமிக்கப்பட்ட ஈரானிய தூதுவரின் பங்கேற்புடன் ஈரானிய தூதரகம் செவ்வாய்க்கிழமை (06) உள்ளூர் நேரப்படி பி.ப. 6.00 மணிக்கு திறக்கப்படவுள்ளது" என்று ரீயாதிலுள்ள சவூதி இராஜுதந்திர தரப்பினரை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்தி வெளியிட்டுள்ளது.

எனினும் ஈரானில் உள்ள சவூதி தூதரகத்தை திறக்கும் திகதியை சவூதி இன்னும் உறுதி செய்யவில்லை.

# விஷத் தாக்குதலில் ஆப்கானில் 80 சிறுமிகள் மருத்துவமனையில்

ஆப்கானிஸ்தானின் சர்ஏபுல் மாகாணத்தில் உள்ள இரண்டு பாடசாலைகளில் விஷத் தாக்குதல் நடத்தப்பட்டதில் 80 சிறுமிகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் முதல் 6ஆம் வகுப்பு படிக்கும் சிறுமிகளே பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 80 சிறுமிகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். சிகிச்சைக்கு பின்னர் அவர்களின் உடல்நலம் நன்றாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தத் தாக்குதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதல்கட்ட விசாரணையில், யாரோ ஒருவர் தனிப்பட்ட விரோதம் காரணமாக வேறொருவருக்கு பணம் கொடுத்து, இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிகிறது என்று கூறப்பட்டுள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பின்னர், முதல்முறையாக இதுபோன்ற விஷத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அந்நாட்டில் 6ஆம் வகுப்புக்கு மேல் பெண்கள் கல்வி கற்கவும், வேலைக்குச் செல்லவும் தலிபான்கள் தடை விதித்துள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜூன் மாதம் 6ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.